TRC

# ஆண்டறிக்கை 2013

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

# 2013 திசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் (TRCSL) உள்ளடக்கமும் பதவியணியும்.

**ஆணைக்குழு**

திரு. லலித் வீரத்துங்க
தலைவர்

திரு. அநூஷ பல்பிட
அங்கத்தவர்

திரு. எஸ்.எஸ். சஹபந்து
அங்கத்தவர்

திரு. பிரசன்ன டி சில்வா
அங்கத்தவர்

**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் (TRCSL) பிரதான பதவியணி**

திரு. அனுசா பெல்பிட
பணிப்பாளர் நாயகம்

**ஆணைக்குழுவின் அலுவலகம்**

திருமதி ஆர்.எஸ். குணரத்ன
ஆணைக்குழுவின் செயலாளர

**நிருவாக மற்றும் நிறுவன அலுவல்கள், பொருளாதாரம் மற்றும் சட்ட அலுவல்கள்**

திரு. யு.எச்.சி. பிரியந்த
பிரதிப் பணிப்பாளர் நாயகம், நிருவாக மற்றும் நிறுவன அலுவல்கள்
-பதில் பிரதிப் பணிப்பாளர் நாயகம், பொருளாதார மற்றும் சட்ட அலுவல்கள்

**நிருவாக மற்றும் நிறுவன அலுவல்கள் பிரிவு**

திரு. ஈ. எல். கே. திசாநாயக
பிரதிப் பணிப்பாளர்

திரு. டப்.எல்.ஏ.கே.ஏ. குணதிலக
உதவிப் பணிப்பாளர்

**நிதிப் பிரிவு**

திரு எம்.கே. ஜயந்த
பணிப்பாளர்

திரு ஆர்.பி. அபயதீர
பிரதிப் பணிப்பாளர்

திரு ஏ.எஸ். ஹபுஆரச்சி
பிரதிப் பணிப்பாளர்

**இணக்கப்பாட்டுப் பிரிவு**

திருமதி ஆர்.எம்.டி.கே.பி. லிவேரா
பிரதிப் பணிப்பாளர்

திருமதி எச்.பி.எச்.எம். பதிரண
பிரதிப் பணிப்பாளர்

**போட்டித்தன்மைப் பிரிவு**

திரு. எச்.டப்.கே. இந்திரஜித்
பிரதிப் பணிப்பாளர்

திரு. நிசாந்த பலிஹவடன
பிரதிப் பணிப்பாளர்

திருமதி சிரியாணி மாவல்லகே
பிரதிப் பணிப்பாளர்

**சட்டப் பிரிவு**

திருமதி ஜீ.சி.பி. மொரகொட
பிரதிப் பணிப்பாளர்

திருமதி ஆர்.ஏ.சி. குணரத்ன
பிரதிப் பணிப்பாளர்

திருமதி எல்.எஸ்.பீ. ரொட்ரிகோ
உதவிப் பணிப்பாளர

திரு ஐ.என். மெதிவ்
உதவிப் பணிப்பாளர

**அலைக்கற்றை முகாமைப் பிரிவு**

திரு. எச்.பி. கருணாரத்ன
பணிப்பாளர

திரு. எல். கணேசமூர்த்தி
பிரதிப் பணிப்பாளர்

திரு ஈ.ரி.என்.பி.கே. ரத்னபால
பிரதிப் பணிப்பாளர்

திரு. எம்.சி. எம். பாரூக்
பிரதிப் பணிப்பாளர்

திரு. ஜே.ஏ.எஸ். குணானந்த
பிரதிப் பணிப்பாளர்

திருமதி எஸ்.ஏ.ஆர். கமலநயனா
உதவிப் பணிப்பாளர்

எம்.பீ. குணசிங்ஹ
உதவிப் பணிப்பாளர்

**வலையமைப்புப் பிரிவு**

திரு. ஆர்.ஜி.எச்.கே. ரணதுங்க
பணிப்பாளர்

திருமதி. கே.எஸ்.எம். விசாகா
பிரதிப் பணிப்பாளர்

திரு. ஐ.எம். ஜவுசி
உதவிப் பணிப்பாளர்

திரு. எஸ்.ஈ. வாகிஸ்ட
உதவிப் பணிப்பாளர்

**கொள்கைகள், சர்வதேச தொடர்புகள் மற்றும் அனுமதிப்பத்திர நிருவாகப் பிரிவு**

திரு. எம்.கே. ஜயசேகர
பணிப்பாளர்

திரு. ஆர்.எம்.ஜே.கே.பி. ரத்னாயக்க
பிரதிப் பணிப்பாளர்

**செயற்திட்ட மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு**

திரு. டப்ளியு.டி. டி அல்விஸ்
பணிப்பாளர்

**உள்ளக கணக்காய்வுப் பிரிவு**

திருமதி யு.ஏ. சமரதுங்க
பிரதான உள்ளக கணக்காய்வாளர்

# உள்ளடக்கம்


அத்தியாம் 1
9 தொலைத் தொடர்புகள் துறை
சுருக்க அறிமுகம்

17 அத்தியாம் 2
இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல்
ஆணைக்குழு தோற்றம் தொலைநோக்கு, பணிக் கூற்று, குறிக்கோள்கள்
மற்றும் பொறுப்புக்கள்

அத்தியாம் 3
23 அலைக்கற்றை முகாமைப் பிரிவு

அத்தியாம் 4
29 கொள்கைகள் மற்றும் சர்வதேச உறவுகள் மற்றும் அனுமதிப்பத்திர
நிருவாகப் பிரிவு

அத்தியாம் 5
38 வலையமைப்புப் பிரிவு

அத்தியாம் 6
42 செயற்திட்ட மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

அத்தியாம் 7
45 தேசிய புரோட்பேண்ட் முன்னெடுப்பு

அத்தியாம் 8
47 போட்டித்தன்மைப் பிரிவு

அத்தியாம் 9
52 இணக்கப்பாட்டுப் பிரிவு

அத்தியாம் 10
56 சட்டப் பிரிவு

அத்தியாம் 11
58 நிருவாக மற்றும் நிறுவன அலுவல்கள் பிரிவு

அத்தியாம் 12
75 உள்ளக கணக்காய்வு பிரிவு

அத்தியாம் 13
77 நிதிப் பிரிவு

# அட்டவணைகள்


அட்டவணை 1.1 தொலைத் தொடர்புகள் முறைமை அனுமதிப் பத்திரங்களைப் பெற்ற கம்பனிகள் - 2013 9

அட்டவணை 1.2 வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை, வருடாந்த வளர்ச்சி வீதம் மற்றும் தொலைபேசி பரவல் சதவீதம் 2000 - 2013 10

அட்டவணை 1.3 அழைப்புக் காலம், 2011 - 2013 (மில்லியன் நிமிடங்கள்) 13

அட்டவணை 1.4 இணைய மற்றும் மின் அஞ்சல் பாவனையாளர் வளர்ச்சி, 2004 - 2013 14

அட்டவணை 1.5 தொலைபேசி மற்றும் தொலைத்தொடர்புகள் வலையமைப்பு தொடர்பாக கிடைத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (மாற்றமடையக் கூடியது) 15

அட்டவணை 3.1 விநியோகிக்கப்பட்ட மொத்த அதிர்வெண்களின் எண்ணிக்கை 2012 -2013 25

அட்டவணை 3.2 அலைக்கற்றைகள் பயன்படுத்துகின்றவர்களுக்கு விநியோகிக்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை 2012- 2013 25

அட்டவணை 3.3 கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் 2012- 2013 25

அட்டவணை 3.4 அடையாளங் காணப்பட்ட முறைகோடகாப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை மற்றும் மேற்கொள்ளப்பட்ட தீர்வுகள் 2012- 2013 26

அட்டவணை 3.5 விநியோகிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை 2012- 2013 26

அட்டவணை 4.1 பங்களிப்பு நிதிக் கொடுப்பனவுகள் - 2013 36

அட்டவணை 5.1 வலையமைப்பு தொடர்பிலான புள்ள விபரங்கள் 2012 - 2013 39

அட்டவணை 5.2 ஒதுக்கப்பட்ட சுருக்க குறியீட்டு இல. 2013 41

அட்டவணை 8.1 தொலைபேசிச் சேவை வழங்குநர்களால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள், 2012 -2013 49

அட்டவணை 8.2 நிலையான மற்றும் கையடக்க தொலைபேசிச் சேவை வழங்குநர் கம்பனிகளின் வருமானம் 2012 - 2013 49

அட்டவணை 8.3 நிலையான மற்றும் கையடக்க தொலைபேசிக் கைத்தொழிலின் நிகர இலாபம் - நட்டம், 2012 - 2013 50

அட்டவணை 11.1 இ.தொ.ஒ.ஆணைக்குழுவின் பதவியணிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் - புலைமைப் பரிசில்கள் - கருத்தரங்குகளுக்கு பங்குபற்றல். 62

அட்டவணை 11.2 சஞ்சிகைக்கான பங்களிப்பு நிதி, 2013 72

அட்டவணை 11.3 நூல் நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்குகள் - பயிற்சிப் பட்டறைகள், 2013 73

அட்டவணை 12.1 உள்ளக கணக்காய்வு அறிக்கை, 2013 76

அட்டவணை 13.1 ஆணைக்குழுவின் வருமானம், 2012 - 2013 78

அட்டவணை 13.2 வெளிநாட்டு தொலைத்தொடர்பு அறிக்கை (ரூ. 000), 2012 -2013 79

அட்டவணை 13.3 சர்வதேச தொலைத்தொடர்புகள் செயற்படுத்துனர் வரி (ரூ. 000) 2012 - 2013 79

# வரைபடங்கள்


11 வரைபு 1.1
வாடிக்கையாளர்களின் வளர்ச்சி 2012 - 2013

12 வரைபு 1.2
வருடாந்த வாடிக்கையாளர்களின் வளர்ச்சிச் சதவீதம், 2012 - 2013

12 வரைபு 1.3
தொலைபேசி பரவல் சதவீதம், 2000 - 2013

14 வரைபு 1.4
இணையதள மற்றும் மின் அஞ்சல் வாடிக்கையாளர் பங்களிப்பு, 2012 - 2013

50 வரைபு 8.1
மொத்த வருமானம் தொடர்பாக பங்களிப்புச் சதவீதம், 2012 - 2013

51 வரைபு 8.2
தொலைபேசி செயற்படுத்துனர் கம்பனிகளின் நிகர இலாபம் - நட்டம், 2012- 2013

54 வரைபு 9.1
வாடிக்கையாளர் முறைப்பாடுகளை தீர்த்து வைக்கும் செற்பாடு

# குறுஞ் சொற்தொகுதி

**நிஅபபி** - நிருவாக மற்றும் அலுவலக பணிப் பிரிவு
**உப** - செயற்பாட்டு வழிகாட்டல் - உதவிப் பணிப்பாளர்
**சஎவாமா** - சமச்சீர் எண்ணியல் வாடிக்கையாளர் மார்க்கம்
**வபொகூ** - வருடாந்த பொதுக் கூட்டம்
**ஆபதொச** - ஆசிய பசுபிக் தொலைத்தொடர்புச் சமுகம்
**முச** - முதலீட்டுச் சபை
**அநிசெஅகு** - அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட செயற்திட்டங்கள் அமுல்படுத்தும் குழு
**சுகுபபி** - சுருக்க குறியீட்டு பல்வழி பிரவேசம்
**சீதேஇஏஇகூ** - சீன தேசிய இலத்திரனியல் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கூட்டுத்தாபனம்
**குபுபி** - குற்றப் புலனாய்வுப் பிரிவு
**சாமுக** - சான்றுப்படுத்திய முகாமைக் கணக்காளர்
**கொநச** - கொழும்பு நகர சபை
**பொநநா** - பொது நலவாய நாடுகளின் தொலைத்தொடர்புகள் சங்கம்
**பநா** - பணிப்பாளர் நாயகம்
**முசேதி** - முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம்
**தபாமு** - தரவுப் பாதுகாப்பு முகாமையாளர்
**சுபாவ** - சுற்றாடல் பாதுகாப்பு வரி
**பூஒமேதச** - பூகோள ஒளிபரப்புக்கான மேம்படுத்தப்பட்ட தரவுச் சதவீதம்
**வெநேமு** - வெளிநாட்டு நேரடி முதலீடு
**வீஇ** - வீட்டுத்துறைக்கான இணைப்புக்கள்
**மொதேஉ** - மொத்த தேசிய உற்பத்தி
**கிஹே** - கிகா ஹேட்ஸ்
**4 சநீவ** - 4ஆவது சந்ததியின் நீண்ட கால வளர்ச்சி
**பூஇபாமு** - பூகோள சமுத்திர இடர் பாதுகாப்பு முறைமை
**பொவாசே** - பொது பொதி வானொலிச் சேவை
**மஉஆ** - மனித உரிமை ஆணைக்குழு
**மவஅ** - மனித வள அபிவிருத்தி
**உபொபி** - உயர் வேக பொதி பிரவேசம்
**ததொதொ** - தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்
**தொபிநி** - தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப பிரதிநிதித்துவ நிறுவனம்
**சசச** - சர்வதேச சமுத்திர சங்கம்
**ஒசேஎஅஒ** - ஒருங்கிணைக்கப்பட்ட சேவை எண்ணியல் அடிப்படை ஒளிபரப்பு
**ஒசேஎஅஒ-தே** - ஒருங்கிணைக்கப்பட்ட சேவை எண்ணியல் அடிப்படை ஒளிபரப்பு - தேசிய
**சதொசெ** - சர்வதேச தொலைத்தொடர்பு செயற்படுத்துனர்கள்
**சதொச** - சர்வதேச தொலைத்தொடர்புச் சங்கம்
**யசஒமு** - யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவரகம்
**கொதொதொ** - கொரிய தகவல் தொழில்நுட்ப தொண்டர்கள்
**கஅ** - கல்வி அமைச்சு
**கைமநி** - கையடக்க மற்றும் நிலையான வாடிக்கையாளர் வரி
**தேஅஇசேசெ** - தேசிய அதி வேக இணையதள சேவைச் செயற்திட்டம்
**சதசபி** - சர்வதேச தகவல் சமுக பிரதிநிதித்துவ நிறுவனம்
**தேதொமுநி** - தேசிய தொழில்முயற்சி முகாமைத்துவ நிறுவனம்
**தேவிம** - தேசிய விஞ்ஞான மன்றம்
**உபோசெ** - உழைக்கும் போது செலுத்துதல்
**தககொஏகு** - தனியார் கணனி – கொள்வனவு ஏற்பாட்டுக் குழு
**செஆகு** - செயற்திட்ட ஆலோசனைக் குழு
**கொ சதொ& அநிபி** - கொள்கைகள், சர்வதேசத் தொடர்புகள் மற்றும் அனுமதிப்பத்திர நிருவாகப் பிரிவு
**பொஸ்தொவ** - பொது ஸ்விச் தொலைபேசி வலையமைப்பு
**சேநி** - சேவை நிலைமை
**மீகொஉ** - மீள் கொள்வனவு உடன்படிக்கை
**வாஅ** - வானொலி அலைவரிசைகள்
**வாதொபஉ** - வானொலி மற்றும் தொலைத்தொடர்பு பரிமாற்ற உபகரணம்

**பிஒதெஆச** - பிராந்திய ஒத்துழைப்புக்கான தென் ஆசிய சங்கம்

**உவதொமா** - உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான தென் ஆசிய மாநாடு

**தெதொஒச** - தென் ஆசிய தொலைத்தொடர்பு ஒழுங்கு முறைப்படுத்தல் சங்கம்

**கமாமு** - கட்டமைப்பு மைய மாதிரிப் படிவ முகாமை

**தெபிகச** - தென் கிழக்காசிய பிராந்திய கணனி சம்மேளனம்

**இடெ** - இலங்கை டெலிகொம்

**தொஅப** - தொலைத் தொடர்பு அபிவிருத்தி பணியகம்

**தொஅக** - தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணம்

**தொமகு** - தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு

**கொபகபா** - கொழும்பு பல்கலைக்கழக கணனிப் பாடசாலை

**யுமொதொ** - யுனிவேர்சல் மொபைல் தொலைத்தொடர்பு முறைமை

**ஐஇ** - ஐக்கிய இராச்சியம்

**அஐநாஸ்** - அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகராலயம

**ஐதொபநி** - ஐக்கிய அமெரிக்க தொலைத்தொடர்பு பயிற்சி நிறுவனம்

**பெசேவ** - பெறுமதி சேர் வரி

**அவீஎஅமா** - அதி உயர் வீத எண்ணியல் அலைவரிசை மார்க்கம்

**சதொதொமா** - சர்வதேச தொலைத்தொடர்புகள் தொடர்பான உலக மாநாடு

**நுஅசெஉ** - நுண் அலைவரிசை செயற்பாட்டுக்கான உலகளாவிய இடைச் செயற்பாடுகள்

**உதொதச** - உலக தொலைத்தொடர்பு மற்றும் தகவல் சங்கம்

**உநிமா** - உலக தொலைத்தொடர்பு நியமப்படுத்தல் மாநாடு

அத்தியாயம்

1

# தொலைத் தொடர்புகள் துறை சுருக்க அறிமுகம்

தொலைத்தொடர்புத் துறையானது அண்மைக் காலமாக நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் மிகவும் முக்கிய பணிகளை மேற்கொண்டு வருகின்றது. இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழு தொலைத்தொடர்பு துறையில் ஒழுங்கு முறைப்படுதுவதற்காக 1996 ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க இலங்கை தொலைதொடர்புகள் ஒழங்குபடுத்தல் (திருத்தச்) சட்டத்தினூடாக திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத் தொடர்புகள் சட்டத்தின் கீழ் அரச தொழில்முயற்சி நிறுவனமாக நிறுவப்பட்டுள்ளதுடன் தற்பொழுது சனாதிபதி செயலகத்தின் கீழ் இயங்கி வருகின்றது.

தொலைத் தொடர்புகள் ஒழுங்கு முறைப்படுத்தும் ஆணைக்குழுவின் பிரதானமானதொரு பணியாக இருப்பது இலங்கையில் தொலைத்தொடர்பு கட்டமைப்பினை அமுல்படுத்துவது தொடர்பாக அனுமதிப்பத்திரங்களை வழங்குவதாகும். 1.1 ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் 2013 ஆம் ஆண்டின் முடிவில் அனுமதிப்பத்திரம் பெற்ற தொலைத்தொடர்பு கட்டமைப்பு செயற்படுத்துனர் கம்பனிகளின் எண்ணிக்கை 43 ஆகும்.

**தொலைத் தொடர்புகள் முறைமை அனுமதிப் பத்திரங்களைப் பெற்ற கம்பனிகள் - 2013** (அட்டவணை 1.1)

| | |
|---|---|
| நிலையான பிரவேச தொலைபேசிச் சேவைகள் | 03 |
| கையடக்க தொலை பேசிச் சேவைகள் | 05 |
| தரவுத் தொடர்பாடல் (வசதிகளை அடிப்படையாகக் கொண்டவை) | 06 |
| தரவுத் தொடர்பாடல் (வசதிகளை அடிப்படையாக்க கொள்ளாதவை) மற்றும் இணையத்தள சேவை வழங்குனர்கள் | 09 |
| நீண்ட தூர கையடக்க தொலைபேசிச் சேவைகள் | 01 |
| வாடகை சேர்கிட் வழங்குனர்கள் | 01 |
| பேபோன் சேவை வழங்குனர்கள் | 01 |
| வெளியக பிரவேச செயற்படுத்துனர்கள் | 10 |
| நேரடி வீட்டுத்துறை செய்மதி ஒலிபரப்புச் சேவைகள் | 03 |
| கேபல் தொலைக் காட்சி வலையமைப்புச் சேவைகள் | 04 |
| மொத்தம் | 43 |

நிலையான பிரவேச தொலைபேசி சேவை வழங்குனர்களின் தொழில்நுட்பத்தின் நுண் அலைவரிசை பிரவேசம் தொடர்பான உலகலாவிய ரீதியில் விஸ்தரிப்புச் செய்யப்பட்ட இடை செயற்பாடுகள் ( WiMAX – Worldwide Interoperability for Microvawave Access), சமச்சீரான பண்பலைவரிசை வாடிக்கையாளர் கம்பித் தொடர்பு (ADSL- Asymmetric Digital Subscriber Line), மிகவும் பொருத்தமான பன்பலைவரிசை கம்பித் தொடர்பு 2 (VDSL2 – Very - high – bit- rate Digital Subscriber Line 2) மற்றும் வீட்டுத்துறை இணைப்புக்கள் (FTTH-Fiber –to-the- Home) என்பன உள்ளடங்கும். கையடக்க தொலைபேசி தொழில்நுட்ப என்பது 4 ஆவது சந்ததியின் நீண்ட கால ஒலிபரப்பாகும்.

(4GLTE-4th Generation Long Term Evolution), பொது பொதி வானொலிச் சேவை (GPRS- General Packet Radio Service), பூகோள ஒலிபரப்பு தொடர்பாக மேம்படுத்தப்பட்ட தரவுச் சதவீதம் (EDGE- Enhanced Data rates for Global Evolution), விசேட கையடக்க தொலைபேசி கட்டமைப்பு (Universal Mobile Telecommunications System), அதிவேக பொதிப் பிரவேசம் (HSPA-High Speed Packet Access) மற்றும் அதிவேக பொதிப் பிரவேசம் + (ஒலிபரப்புச் செய்யப்பட்ட அதிவேக பொதிப் பிரவேசம்) (HSPA+(Evolved High Speed Packet Access) ஆகியனவாகும். வாடிக்கையாளர் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படல், வாடிக்கையாளர்களின் வருடாந்த வளர்ச்சி சதவீதம் மற்றும் தொலைபேசிச் செறிவுச் சதவீதம் 1.2 என்ற அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

**2000 – 2013 வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை, வாடிக்கையாளர்களின் வருடாந்த வளர்ச்சிச் சதவீதம் மற்றும் தொலைபேசிப் பாவனைச் செறிவுச் சதவீதம்** (அட்டவணை 1.2)

| ஆண்டு | வாடிக்கையாளர் வகை | | | வருடாந்த வளர்ச்சிச் சதவீதம் (%) | | | தொலைபேசிப் பாவனைச் செறிவு (%) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிலை- யானது | கையடக்க தொலைபேசி | நிலையான மற்றும் கையடக்க தொலைபேசி | நிலை- யானது | கையடக்க தொலை- பேசி | நிலையான மற்றும் கையடக்க தொலைபேசி | நிலை- யானது | கையடக்க தொலை- பேசி | நிலையான மற்றும் கையடக்க தொலைபேசி |
| 2000 | 767,411 | 430,202 | 1,197,613 | 14.7 | 67.6 | 29.4 | 4.0 | 2.3 | 6.3 |
| 2001 | 827,195 | 667,662 | 1,494,857 | 7.8 | 55.2 | 24.8 | 4.4 | 5.6 | 8.0 |
| 2002 | 883,108 | 931,403 | 1,814,511 | 6.8 | 39.5 | 21.4 | 4.6 | 4.7 | 9.5 |
| 2003 | 939,013 | 1,393,403 | 2,332,416 | 6.3 | 49.6 | 28.5 | 4.9 | 7.2 | 12.1 |
| 2004 | 991,239 | 2,211,158 | 3,202,397 | 5.6 | 58.7 | 37.3 | 5.1 | 11.4 | 16.5 |
| 2005 | 1,243,994 | 3,361,775 | 4,605,769 | 25.5 | 52.0 | 43.8 | 6.3 | 17.1 | 23.4 |
| 2006 | 1,884,076 | 5,412,496 | 7,296,572 | 51.5 | 61.0 | 58.4 | 9.5 | 27.3 | 36.7 |
| 2007 | 2,742,059 | 7,983,489 | 10,725,548 | 45.5 | 47.5 | 47.0 | 13.7 | 39.8 | 53.5 |
| 2008 | 3,446,411 | 11,082,454 | 14,528,865 | 25.7 | 38.8 | 35.5 | 17.0 | 54.8 | 71.9 |
| 2009 | 3,435,958 | 14,264,442 | 17,700,400 | -0.3 | 28.7 | 21.8 | 16.8 | 69.0 | 86.6 |
| 2010 | 3,534,575 | 17,267,407 | 20,801,982 | 2.9 | 21.1 | 17.5 | 17.1 | 83.6 | 100.7 |
| 2011 | 3,608,932 | 18,319,447 | 21,928,379 | 2.1 | 6.1 | 5.4 | 17.3 | 87.8 | 105.1 |
| 2012 | 3,449,391 | 20,234,070 | 23,683,461 | -4.4 | 10.5 | 8.0 | 17.0 | 99.5 | 116.5 |
| 2013 | 2,706,787 | 20,315,150 | 23,021,937 | -21.5 | 0.4 | -2.8 | 13.2 | 99.2 | 112.4 |

குறிப்பு: தொடர்ச்சியான வாடிக்கையாளர் வரைவிலக்கணம் 2013 சனவரி மாதத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு நிறைவடையும் போது ஒப்பீட்டு ரீதியாக நிலையான பிரவேச வாடிக்கையாளர்கள் 2.7 மில்லியன்களாக இருப்பதுடன் கையடக் தொலைபேசி வாடிக்கையாளர்கள் 20.3 மில்லியன்கள் ஆகும்.

200 – 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியின் வாடிக்கையாளர்களின் உரிய வருடாந்த வளர்ச்சிச் சதவீதம் மற்றும் தொலைபேசிச் செறிவுச் சதவீதம் 1.2 ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

வு2002 ஆம் ஆண்டிலிருந்து முன்னோக்கிய சகல வருடங்களிலும் கையடக்க தொலைபேசிகளின் எண்ணிக்கை நிலையான தொலைபேசிகளின் எண்ணிக்கையிலும் அதிகமாகும். நிலையான இணைப்பு தொலைபேசிகளின் எண்ணிக்கை 2008 ஆம் ஆண்டில் அதிகரிப்பொன்றைக் காட்டியுள்ளதுடன் தொடர்நது வந்த வருடங்களான 2009, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் நிலையான தொலைபேசிகளின் எண்ணிக்கை குறைவடைந்து வந்துள்ளன.

அதே போன்று கையடக்க தொலைபேசி 2000 ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான கால எல்லையின் போது கையடக்க தொலைபேசி வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை வருடாந்த வளர்ச்சிச் அடைந்துள்ளது. உண்மையாக இதற்கு முற்பட்ட கால எல்லையின் போது கையடக்க தொலைபேசிப் பிரிவின் எண்ணிக்கையில் (Exponential Growth) அதிகரிப்பொன்று காட்டப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் கம்பிகளற்ற இணைப்புக்கள் மற்றும் கையடக்க தொலைபேசி இணைப்புக்களின் வீழ்ச்சியின் பெறுபேறொன்றாக தொடர்ச்சியான வாடிக்கையாளர்களின் வகைப்படுத்லுக்கு ஏற்ப பிரமாணங்களை திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடல் வேண்டும்.

நிலையான மற்றும் கையடக்க தொலைபேசி வாடிக்கையாளர் எண்ணிக்கையில் வளர்ச்சி 1.1 ஆம் குறிப்பின் பிரகாரம் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

வரைபு 1.1

**பாவனையாளர் வளர்ச்சி, 2000-2013**




2000 - 2013 கால எல்லையின் போது வாடிக்கையாளர் வளர்ச்சிச் சதவீதச் சதவீதத்தை ஒப்பீட்டுப் பார்க்கின்ற போது தொலைத் தொடர்புத் துறையின் முன்னேற்றம் தொடர்பாக முன்னர் உயர் பங்களிப்புச் செய்த நிலையான தொலைபேசியிலும் பார்க்க கையடக்க தொலைபேசி வளர்ச்சிச் சதவீதமானது நிதமும் உயர் மட்டத்தில் காணப்படுகின்றது. எவ்வாறாயினும் அண்மைக் காலமாக வருமாந்த வாடிக்கையாளர் வளர்ச்சிச் சதவீதம் குறைந்து செல்கின்ற போக்கொன்று காணப்படுகின்றது. 2000 முதல் 2013 ஆம் ஆண்டு வரையான கால எல்லையின் போது சராசரி வருடாந்த வாடிக்கையாளர் வளர்ச்சிச் சதவீதத்தின் போக்கொன்று வரைபு தெளிவாக காட்டப்பட்டுள்ளன. வாடிக்கையாளர் வளர்ச்சிச் சதவீதமானது குறைவடைந்து செல்லும் போக்கானது எதிர் வரும் காலங்களில் தொடர்ச்சியாக வாடிக்கையாளர் வளர்ச்சிச் சதவீதம் தொடர்ச்சியாக அதிகரித்து வரும் போக்கின் பெறுபேறாக பிரதானமாக ஒலிச் சேவை தொடர்பாக காணப்படுகின்ற கோரிக்கை பூர்த்தியடையும் புள்ளியினை அடைதல் தொடர்பான குறிகாட்டியொன்றாக உள்ளது.

அதேபோன்று இந்த கோரிக்கை குறைவடைதல் ஒலிச் சேவையினை விஞ்சிச் சென்று வேறு பெறுமதி சேர் சேவைகளை பயன்படுத்தல் தொடர்பாக காணப்படுகின்ற விருப்பத்தைக் காட்டுகின்றது. தொலைபேசிச் செறிவுச் சதவீதம் மாற்றமடைதல் (100 பேர்களுக்கு இருக்கின்ற தொலைபேசி எண்ணிக்கை) 1.3 ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. 2000 ஆம் ஆண்டு தவிர கையடக்க தொலைபேசிச் செறிவுச் சதவீதம் நிலையான தொலைபேசிகளிலும் பார்க்க தொடர்ச்சியாக உயர்வடைந்துள்ளன. பிரமாணங்கள் திருத்தங்களினால் ஏற்பட்ட பிரதான தாக்கமாக 2013 ஆம் ஆண்டில் கையடக்க தொலைபேசி இணைப்புக்களின் அளவு வீழ்ச்சியடைவதற்கு காரணமாக அமைந்ததுடன் 2010 ஆம் ஆண்டாகும் போது நாட்டின் நிலையான மற்றும் கையடக்க தொலைபேசிகளைக் கொண்ட ஆட்களின் சராசரியிற்கு ஏற்ப நூற்றுக்கு நூறு வீதம் வரை அதிகரித்த திரண்ட தொலைபேசிச் செறிவுச் சதவீதம் (நிலையான மற்றும் கையடக்க தொலைபேசி உள்ளடங்கலாக) 2010 வருட ஆரம்பம் முதல் சகல

வரைபு 1.2




வரைபு 1.3



இலங்கையர்களிடம் உள்ள கையடக்க தொலைபேசி சராசரியன் படி, 2013 ஆம் ஆண்டு நிறைவடையும் போது கையடக்க தொலைபேசிச் செறிவுச் சதவீதம் நூற்றுக்கு 99.2 ஆகும். நிலையான மற்றும் கையடக்க தொலைபேசிகளுக்கு மேலதிகமாக பொது மக்களின் பயன்பாடு தொடர்பாக நாடு பூராகவும் பொது தொலைபேசி நிலையங்கள் பலவற்றை நிறுவியுள்ளதுடன் 2013 வருட நிறைவில் நிறுவப்பட்டுள்ள அது போன்ற தொலைபேசி நிலையங்களின் எண்ணிக்கை 6870 ஆகும்.

ஒலித் தொலைத் தொடர்பு தொடர்பாக சனத்தொகையினால் தொலைபேசிகளை பயன்படுத்துகின்ற அளவு தொடர்பான குறிகாட்டி ஒன்று என்ற வகையில் நாட்டில் அழைப்புக் காலத்தை கவனத்திற் கொள்ள முடியும். 2011 - 2013 காலப் பகுதியின் போது கிடைக்கின்ற அழைப்புக்கள் மற்றும் வெளிச் செல்லும் அழைப்புக்கள் தொடர்பாக அழைப்புக் காலம் பற்றிய பெறுமதி (அண்மித்த அளவில் பில்லியனிலும் அதிகமாக உள்ளது.) 1.3 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**2011 - 2013 அழைப்புக் காலம் (மில்லியன் நிமிடங்கள்)** (அட்டவணை 1.3)

| வருடம் | உள்வரும் அழைப்புக்கள் | | | வெளிச் செல்லும் அழைப்புக்கள் | | | உள்வரும் மற்றும் வெளிச் செல்லும் அழைப்புக்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| | உள்நாட்டு | சர்வதேசம் | உள்நாட்டு மற்றும் சர்வதேச | உள்நாட்டு | சர்வதேசம் | உள்நாட்டு மற்றும் சர்வதேச | |
| 2011 | 37,684 | 1,978 | 39,662 | 37,249 | 694 | 37,943 | 77605 |
| 2012 | 41,579 | 2022 | 43,601 | 41,425 | 710 | 42,135 | 85736 |
| 2013 | 41,635 | 1,937 | 43,572 | 41,044 | 688 | 41,732 | 85304 |

உள்நாட்டு அழைப்புக்களின் அழைப்புக் காலம் சர்வதேச அழைப்புக்களின் அழைப்புக் காலத்திலும் பார்க்க மிகவும் அதிகம் என்று 1.3 ஆம் அட்டவணையின் மூலம் தெளிவாகும். 2011 ஆம் ஆண்டில் மொத்த வருடாந்த உள்வருகின்ற அழைப்புக்கள் மற்றும் வெளிச் செல்லும் சர்வதேச அழைப்புக்களின் காலம் ஒப்பீட்டு ரீதியாக மில்லியன் நாற்பதாயிரமாக இருப்பதுடன் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் மில்லியன் நிமிடங்கள் நாற்பத்து நான்காயிரமாகவும் உள்ளது. வெளிச் செல்கின்ற அழைப்புக்கள் தொடர்பில் 2011 ஆம் ஆண்டில் உரிய எண்ணிக்கையுடன் ஒப்பீடு செய்யும் போது நிமிடங்கள் மில்லியன் எழுபத்து எட்டாயிரமாக இருப்பதுடன் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் அது எண்பத்து ஐந்தாயிரமாக அதிகரித்துள்ளது.

தொலைத்தொடர்புத் துறை துரிதமாக வளர்ச்சியடைவதுடன் இணையதளம் மற்றும் மின் அஞ்சல் வாடிக்கையாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 2013 ஆம் ஆண்டில் மொத்த வலையமைப்பு மற்றும் மின் அஞ்சல் வாடிக்கையாளர் எண்ணிக்கை நூற்றுக்கு 59 சதவீதத்தால் அதிகரித்துள்ளதுடன் இணைய தளச் செறிவு (100 பேர்களுக்கான இணைய தள இணைப்பு அளவு) அதிகரிப்பு நூற்றுக்கு 10.6 ஆகும். இது நிலையான இணைய தள இணைப்புகளுக்கு இணைவாக கையடக்க தொலைபேசி இணையதள இணைப்பு துரிதமாக அதிகரிக்கின்றமை சிறப்பாக பங்களிப்புச் செய்துள்ளது. உரிய தரவுப் பொதியொன்று இன்றி கையடக்க தொலைபேசி ஊடாக இணைய தள இணைப்புச் செய்கின்ற நபர்கள் இதற்கு உள்ளாகாததுடன் மேலே மதிப்பீடு செய்யப்பட்ட அளவிலும் பார்க்க உண்மையான இணைய தளச் செறிவு மற்றும் இணைய தளத்திற்கு பிரவேசகின்ற எண்ணிக்கை வெகுவாக உயர் மட்டத்தினை கொண்டுள்ளது. மேலும் மேலே மதிப்பீடு செய்யப்பட்டுள்ள தரவுகளில் சேவை நிலையம், நெசனல நிலையம், தனியார் இணையதள சேவை வழங்குகின்ற நிலையங்கள் மற்றுமன்றி வீட்டுத்துறை நிலையான தொலைபேசி இணைய தள இணைப்பு போன்ற பொது பிரவேச நிலையங்கள் பலதரப்பட்ட பயன்படுத்துனர்களுக்கு பிரவேசிக்க முடியும் என கவனத்திற் கொள்ளாது தனி இணைப்பொன்று என்ற வகையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சர்வதேச தொலைத்தொடர்புச் சங்கத்தின் புள்ளிவிரங்களுக்கு ஏற்ப 2013 ஆம் ஆண்டில் வலையமைப்புச் செறிவு 21.9 ஆகும். இணைய தளச் செறிவின் வளர்ச்சியின் ஊடாக நாடு பூராகவும் தகவல் மற்றும் தொலைத்தொடர்புத் தொழில்நுட்ப வசதிகளை விஸ்தரிப்புச் செய்தல் தொடர்பாக அரசு மற்றுமன்று தனியார் பிரிவினால் காட்டுகின்ற பங்களிப்பினை காட்டுகின்றது. மேலும் நாட்டின் இணைய தள பயன்படுத்துகின்றவர்களின் எண்ணிக்கையை மேம்படுத்தும் நோக்கில் 2013 சனவரி முதல் அரசினால் இணைய தள சேவையின் படி வரி நூற்றுக்கு 20 இருந்து 10 வரை குறைக்கப் பட்டுள்ளது. இணைய தளம் மற்றும் மின் அஞ்சல் பயன்பாட்டு வாடிக்கையாளர்கள் 1.4 ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. இந்த 1.4 ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பிரகாரம் 2011 ஆம் ஆண்டாகும் போது கையடக்க அதி வேக இணைய தள சேவையினை பயன்படுத்துகின்றவர்களின் எண்ணிக்கை நிலையான தொலைபேசி வாடிக்கையாளர்களிலும் பார்க்க விஞ்சியுள்ளது. கையடக்க அதி வேக இணைய தள சேவை மற்றும் மின் அஞ்சல் வாடிக்கையாளர்களின் வளர்ச்சிச் சதவீதம் நிலையான

இணைய தள மற்றும் மின் அஞ்சல் வாடிக்கையாளர்களிலும் பார்க்க மிகவும் அதிகரித்துள்ளது. 2010 முதல் 2013 ஆம் ஆண்டு வரையான கால எல்லையின் போது இணைய தள மற்றும் மின் அஞ்சல் வாடிக்கையாளர் வளர்ச்சிச் சதவீதம் 1.4 ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

**2004 – 2013 இணைய தள மற்றும் மின் அஞ்சல் வாடிக்கையாளர் வளர்ச்சி** அட்டவணை 1.4

| வருடம் | வாடிக்கையாளர் எண்ணிக்கை | | | வளர்ச்சிச் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|
| | நிலையான | கையடக்க அதி வேக இணைய தள சேவை | நிலையான மற்றும் கையடக்க அதி வேக இணைய தளச் சேவைகள் | நிலையான | கையடக்க அதி வேக இணைய தள சேவை | நிலையான மற்றும் கையடக்க அதி வேக இணைய தளச் சேவைகள் |
| 2004 | 93,444 | - | 93,444 | 9.3 | - | 9.3 |
| 2005 | 115,000 | - | 115,000 | 23.1 | | 23.1 |
| 2006 | 130,000 | - | 130,000 | 13.0 | | 13.0 |
| 2007 | 202,348 | - | 202,348 | 55.7 | | 55.7 |
| 2008 | 234,000 | - | 234,000 | 15.6 | | 15.6 |
| 2009 | 249,756 | 91,359 | 341,115 | 6.7 | | 45.8 |
| 2010 | 302,000 | 200,000 | 502,000 | 20.9 | 118.9 | 47.2 |
| 2011 | 359,000 | 485,000 | 844,000 | 18.9 | 142.5 | 68.1 |
| 2012 | 423,194 | 942,461 | 1,365,655 | 17.9 | 94.3 | 61.8 |
| 2013 | 507,845 | 1,664,003 | 2,171,848 | 20.0 | 76.6 | 59.0 |

வரைபடம் 1.4



கையடக்க மற்றும் நிலையான செயற்படுத்துனர்களினால் மூன்றாவது அபிவிருத்தியடைந்த சேவை (3G), நான்காவது அபிவிருத்தியடைந்த சேவை (4G) மற்றும் நிலையான இணைய தள சேவை பரப்பின் துரித வளர்ச்சியை கருத்திற் கொண்டு இணைய தளச் செறிவு வளர்சியடைகின்ற போக்கு எதிர் வரும் வருடங்களில் தொடர்ச்சியாக நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொலைத் தொடர்புத் துறையின் மேம்பாடு தகவல் மற்றும் தொலைத்தொடர்புப் பிரிவின் (ICT) வளர்ச்சிக்கும் மற்றும் முன்னுரிமையினை அடைந்து கொள்வதற்கு முக்கியமானதாகும். உலக பொருளாதார சம்மேளனத்தினால் (WEF) உருவாக்கப்பட்ட இணையதள இணக்கப்பாட்டுக் குறிக்காட்டிக்கு (NRI) ஏற்ப 2012 ஆம் ஆண்டில் இலங்கை 71 ஆவது இடத்தில் இருந்ததுடன் 2013 ஆம் ஆண்டாகும் போது அது முன்னேற்றமடைந்து 69 ஆம் இடத்திற்கு தரப்படுத்தப்பட்டுள்ளது.

தொலைத் தொடர்புப் பிரிவு மற்றும் தகவல் தொலைத்தொடர்புத் தொழில்நுட்பத்தில் தொடர்ச்சியான அபவிருத்தி மக்களின் அறிவு மட்டத்தை உயர்வடையச் செய்வதன் ஊடாக தொலைத் தொடர்புச் சேவையினை பெற்றுக் கொள்ளும் விரிவெல்லையினை இழிவு படுத்துவதற்கு வெகுவாக பங்களிப்புச் செய்துள்ளது. தகவல் மற்றும் தொலைத்தொடர்புத் தொழில்நுட்ப முகவர் நிறுவனமான (ICTA) போன்ற நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன் “பாடசாலையை இணைத்துக் கொண்டு மக்களுக்கு தகவல் தொலைத்தொடர்புத் தொழில்நுட்பத்தை வழங்கும் செயற்திட்டம்” மற்றும் தேசிய அதி வேக இணைய தள சேவை செயற்திட்டம் போன்றன தொடர்பாக இறுதிவரை கருதத்தகு பங்களிப்பை வழங்குகின்றது.

மூன்று தசாப்தங்களுக்கு அண்மித்த காலமாக காணப்பட்ட யுத்த நிலைமை நிறைவடைந்ததைத் தொடர்ந்து மீள் நிலைப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இலங்கையில் தொலைத்தொடர்பு கைத்தொழிலானது மிகவும் துரிதமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. 2009 ஆம் ஆண்டின் மே மாதத்தில் இனப் பிரச்சினை நிறைவடைந்தமையினால் தொலைத்தொடர்பு சேவையினை செயற்படுத்துகின்ற கம்பனிகள் தங்களுடைய வலையமைப்புக்களை விஸ்தரிப்புச் செய்தல் மற்றும் மேம்படுத்துதல் போன்றவற்றை செய்து வருகின்றன. 2013 ஆம் ஆண்டில் நாடு பூராகவும் விஸ்தரிப்புச் செய்யப்பட்டுள்ள மொத்த தொலைத்தொடர்புக் கோபுரங்களின் எண்ணிக்கை 6364 ஆகும். இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் 2013 ஆம் ஆண்டில் கொழும்பு நகரத்தில் பல் நோக்கு தொலைத்தொடர்புக் கோபுரமொன்று நிர்மாணிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**தொலைபேசி மற்றும் தொலைத்தொடர்பு வலையமைப்பு தொடர்பாக கிடைக்கப் பெற்ற வெளிநாட்டு நேரடி முதலீடு (தற்காலிகம்) (அமெரிக்க டொலர்களில்)** அட்டவணை 1.5

| விடயம் | ஆண்டு | |
|---|---|---|
| | 2012 | 2013 |
| தொலைபேசி மற்றும் தொலைத்தொடர்பு வலையமைப்பு தொடர்பான வெளிநாட்டு நேரடி முதலீடு | 242.080 | 359.765 |
| உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வேறு சேவைகள் தொடர்பான வெளிநாட்டு முதலீடு | 596.595 | 786.825 |
| உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பாக கிடைக்கப் பெற்ற வெளிநாட்டு நேரடி முதலீட்டுச் சதவீதத்திற்கு ஏற்ப தொலைத்தொடர்புப் பிரிவு தொடர்பாக வெளிநாட்டு நேரடி முதலீடு | 40.58 | 45.72 |
| கிடைத்த மொத்த வருடாந்த நேரடி முதலீடு | 1,338.155 | 1,391.405 |
| கிடைத்த மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் சதவீதமாக தொலைத் தொடர்புத் துறை தொடர்பாக வெளிநாட்டு நேரடி முதலீடு | 18.09 | 25.86 |

*(US $ Mn.)*

தொலைத்தொடர்புத் துறை நாடு பூராகவும் வெளிநாட்டு நேரடி முதலீடு பற்றிய பிரதான இலக்கினை தொடர்ச்சியாக பேணிச் சென்றுள்ளது. இது 1.4 ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதுடன் பெறப்பட்டுள்ள மொத்த உள்நாட்டு முதலீட்டிலிருந்து தொலைத்தொடர்புப் பிரிவினால் உள்வாங்கப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடு 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முறையே நூற்றுக்கு 18 மற்றும் நூற்றுக்கு 26 ஆகும். உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பாக கிடைக்கப் பெற்ற வெளிநாட்டு நேரடி முதலீடு தொடர்பில் இந்தப் பிரிவினால் உள்வாங்கப்பட்ட பெறுமதி 2012 ஆம் ஆண்டில் 41 ஆக இருப்பதுடன் 2013 ஆம் ஆண்டில் அது நூற்றுக்கு 46 சதவீதம் வரை உயர்வடைந்துள்ளது.

தொலைத் தொடர்புத் துறை இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பாக அதி விசேட பணியினை நிறைவேற்றியுள்ளது. அண்மைக் காலமாக இலங்கையில் சேவைத் துறையின் வளர்ச்சின் பாரிய பங்கு தொலைத் தொடர்புத் துறையினை அபிவிருத்தி செய்வதற்காக பயன்படுத்திக் கொள்ள முடியும். இலங்கை மத்திய வங்கியின் தரவுகளுக்கு ஏற்ப 2012 ஆம் ஆண்டில் நூற்றுக்கு 7.9 ஆக இருந்த தபால் மற்றும் தொலைத்தொடர்புத் துறையின் வளர்ச்சியுடன் ஒப்பீடு செய்கின்ற போது 2013 ஆம் ஆண்டில் அது நூற்றுக்கு 11.4 சதவீதத்தால கருதத் தகு அளவில் அதிகரித்துள்ளது. 2013 ஆம் ஆண்டில் மொத்த தேசிய உற்பத்தி (GDP- Gross National Product) தொடர்பாக இந்தப் பிரிவு இரண்டினதும் பங்களிப்பு நூற்றுக்கு 2.0 சதவீதமாகும். இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் அண்மைக் காலமாக தொலைத் தொடர்புக் கைத்தொழில் துறையின் ஊடாக சேகரிக்கப்பட்ட கட்டணங்கள் மற்றும் வரிப் பணம் ஊடாக பொதுத் திறைசேரியின் ஒருங்கிணைந்த நிதியம் தொடர்பாக கருதத்தகு பங்களிப்பை வழங்கியுள்ளது. 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் இலங்கை தொலைத் தொடர்புகள் ஆணைக்குழுவின் ஊடாக ஒருங்கிணைந்த நிதியத்திற்கு உள்வாங்கப்பட்ட நிதி முறையே பில்லியன் 37.5 மற்றும் பில்லியன் 35.1 ஆகும்.

இலங்கை அதன் உன்னத தன்மையுடன் தொலைத் தொடர்பு கைத்தொழில் துறை தொடர்பாக பணியாற்ற முடிவதுடன் அது சில சந்தர்ப்பங்களில் சில அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் சமப்படுத்தலுமாகும். தொலைத் தொடர்பு மற்றும் அதனை ஒன்றிய பிரிவுகளின் மேம்பாடு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு மற்றும முழுமையாக சனத்தொகையின் சகல மக்கள் பிரிவுகளின் வாழ்வாதாரம், வாழக்கை முறை மற்றும் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதற்கு காரணமாக அமையும்.

அத்தியாயம்
2

# இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின்

## தோற்றம், தொலைநோக்கு, எமதுபணி, குறிக்கோள்கள் மற்றும் பொறுப்புக்கள்

### 2.1. ஆரம்பம்

பிரதான கொள்கையான 1991ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க இலங்கை தொலைதொடர்புகள் சட்டத்தினை திருத்தும் பொருட்டு சட்டப்படி மேற்கொள்ளப்பட்ட 1996 ஆம் அண்டின் 25ஆம் இலக்க இலங்கை தொலைதொடர்புகள் ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டத்தினூடாக ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அரச நியதிச் சட்ட நிறுவனமொன்றாகும் இந்த அறிக்கையில் "சட்டம்" என்பது 1996ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் (திருத்த) சட்டத்தினூடாக திருட்டப்பட்டவாறான 1996ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டம் அறிமுகம் செய்யப்படுவதுடன் "ஆணைக்குழு" என்பது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்ககுழு அறிமுகம் செய்யப்படும்.

### 2.2. ஆணைக்குழு மற்றும் ஆணைக்குழு கூட்டங்கள்

ஆணைக்குழு தற்பொழுது ஆணைக்குழு அங்கத்தவர்கள் நான்கு பேரை உள்ளடக்கியுள்ளது. ஜனாதிபதியின் செயலாளர் அவர்கள் உத்தியோக ரீதியாக இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தலைவராக இருக்கின்றார். பணிப்பாளர் நாயகம் நிறைவேற்று அலுவலராக இருப்பதுடன், ஆணைக்குழுவின் அங்கத்தவர் ஒருவராகவும் இருக்கிறார். ஏனைய அங்கத்தவர்கள் இருவர் ஆணைக்குவின் நிறைவேற்றுத்தரமல்லாத அங்கத்தவர்களாக இருப்பதுடன், முறையே சட்டம், நிதித் துறைகளில் விசேட தகைமைகளைப் பெற்வர்களாக இருக்கிறார்கள்.

2013ஆம் நிலையாண்டில் ஆணைக்குழுவின் கூட்டங்கள் பல நடைபெற்றுள்ளதுடன் ஆணைக்குழுவினால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுதல், அங்கீகாரம் வழங்குதல் மற்றும் ஆணைக்குழு ஒழுங்குபடுத்தல் விடயங்கள் வருடாந்த வரவு செலவுத் திட்டம் உள்ளக நிருவாக விடயங்கள் மற்றும் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் இலங்கை தொடர்பாக அனுசரணை வழங்குகின்ற சர்வதேச ஒழுங்குமுறைப்படுத்தல் மாநாடுகள் தொடர்பில் அங்கீகாரத்தினை வழங்கல் போன்ற விடயங்கள் உள்ளடங்குகின்றன.

### 2.3. தொலைநோக்கு

விஞ்ஞான ரீதியாக மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் நுட்பங்களினூடாக மேம்படுத்தப்பட்ட மட்டும் முன்நோக்கிச் செல்கின்ற கைத்தொழில் துறை உலகளாவிய ஒழுங்குமுறைப்படுத்தலாக ஏற்றுக்கொள்ளும் தன்மையை உருவாக்குதல்

### 2.4. பணிக் கூற்று

பல்வேறு திறைமைகளை உள்ளடக்கிய ஒழுக்கவிழுமியம் நிறைந்த உயர் சுறுசுறுப்புடைய பதவியணியினூடாக போட்டிச் சந்தையில் நியாயமானதும் சரியானதுமாகன அபிவிருத்தியினை அடைந்து கொள்வதில் ஏற்றுக்கொள்ளத்தக்க பண்புசார் தன்மையினை பேணி மக்களின் வாடிக்ககையாளர்களின் சுமக்க கூடிய விலைகளில் சேவையினை நாடு பூராகவும் உரிய நேரத்தில் வழங்குவதற்கு வழிவகை செய்தல்

#### 2.4.1. பணிக் கூற்றுக்கான விளக்கம்

இலங்கையின் நீண்ட கால தொலைத்தெடர்புகள் தேவையினை நிறைவு செய்வதினை உறுதிப்படுத்துவதுடன், நியாயமானதும் போட்டி தன்மையானதும் மற்றும் முதலீட்டாளர்களை ஊக்கப்படுத்துகின்ற ஒழுங்குமுறைப்படுத்தல் சூழலொன்றை உருவாக்கும் பொருட்டு சகல வகுதியினருக்கும் சகல வகுதியினருடன் சுதந்திரமாகவும் வெளிப்படையாகவும் துாரநோக்குடனும் செயற்படுவதனூடாக சகல பயன்படுத்தினர்களுக்கும் நியாயமான நேர்மையான தாங்கிக்கொள்ளக்கூடிய விலைகளின்கீழ் மேம்படுத்தப்பட்ட மற்றும் பண்புசார் தன்மையுடைய உயர் தொலைத்தொடர்புகள் தொழில்நுட்ப சேவையினை வழங்கக்கூடிய இயலுமையினை உறுதிப்படுத்தல்

### 2.5. நோக்கங்கள்

தொலைத்தொடர்புகள் சட்டத்தின் பிரகாரம் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் அடைந்துகொள்ள வேண்டிய குறிக்கோள்கள் கீழ்வருமாறு:

**2.5.1.** தேசிய அபிவிலாசைகளின்படி அபிலாசைகளுக்கு காரணமாக இருக்கின்ற அவசரச் சேவைகள், தேசிய அபிவிருத்திக்கு காரணமாக இருக்கின்ற அவசரச் சேவைகள், பொது தொலைபேசி கருமபீட சேவைகள், தொலைபேசி விபரக்கொத்து சேவைகள், கடல் தொலைதொடர்பு சேவைகள் மற்றும் கிராமிய சேவைகள் போன்ற சேவைகளின் தேவைகளினை நிறைவு செய்து இலங்கையில் தேசிய மற்றும் சர்வதேச தொலைதொடர்பினை நியாயமாகவும் வினைத்திறனாகவும் வழங்குவதற்கு வழிவகை செய்தல்.

**2.5.2.** சகல செயற்படுத்திநர்களுக்கும் அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட சேவையினை வழற்குகின்றமையினை உறுதிப்படுத்துவது தொடர்பாக அச் சகல தேவையான தொழில்நுட்ப நிதி மற்றும் முகாமைத்துவ வழங்கல் உள்ளமை பற்றியும் அவர்களினால் அவற்றினை பயன்படுத்துவதற்கு வழிவகையும் செய்தல்.

**2.5.3.** அறவிடப்படுகின்ற கட்டணங்கள் வழங்கப்படுகின்ற தொலைத்தொடர்பு சேவைகள் மட்டுமல்லாது தொலைத்தொடர்பு உபகரணங்களின் நிலைமை மற்றும் பல்வகை தன்மை தொடர்பில் வாடிக்கையாளர்களிடமிருந்தும் கொடுக்கல் வாங்கல் செய்வோர்களிடமிருந்தும் மற்றும் வேறு பயன்படுத்துநர்களிடமிருந்தும் தொடர்புகள் மற்றும் பொதுவான மக்கள் நன்மையினை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல்.

**2.5.4.** தொலைத்தொடர்புகள் சேவை மற்றும் தொடர்பான வர்த்தக அலுவல்களை நிலவும் தொடர்புடையவர்களுக்கு வினைத்திறனாகவும் போட்டித் தன்மையினை பேணிய வகையிலும் மேம்படுத்துவதற்கும் மற்றும் அவ்வாடிக்கையாளர்களின் செயல்திறன் மற்றும் சிக்கனத் தன்மையினை மேம்படுத்தல்.

**2.5.5.** உள்ளக மற்றும் சர்வதேச தொலைத்தொடர்பு வசதிகள் பற்றிய துரித மற்றும் தொடர்ச்சியான அபிவிருத்தியினை மேம்படுத்தல்.

**2.5.6.** தேவையான தாமதங்கள் அல்லது தடைகள் அல்லது முட்டுக்கட்டைகள் அற்ற நம்பிக்கையான மற்றும் வினைத்திறனான சேவையினை வழங்குவதை தங்களுடைய கடமையென கருதி அவற்றை செயற்படுத்துவதற்கு செயற்படுத்துநர்களுக்கு இயலுமை இருக்கின்றதென்பதனை உறுதிப்படுத்தல்.

**2.5.7.** தொலைத்தொடர்புகள் மற்றும் அவற்றுடன் சம்பந்தமான துறைகள் பற்றி புதிய தொழில்நுட்ப முறைமைகள் பற்றிய ஆராய்ச்சி மேம்பாடுகளை செய்தல் மற்றும் அவற்றின் தொழில்நுட்ப முறைமைகளை முன்னேற்றுதல் மற்றும் அவற்றை பயன்படுத்துதல்.

**2.5.8.** இலங்கைக்கரு வெளியில் தமது தொழில்முயற்சி மையங்களிலுள்ள தொலைத்தொடர்புகள் சேவைகளை பரந்தளவில் பயன்படுத்துகின்ற இலங்கைக்குள் வியாபார நிலையங்களை அமைக்கும் பொருட்டு ஊக்கப்படுத்தல்.

**2.5.9**. இலங்கை சர்வதேச மாற்றல் சேவைகளைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல்.

## 2.6. இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பொறுப்புக்கள்

அரசாங்கத்தின் பிரதான நிறுவனமொன்றானக இருக்கின்ற இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு இலங்கையில் தொலைத்தொடர்புகள் ஒழுங்குமுறைப்படுத்தல் பற்றிய தேசிய ஒழுங்குமுறைப்படுத்தல் பிரதிநிதித்துவ நிறுவனமாக உள்ளது. ஆணைக்குழுவின் பிரதான குறிக்கோளாக இருப்பது ஒழுங்குமுறைப்படுத்தல் செய்ற்பாட்டினை வலுப்படுத்தல். பொதுமக்கள் நன்மையினை பாதுகாத்தல் மற்றும் அதிகரித்து வருகின்ற போட்டிச் சந்தையில் சவால்களுக்கு வெற்றிகரமாக தொலைத்தொடர்பு கைத்தொழில் துறையின் நிலையான அபிவிருத்தியினை மேம்படுத்தல் போன்றனவாகும். இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் தொலைத்தொடர்புகள் வழங்கப்படாத சேவை மற்றும் வினைத்திறனாக மற்றும் முறையாக தொலைத்தொடர்புகள் சேவையினை வழங்கும் நோக்கில் தொலைத்தொடர்புகள் செயற்படுத்தும் கம்பனிகளை ஊக்கப்படுத்தல் அதுமட்டுமன்றி இலங்கையில் தொலைதொடர்புகள் வலையமைப்பு வசதிகளை உச்ச அளவில் மேம்படுத்தும் நோக்கில் சகல தொலைத்தொடர்புகள் செயற்பாட்டுக் கம்பனிகளுக்கு உதவி புரிதல். ஆணைக்குழுவின் பிரதான குறிக்கோள்கள் கீழ்வருமாறு:

**2.6.1.** சட்டத்தின் ஒழுங்குவிதிகள் மற்றும் அனுமதிப் பத்திரம் பெற்ற செயற்படுத்துநர்களுக்கு அனுமதிப் பத்திரத்தின் நிபந்தனைகளை அமுல்படுத்தல்.

**2.6.2.** அனுமதிப்பத்திர செயற்படுத்துநர்களுக்கிடையில் நியாயமான மற்றும் நிலையான போட்டித் தன்மைமயினை பேணுவதற்கு ஊக்கப்படுத்தல்.

- தொலைபேசி சேவையினை செயற்படுத்துகின்ற கம்பனிகள் மக்கள் நன்மை மற்றும் குறிக்கோள்களை நிறைவு செய்வதனை உறுதிப்படுத்துவதற்காக போட்டித் தன்மையினை உருவாக்குதல்.
- மற்றும் சேவைகளுக்கிடையில் இடைதொடர்புகளை உருவாக்க வழிவகை செய்தல்.
- திறந்த பிரவேசமும், சுமையற்றதும் வெளிப்படைத் தன்மை கொண்டதுமான அனுமதிப் பத்திரம் வழங்கல் முறையொன்றுக்கான பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குதல்.

**2.6.3** விலைகளைத் தீர்மானித்தல்

தொலைத் தொடர்புச் சேவைகளுக்கான விலைகள் நியாயமான முறையிலும், தாங்கிக்கொள்ளக் கூடிய தன்மையிலும் தீர்மானிக்கப்படுவதை உறுதிப்படுத்தல்.

**2.6.4.** வாடிக்கையாளர்களின் பாதுகாப்பு

பொதுமக்கள் மற்றும் வாடிக்கையாளர்களினால் முன்வைக்கப்படுகின்ற முறைபாடுகள் பற்றி விசாரணையினை மேற்கொள்ளும் போது பொதுமக்கள் பங்குபற்றல் மற்றும் பொதுவாக கலந்துரையாடல்களை ஊக்கப்படுத்தல் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பினையும் உருவாக்குதல்.

**2.6.5.** சமூக ஒழுங்குமுறைப்படுத்தல்கள்

i. உலகளாவிய அணுகல் / சேவைகைள்

ii. உலகளாவிய அணுகல் / சேவைகள் கிராமிய சமுதாயங்களுக்கும் முதியோருக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துதல்.

iii. திடிர் சந்தர்ப்பங்களுக்கு தயாராக இருத்தல்

iv. விசேட தேவைகளுடைய நபர்களுக்கு தொலைத்தொடர்புகள் சேவையினை வழங்குதல்.

**2.6.6.** குறைந்த வசதிகள் மற்றும் வரையறைக்குட்பட்ட வழங்கலினை ஒழுங்குமுறைப்படுத்துதல்

i. பன்பலை வரிசை முகாமை

ii. குறியீடு இடல்

iii. சட்டமுறையான அனுமதியினை வழங்குதல்

iv. தாமதப் பங்குகள்

v. இடைத்தொடர்புகள்

vi. சர்வதேச தொடர்புடைய விடயங்களுக்கு பிரவேசித்தல்

vii. பிரதான தேசிய வலையமைப்பிற்கு பிரவேசித்தல்

**2.6.6.** குறைந்த வசதிகள் மற்றும் வரையறைக்குட்பட்ட வழங்கலினை ஒழுங்குமுறைப்படுத்துதல்

i. பன்பலை வரிசை முகாமை

ii. குறியீடு இடல்

iii. சட்டமுறையான அனுமதியினை வழங்குதல்

iv. தாமதப் பங்குகள்

v. இடைத்தொடர்புகள்

vi. சர்வதேச தொடர்புடைய விடயங்களுக்கு பிரவேசித்தல்

vii. பிரதான தேசிய வலையமைப்பிற்கு பிரவேசித்தல்

**2.6.7.** பண்பு மற்றும் தொலைத்தொடர்புகள் சேவை
வாடிக்கையாளர்களின் சேவைகளை நிறைவு செய்கின்ற போது நியாயமான மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் சேவைகள் வழங்குவதற்கு வழிவகை செய்தல்.

**2.6.8.** நல்லாட்சியினை மேம்படுத்தல்.
இயற்கையான உரிமைகள் கோட்பாடுகள் போன்றவற்றினை கடைப்பிடித்து சமகால தீர்மானங்களை வழங்குதல் பொது மக்கள் பங்களிப்பினை ஊக்கப்படுத்தல் மற்றும் வெளிப்படைத் தன்மை பேணப்படும் வகையில் தீர்மானச் செயற்பாடுகளை உருவாக்குவதற்கு வழிவகை செய்தல்.

**2.6.9.** நியாயமான மற்றும் ஒரு தலைபட்சமல்லாத தீர்மானங்களை எடுப்பதற்கு வழிவகை செய்தல்.

**2.6.10.** சிவில் சமூகத்தின் நவீன தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்பம் பற்றிய அறிவுடைய சமூகம் ஒன்றை கட்டியெழுப்புதல்.

**2.6.11.** சர்வதேச தொலைத்தெடர்புகள் சங்கம் (IBU) மற்றும் உரிய சர்வதேச அமைப்புக்களினால் தொலைத்தொடர்பு உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்ப நியமங்கள் தொடர்பில் நடைபெறுகின்ற காணப்படுகின்ற நியமங்களுக்கு ஏற்ப செயற்படுவதற்கு சகல செயற்படுத்துநர்கள் மற்றும் செயற்படுத்துநர்களுடன் ஒண்றிணைந்து பணியாற்றுதல்.

## 2.7. இலங்கை தொலைத்தொடர்புகள் ஆணைக்குழுவின் பணிகள்

மேற்படி விடயங்களை அறிந்து கொள்ளும் பொருட்டு இலங்கை தொலைத்தொடர்புகள் ஆணைக்குழு கீழ்வரும் ஒழுங்குமுறைப்படுத்தல் பணிகளினை மேற்கொள்கின்றன:

**2.7.1** அனுமதிப் பத்திரம் தொடர்பாக விண்ணப்பிக்கின்ற முறைமை மற்றும் அனுமதிப்பதிரங்களை விநியோகப்பதற்கு அனுமதித்தல்

**2.7.1.1.** சட்டத்தின் 17 ஆவது பிரிவின் கீழ் இலங்கை தொலைத்தொடர்பு முறைமை ஒனற்றினை அமுல்படுத்துவது தொடர்பான அனுமதிப்பத்திரம்

சட்டத்தின் 17 ஆவது பிரிவின் கீழ் அமைவாக ஆணைக்குழுவின் சிபாரிசுகளின்படி அமைச்சரினால் வழங்கப்படுகின்ற அனுமதிப்பதத்திரத்தின் கீழல்லாது எந்தவொரு நபரினாலும் இலங்கையினுள் தொலைத்தொடர்புகள் முறைமை ஒன்றினை செயற்படுத்த முடியாது எவ்வாறாயினும் சட்டத்தின் 20ஆவது பிரிவின் அனுமதிப்பத்திரங்களினை விடுவிப்புச் செய்யப்பட்டுள்ளன.

**2.7.1.2.** சட்டத்தின் 22ஆவது பிரிவின்கீழ் தொலைத்தொடர்பு அலைவரிசைகள் உபகரணங்களை பயன்படுத்துவது தொடர்பான அனுமதிப்பத்திரம்

சட்டத்தின் 22 (1) ஆகிய பிரிவின் பிரகாரம் எந்தவொரு நபரினாலும் செயற்பாடு தொடர்பாக ஆணைக்குழுவினால் வழங்கப்படுத்துகின்ற அனுமதிப்பத்திரத்தின் கீழன்றி எந்தவொரு அலைவரிசையின் ஊடாக அல்லது ஏதேனும் வானொலி அலைவரிசையினை பயன்படுத்துகின்ற உபகரணமொன்றை இலங்கையினுள் அல்லது தேசிய கடலெல்லையினுள் ஏதேனும் ஒரு பகுதியில் அல்லது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் ஒரு கப்பலில் அல்லது விமானத்தில் பயன்படுத்த முடியாது.

**2.7.1.2.** சட்டத்தின் 21 ஆவது பிரிவின் கீழ் வர்த்தக அனுமதிப்பத்திரம் சட்டத்தின் 29 (1) பிரிவின் ஆரம்ப இலங்கை தொடர்பாக ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தின் கீழ்லன்றி எந்தவொரு நபரினாலும் ஏதேனும் தொலைத்தொடர்புகள் உபகரணமொன்றினை வர்த்த ரீதியாக உற்பததி செய்தல் இறக்குமதி செய்தல் விற்பனை செய்தல் விற்பனை செய்தல் தொடர்பாக முன் வருதல் அது தொடர்பாக பணியாற்றுதல் கையளித்தல் வாடகைக்கு வழங்குதால் குத்தகைக்கு விடுதல் செயற்படுத்துகின்ற காட்சி பணிகளினை மேற்கொள்ளுதல் திருத்ததல் செய்ய முடியாது.

**2.7.2.** அறவீட்டு ஒழுங்கு முறைகளினை நெறிப்படுத்தல்.

**2.7.2.1.** சட்டத்தின் 5 (X) பிரிவின் நிகழ்ந்த நிகழ்வின் பிரகாரம் ஆணைக்குழுவின் அதிகாரங்களுக்கேற்ப அமைச்சரினை வேண்டி அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் செயற்படுத்துநர்களினால் வழங்கப்படுகின்ற தொலைத்தொடர்புகள் சேவைகள் தொடர்பில் செயற்படுத்துநர்களின் தேவையினை கவனத்திற்கொண்டு அளவீட்டுமுறை அல்லது அளவீட்டு முறை தீர்மானிக்கின்ற முறைமையினை தீர்மானித்தல்.

**2.7.2.2.** சட்டத்தின் 5(X) பிரகாரம் வலையமைப்புக் கட்டணங்களினை அங்கீகரித்தல் தீர்மானித்தல் முடிவு செய்தல்.

**2.7.3.** தொலைத்தொடர்புகள் சட்டம் (அதன் கீழான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் உள்ளடங்களாக) மற்றும் அனுமதிப்பத்திரத்தினையுடைய செயற்ப்படுத்துநர்களின் அனுமதிப்பத்திரங்களின் தொடர்புத் தன்மையினை பரிட்சித்தல் மற்றும் உறுதிப்படுத்தல்.

**2.7.4.** இலங்கையின் வானொலித் தொலைத்தொடர்பு அலைவரிசைகளினை உரிய பிரகாரம் பயன்படுத்துவதினை பேணுதல் மட்டுமல்லாது சிக்கனமாக மற்றும் வானொலி தொலைத்தொடர்பு அலைவரிசைகளினை முகாமை செய்தல்.

**2.7.5.** வாடிக்கையாளர் முறைப்பாடுகள் மற்றும் புலனாய்வுகள் விசாரணைகளை நடாத்தி முடிவுகளினை வெளியிடல்.

சட்டத்தின் 9(1) இன் பிரிவின் பிரகாரம் செயற்படுத்துநர் ஒருவரினால் வழங்கப்படுகின்ற தொலைத்தொடர்புகள் சேவைகள் பற்றிய அல்லது பொதுமக்கள் ஆகியோரில் ஒருவரினால் அல்லது அவர்களினால் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு ஒன்று செய்யும் பட்சத்தில் தேவை இலங்கை தொலைத்தொடர்புகள் ஆணைக்குழுவினற்படும் பட்சத்தில் ஆணைக்குழு கருதுகின்ற விசாரணையினை மேற்கொள்வதற்கு இயலுமை இருப்பதுடன் குறிப்பிட்ட விடயத்துடன் தொடர்புடைய விடயங்களினை கவனத்திற்கொண்டு எடுக்கவேண்டிய நடவடிக்கையினை திட்டமிடல்.

சட்டத்தில் 9 (2) பிரிவிற்கு ஏற்ப ஏதேனுமொரு விசாரணையினை மேற்கொள்ளும்போது சட்டத்தின் 9(1) பிரகாரம் ஆணைக்குழுவினால் அம்முறைப்பாட்டுக்கு காரணமான முறைப்பாட்டின் நிமித்தம் அல்லது அந்த விடயங்களினை சரி செய்தல் தொடர்பாக அத்தியாவசியமானது என எழும் பட்சத்தில் அது போன்ற அவ்வாறான செய்றபாடுகளை எடுக்குமாறு அத்தொலைபேசி செய்ற்படுத்துநர் கம்பனிகளுக்கு கட்டளையிட முடிவதுடன் உரிய பிரகாரம் நிதி நட்டஈடுகளை செலுத்துமாறும் கட்டளையிட முடியும்.

# அலைக்கற்றை முகாமைப் பிரிவு

அத்தியாயம் 3

**சுருக்க அறிமுகம்**

வானொலி அதிர்வெண் அலைக்கற்றையானது ஒரு நாட்டின் பாரிய பொருளாதாரப் பெறுமதியைக் கொண்ட ஒரு முக்கியமான இயற்கை வளமாகும். தொலைத்தொடர்பு, ஒலிபரப்பரப்பு, இராணுவம், விஞ்ஞான ஆராய்ச்சி ஆகிய துறைகளில் அது நேரடியாகப் பயன்படுத்தப்படுவதுடன் சமூக சேவைகள், சட்ட அமுலாக்கம், கல்வி, சுகாதாரப் பராமரிப்பு, போக்குவரத்து போன்ற சமூக பொருளாதாரச் செயற்பாடுகளுக்கும் பயனளிக்கின்றது. அதனால் தொழிற்துறைகள் வானொலி அதிர்வெண் அலைக்கற்றைகளின் வினைத்திறன்மிக்க பயன்பாட்டை நம்பியிருக்கின்றன.

அலைக்கற்றை முகாமை என்பது வானொலித் தொடர்பாடல் உபகரணங்கள் மற்றும் சேவைகள் ஏனைய வானொலி முறைமைகளுக்கு குறுக்கீடுகளை ஏற்படுத்தாது வினைத்திறன்மிக்க முறையில் தொழிற்படுவதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நிர்வாக மற்றும் தொழில்நுட்பச் செயன்முறைகளைக் குறிக்கும். அலைக்கற்றை முகாமையின் இலக்கு அலைக்கற்றை வினைத்திறனை உச்சப்படுத்தி குறுக்கீடுகளைக் குறைப்பதாகும்.

அலைக்கற்றை முகாமைப் பிரிவு வானொலி அலைக்கற்றைகளின் வினைத்திறன்மிக்க நிர்வாகத்திற்குப் பொறுப்பாகவுள்ளது.

அலைக்கற்றை முகாமைப் பிரிவு, தொலைத்தொடர்புச் சட்டத்திற்கு இணங்க 2013 ஆம் ஆண்டில் பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொண்டதன் மூலம் ஆணைக்குழுவின் கடமைகளை நிறைவேற்றியது.

## 3.1. தொழிற்பாடுகள்

- அதிர்வெண் கற்றைகளைச் சர்வதேச வானொலி ஒழுங்குவிதிகளுக்கும் தேசிய முன்னுரிமைகளுக்கும் இணங்க ஒதுக்கீடு செய்தல்.
- நியாயமானதும் நீதியானதும் வெளிப்படைத்தன்மை கொண்டதுமான நடைமுறைகளின் ஊடாக அதிர்வெண் ஒதுக்கீடு செய்தல்.
- அதிர்வெண்களின் பயன்பாட்டைத் திட்டமிடுதல், ஒருங்கிணைப்புச் செய்தல், ஒழுங்குபடுத்துதல் மற்றும் நிர்வகித்தல்
- வானொலி அலைக்கற்றைகளின் பயன்பாட்டையும் நாட்டுக்குச் சொந்தமான செய்மதி நீள் வட்ட ஓடுபாதையின் பயன்பாட்டையும் நிர்வகிப்பதற்கான ஒழுங்குவிதிகளையும் தொழில்நுட்ப அளவுருக்களையும் தரநியமங்களையும் உருவாக்குதல்.
- வானொலித் தொடர்பாடல் உபகரணத்திற்கான தொழில்நுட்பத் தரநியமங்கங்களை வரையறை செய்தல்.
- பல்வேறு சேவைகளுக்கு அவற்றின் நாட்டிற்கான சமூக பொருளாதார இலக்குகளின் முக்கியத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு போதியளவு ஒதுக்கீடு செய்வதன் மூலம் அலைக்கற்றைகளை முகாமை செய்தல்.
- ஏனைய பாவனையாளர்களுக்கு மிகக் குறைந்த குறுக்கீட்டுடன் அலைக்கற்றைப் பயன்பாட்டை ஒழுங்குபடுத்தம் நோக்கில் பாவனையாளர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குதல்.
- வானொலி அலைக்கற்றைக் கண்காணிப்பு

- வானொலி மற்றும் தொலைத்தொடர்பு முனைய உபகரணங்களுக்கான வகை அங்கீகாரம் வழங்குதல்
- வானொலித் தொடர்பாடல் நிலையங்களின் தொழிற்பாடு அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பத் தரநியமங்களுக்கும் அளவுருக்களுக்கும் இணங்கிய முறையில் நடைபெறுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக அந்நிலையங்களில் அனுசரிப்பு உறுதிப்படுத்தற் சோதனைகளை நடாத்துதல்.
- வானொலி அதிர்வெண்களின் பயன்பாட்டுக்கான பிராந்திய மற்றும் சர்வதேச ஒருங்கிணைப்பையும் ஒத்துழைப்பையும் பேணி வருதல்
- வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களுக்கும் புதிய சேவைகளுக்கும் இடமளிக்கக் கூடியவாறு புதிய அலைக்கற்றை இடைவெளிகளை விடுவிப்பதற்காக காலங் கடந்து செல்லும் வானொலித் தொடர்பாடல் சேவைகளை ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் அகற்றுவதற்காக அலைக்கற்றைகளை மீள்-பண்ணையாக்கம் செய்தல்
- குறுக்கீடுகளின் மூலங்களை அடையாளம் கண்டு அவற்றைத் தீர்ப்பதன் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட ஒளிபரப்புக்களின் ஒத்தியல்பையும் குறுக்கீடுகளற்ற பயன்பாட்டையும் உறுதிப்படுத்துதல்.
- அலைக்கற்றைப் பயன்பாட்டுக்காகச் செலுத்த வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணங்களைச் சேகரித்தல்.
- ஆமெச்சர் வானொலி மற்றும் உலகளாவிய கடற்போக்குவரத்து இடர் பாதுகாப்பு முறைப் பரீட்சைகளை நடாத்துதல்.

தொலைத்தொடர்புச் சட்டத்தின் 22 ஆம் பிரிவிற்கு இணங்க (2.7.1.2 ஐப் பார்க்கவும்) வானொலி அதிர்வெண்ணை வெளிப்படுத்தும் கருவியொன்றைப் பயன்படுத்தும் எந்தவொரு ஆளும் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் செல்லுபடியான அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். வேறுவிதமாக குறித்துரைக்கப்பட்டாலன்றி ஆணைக்குழுவின் சார்பில் ஆக்கப்படும் விதிகளினால் குறித்துரைக்கப்படும் கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் இந்த அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். அனுமதிப்பத்திரத்திற்காக குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் அனுமதிப்பத்திரத்துடன் வழங்கப்படும். ஒவ்வொரு சேவைக்குமான நிபந்தனைகள் ஒன்றுக்கு ஒன்று வேறுபட்டதாக அமைய முடியும். அத்தகைய நிபந்தனைகளில் ஏதேனுமொன்று மீறப்படுமிடத்து, அந்த உபகரணத்திற்கு முத்திரையிட்டு அனுமதிப்பத்திரத்தை மீளப் பெறும் அதிகாரத்தை இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு கொண்டுள்ளது.

வானொலி அதிர்வெண் அலைக்கற்றைகள் சேவைகளின் வகைகளுக்கு ஏற்ப பல்வேறு அலைவரிகளாக ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. வானொலி அலைகள், உபகரணத்தின் தொழில்நுட்ப அளவுருக்கள், பிரயோகங்கள் என்பவற்றின் தன்மைகளைப் பொறுத்து சேவைகளின் தன்மைகள் ஒன்றுக்கு ஒன்று வேறுபட்டதாக அமைய முடியும். அதனால், இப்பிரிவின் பணிகள் பல சேவை வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

எந்தவொரு வானொலி அதிர்வெண் சாதனத்தையும் இறக்குமதி செய்வதற்கு இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிடமிருந்து விடுவிப்புக் கடிதமொன்றைப் பெறுவது அவசியமாகும். அவ்வாறு விடுவிப்புக் கடிதமொன்றை வழங்குவதற்கு முன்னர் குறித்த உபகரணம், தேவையான தரநியமங்களுக்கு இணங்கியதாக இருப்பதையும், இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அதிர்வெண்ணைக் கொண்டிருப்பதையும் அலைக்கற்றை முகாமைப் பிரிவு உறுதிப்படுத்திக் கொள்ளும். இந்நடவடிக்கை அதிர்வெண்களின் சட்டவிரோதமான பயன்பாட்டையும் அனுமதிப்பத்திரம்பெற்ற அலைக்கற்றைப் பாவனையாளருக்கு வானொலிக் குறுக்கீடுகள் ஏற்படுவதையும் குறைக்கும்.

எவ்வாறாயினும், பாவனையாளர்கள் தங்களது ஒளிப்பரப்புக்களில் குறுக்கீடுகளை எதிர்கொள்கின்ற சந்தர்ப்பங்களில் அலைக்கற்றை முகாமைப் பிரிவுக்கு முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்கின்றனர். இந்த குறுக்கீட்டு மூலங்களை இனங்கண்டு தேவையான தணிக்கை நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

### 3.2 செயலாற்றுகை

2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட அதிர்வெண்களினதும் அனுமதிப்பத்திரங்களினதும் எண்ணிக்கை, அலைக்கற்றை முகாமைப் பிரிவினால் அடையாளம் காணப்பட்ட குறுக்கீட்டு முறைப்பாடுகள், அடையாளம் காணப்பட்ட சட்டரீதியற்ற பயனர்கள் என்பன தொடர்பான புள்ளிவிபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. ஒப்பீடு செய்வதை இலகுபடுத்தும் நோக்கில் 2012 ஆம் ஆண்டுக்கான தரவுகளும் உரிய அட்டவணைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 3.2.1. அதிர்வெண்களை ஒதுக்கீடு செய்தல்

**ஒதுக்கீடு செய்யப்பட்ட அதிர்வெண்களின் எண்ணிக்கை, 2012-2013** அட்டவணை 3.1

| சேவை வகை | அதிர்வெண்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | 2012 | 2013 |
| நிலையான சேவை | 4810 | 4342 |
| ஒலிபரப்பரப்புச் சேவை (தொலைக்காட்சி மற்றும் வானொலி) | 103 | 02 |
| கையடக்கத் தொலைபேசிச் சேவை | 0 | 01 slot (LTE) |
| தரவு/வானொலித் தொலைக்கணிப்பு | 33 | 04 / 03 |
| வான்வழி மற்றும் கடல்வழிச் சேவை | | |
| *i.* கடற்போக்குவரத்து செல்லிடச் சேவை | 16 | 03 |
| *ii.* வான்வழி செல்லிடச் சேவை | 02 | 02 |
| தனியார் செல்லிட வானொலிச் சேவை | 17 | 24 |

### 3.2.2. அதிர்வெண் அனுமதிப்பத்திரம் வழங்குதல்

**அலைக்கற்றைப் பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை, 2012-2013** அட்டவணை 3.2

| சேவை வகை | அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | 2012 | 2013 |
| நிலையான சேவை | 59 | 36 |
| ஒலிபரப்பரப்புச் சேவை (தொலைக்காட்சி மற்றும் வானொலி) | 43 | 25 |
| கையடக்கத் தொலைபேசிச் சேவை | 5 | 5 |
| ட்ரங்கிங்/பேஜிங்/சிட்டிசன் அலைக்கற்றை | 9 | 10 |
| தரவு/வானொலித் தொலைக்கணிப்புச் சேவை | 38 | 10 /11 |
| வான்வழி மற்றும் கடல்வழிச் சேவை | | |
| *i.* வானூர்தி நிலையங்கள் | 75 | 80 |
| *ii.* கப்பல் நிலையங்கள் | 73 | 79 |
| *iii.* கடல்வழி செல்லிடத் தொலைபேசி | 45 | 101 |
| *iv.* வான்வழி செல்லிடத் தொலைபேசி | 03 | 02 |
| தனியார் செல்லிட வானொலிச் சேவை | 208 | 189 |
| செய்மதி அனுமதிப்பத்திர (புதிய, புதுப்பித்தல்) | 21 | 18 |
| பயிலுநர் வானொலி | | 11 |

### 3.2.3. கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் மற்றும் முன்னெடுக்கப்பட்ட புலன் விசாரணைகள்

**கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் மற்றும் முன்னெடுக்கப்பட்ட புலன் விசாரணைகள், 2012-2013** அட்டவணை 3.3

| சேவை | கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண். | | நடாத்தப்பட்ட விசாரணைகளின் எண். | |
|---|---|---|---|---|
| | 2012 | 2013 | 2012 | 2013 |
| தொலைக்காட்சி மற்றும் ஒலிபரப்பரப்பு | 12 | 05 | 12 | 05 |
| ஏனைய சேவைகள் | 68 | 34 | 68 | 34 |

### 3.2.4. அதிர்வெண் அலைக்கற்றைகளின் சட்டவிரோதப் பாவனையாளர்களை அடையாளம் காணுதல்

வானொலி அலைக்கற்றைகளின் சட்டவிரோதமான பயனர்களைக் கண்டுபிடிப்பதற்காக விசேட அதிர்வெண் கண்காணிப்பு உபகரணம் பயன்படுத்தப்பட்டது. இந்த உபகரணங்கள் இதற்காக வடிவமைக்கப்பட்ட விசேட வாகனங்களில பொருத்தப்பட்டிருந்தன. அடையாளம் காணப்பட்ட அதிர்வெண் அலைக்கற்றைகளைச் சட்டவிரோதமாகப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை 2013 ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்துள்ளமையை அட்டவணை 3.4 காட்டுகின்றது.

அடையாளம் காணப்பட்ட சட்டவிரோதமான பயன்படுத்துநர்களின் எண்ணிக்கையும் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகளும் 2012-2013 அட்டவணை 3.4

| வகை | அடையாளம் காணப்பட்ட சட்டவிரோத பயனர்களின் எண். | | எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| | 2012 | 2013 | |
| ஒலிபரப்பரப்புச் சேவை (தொலைக்காட்சி மற்றும் வானொலி) | 03 | 01 | சட்டவிரோதமான பயன்பாட்டைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது |
| ஏனைய சேவைகள் | 02 | 0 | |

### 3.2.5. கம்பியில்லா தொலைத்தொடர்பு உபகரணங்களின் இறக்குமதிக்காக வழங்கப்பட்ட விடுவிப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை

**வழங்கப்பட்ட விடுவிப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை, 2012-2013** அட்டவணை 3.5

| சேவை வகை | விடுவிப்பு அறிக்கைகளின் எண். | |
|---|---|---|
| | 2012 | 2013 |
| CDMA உள்ளிட்ட நிரந்தரச் சேவைகள் | 1075 | 985 |
| ஒலிபரப்பரப்புச் சேவை (தொலைக்காட்சி மற்றும் வானொலி) | 179 | 441 |
| கையடக்கத் தொலைபேசிச் சேவை | | |
| *i.* விற்பனை அனுமதிப்பத்திரங்கள் | 5381 | 4039 |
| *ii.* கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குநர்கள் | 1321 | 1090 |
| *iii.* ட்ரங்கிங்.˙.பேஜிங்/சிட்டிசன் அலைக்கற்றை | 27 | 24 |
| *iv.* தனியார் செல்லிட வானொலி | 663 | 564 |
| வான்வழி மற்றும் கடல்வழிச் சேவை | | |
| *i.* வானூர்தி நிலையம் | 23 | 28 |
| *ii.* கப்பல் நிலையம் | 31 | 10 |
| *iii.* கடற்போக்குவரத்து கையடக்கத் தொலைபேசி | 147 | 105 |
| *iv.* வான்போக்குவரத்து கையடக்கத் தொலைபேசி | 27 | 12 |
| *v.* வான்போக்குவரத்து இடவமைவு | 02 | 03 |
| *vi.* நானாவிதமானவை *(GPS, Tracking)* | 95 | 250 |
| தரவு/வானொலித் தொலைக்கணிப்பு | 368 | 108 / 07 |
| செய்மதிச் சேவை | 893 | 1100 |
| பயிலுநர் வானொலி | 28 | 15 |
| சக்தி குறைந்த உபகரணங்கள் | 661 | 800 |

### 3.2.6. அதிர்வெண் கண்காணிப்பு மற்றும் புலனாய்வுகள்

■ உபகரணங்களைத் தவறாகப் பயன்படுத்துவதனால் அல்லது முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதனால் ஏற்படக்கூடிய குறுக்கீடுகளை ஒழிக்கும் நோக்கில் அலைக்கற்றை முகாமைப் பிரிவு புலன் விசாரணைகளை மேற்கொண்டது. கண்காணிப்பு வாகனங்களையும் கண்காணிப்பு நிலையங்களையும் பயன்படுத்தி இந்த புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. கொழும்பு, கதிராணை, கண்டி, யக்கலை, கட்டுபெத்தை, பண்டாரகமை ஆகிய இடங்களில் கண்காணிப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. 2013 ஆம் ஆண்டில் இப்பிரிவுக்கு குறுக்கீடுகள் தொடர்பான நாற்பது (40) முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அவற்றில் முப்பத்து ஏழு (37) முறைப்பாடுகளுக்குத் தீர்வுகள் வழங்கப்பட்டன.





கண்காணிப்புக்காக வாகனத்தினுள் பொருத்தப்பட்ட சாதனங்கள் மற்றும் கண்காட்சிப் பிரதேசத்தில் உபகரணங்களைப் பொருத்துதல்

- கண்காணிப்பு நுட்பங்கள் தொடர்பான கல்வி நிகழ்ச்சிகள்

கண்காணிப்பு வாகனங்களும் உள்ளகக் கண்காணிப்பு வசதிகளும் 2013 ஆம் ஆண்டில் பின்வரும் இடங்களில் நடாத்தப்பட்ட கண்காட்சிகளில் காட்சிப்படுத்தப்பட்டு விளக்கங்கள் வழங்கப்பட்டன.

- தம்சி - நாத்தாண்டி
- தேசத்துக்கு மகுடம் - அம்பாறை
- சர்வதேசப் பாடசாலை - கொழும்பு 05
- இன்.்.பொடெக் 2013 - கொழும்பு 01
- பாதுகாப்புப் பாடசாலை - கொழும்பு 04
- கடற்படை, சமுத்திரவியல் கல்வி நிலையம் - திருகோணமலை

இந்நிகழ்ச்சிகள் பொது மக்களுக்கு குறிப்பாக மாணவர்களுக்கு வானொலித் தொடர்பாடல் மற்றும் கண்காணிப்பு நுட்பங்கள் தொடர்பான அடிப்படை எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்வதற்குப் பெரிதும் உதவியாக அமைந்தன.




கண்காணிப்பதற்கும் கண்காட்சிப் பிரதேசத்தில் உபகரணத்தை (அன்ரெனாவை) நிறுவுவதற்குமான நடமாடும் வாகனம்

## 3.3. தொழில்நுட்ப முன்னேற்றங்கள்

தொழில்நுட்ப முன்னேற்றம், அதிவேக தரவுப் பிரவேசத்திற்கான கேள்வி ஏற்பட்டு வரும் தொடர்ச்சியான வளர்ச்சி என்பவற்றுடன் இணைந்த வகையில் வெளியரங்குகளுக்கான நீண்ட கால பரிணாம வளர்ச்சி (LTE) இந்த இடைவெளியை நிரப்புவதற்குப் பொருத்தமான சக்திவாய்ந்த ஒரு கருவியாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

நிலையான மற்றும் செல்லிட தொலைத்தொடர்புச் சேவை வழங்குநர்களுக்கு LTE பிரயோகங்களுக்கு 1.8 GHz, 2.3 GHz, 2.6 GHz என்பவற்றைப் பயன்படுத்துவதற்காக புதிய அதிர்வெண் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தது.

## 3.4. இலங்கையில் அனலொக் தொலைக்காட்சியிலிருந்து டிஜிட்டல் தொலைக்காட்சியை நோக்கிய நிலைமாற்றம்

இலங்கையில் அனலொக் தொலைக்காட்சியிலிருந்து டிஜிட்டல் புவிசார் தொலைக்காட்சியை நோக்கி நிலைமாறுவதற்கான மூலத் திட்டம் அலைக்கற்றை முகாமைப் பிரிவினால் தயாரிக்கப்பட்டது.

உலகம் முழுவதிலும் பல நாடுகளால் குறிப்பாக எமது பிராந்தியத்திலுள்ள நாடுகளால் பின்பற்றப்படும் ISDP-T (Integrated Services Digital Broadcast – Terrestrial) தரநியமத்தின் அமுலாக்கத்திற்கான பரீட்சார்த்த ஒளிபரப்புக்கள் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய முகவரகத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. டிஜிட்டல் தொலைக்காட்சி ஒளிபரப்பரப்புக்காக இலங்கையில் ISDB-T தரநியமத்தைப் பின்பற்றுவதற்கு 2014 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# கொள்கை, சர்வதேச உறவுகள் மற்றும் அனுமதிப்பத்திர நிர்வாகப் பிரிவு

அத்தியாயம்
4

**சுருக்க அறிமுகம்**
கொள்கை மற்றும் சர்வதேச உறவுகள் பிரிவும் அனுமதிப்பத்திர நிர்வாகப் பிரிவும் முன்னர் தனித்தனியான பிரிவுகளாக இயங்கி வந்தன. இந்த இரு பிரிவுகளும் ஒருங்கிணைக்கப்பட்டு புதிதாக உருவாக்கப்பட்ட கொள்கை, சர்வதேச உறவுகள் மற்றும் அனுமதிப்பத்திர நிர்வாகப் பிரிவின் இரண்டு பகுதிகளாக மாற்றப்பட்டன. எவ்வாறாயினும், இவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்டதன் பின்னரும் இந்த இரு பிரிவுகளினதும் தொழிற்பாடுகள் தொடர்ந்தும் அதே விதத்திலேயே காணப்பட்டன.

தேசிய ஒழுங்குபடுத்தல் முகவரகம் என்ற வகையில், இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, தொலைத்தொடர்புத் துறை தொடர்பான கொள்கைகளை உருவாக்க வேண்டியுள்ளது. இவ்விடயத்தில் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுச் சட்டத்திற்கு இணங்க பல்வேறு வகையான உள்நாட்டு மற்றும் சர்வதேச தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தற் செயற்பாடுகளை நெறிப்படுத்தும் விடயத்தில் கொள்கை, சர்வதேச உறவுகள் மற்றும் அனுமதிப்பத்திர நிர்வாகப் பிரிவு ஆணைக்குழுவுக்கு உதவிகளை வழங்கி வருகின்றது. தொலைத்தொடர்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் புதிய நுட்பங்களை உருவாக்கிப் பயன்படுத்துவதற்கான ஆய்வுகளை ஊக்குவிப்பது இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் குறிக்கோள்களில் ஒன்றாகும். இக்குறிக்கோளை அடையும் நோக்கில் கொள்கை, சர்வதேச உறவுகள் மற்றும் அனுமதிப்பத்திர நிர்வாகப் பிரிவு, பல்கலைக்கழகங்களை உள்ளடக்கிய விதத்தில் ஆராய்ச்சி ஆய்வுகளைத் திட்டமிடுவதிலும் ஏற்பாடுசெய்வதிலும் ஈடுபட்டுள்ளது. இப்பிரிவு, சர்வதேச தொலைத்தொடர்பு நிறுவனங்கள் மற்றும் அக்கறைகாட்டும் தரப்பினரின் ஒத்துழைப்புடன் பரந்த அளவிலான தொலைத்தொடர்புத் துறை அபிவிருத்திச் செயற்திட்டங்களையும் பொறுப்பேற்று நடைமுறைப்படுத்துகின்றது. செயற்திட்ட முன்னெடுப்புக்களின் ஊடாக சர்வதேச மட்டத்திலான சிறந்த நடைமுறைகளின் அமுலாக்கத்திற்கும் அது உதவி வழங்குகின்றது. அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல், புதுப்பித்தல், திருத்தங்கள் செய்தல் என்பனவும் புதிதாக உருவாக்கப்பட்ட கொள்கை, சர்வதேச உறவுகள் மற்றும் அனுமதிப்பத்திர நிர்வாகப் பிரிவின் கீழ் வருகின்றன.

இப்பிரிவினால் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட தொழிற்பாடுகளும் அவற்றின் செயலாற்றுகையும் கீழே தரப்படுகின்றன.

## 4.1 தொழிற்பாடுகள்

- தொலைத்தொடர்புத் துறையுடன் தொடர்புடைய விடயங்களுக்கான கொள்கை ஆலோசனைகள்.
- பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆய்வு நிறுவனங்களின் உதவியுடன் ஆராய்ச்சி ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.
- செயற்திட்டங்கள்.
- பல்வேறுபட்ட சர்வதேச நிறுவனங்களில் ஆணைக்குழுவின் பங்கேற்புக்கான ஒருங்கிணைப்பு வேலைகளை மேற்கொள்ளுதல் (உ-ம் சர்வதேச தொலைத்தொடர்புச் சங்கம் (ITU), ஆசிய பசுபிக் தொலைத்தொடர்புச் சமுதாயம்(APT), பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசிய ஒன்றியம் (SAARC))

- சர்வதேச நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெறும் தகவல்களை ஆணைக்குழுவினுள் பகிர்ந்து கொள்ளுதல்.
- இலங்கை அங்கத்துவம் வகிக்கின்ற சர்வதேச நிறுவனங்களால் கோரப்படுமிடத்து ஆணைக்குழுவின் உள்ளேயும் நாட்டிலும் தகவல் சேகரிப்புக்கான ஒருங்கிணைப்பை மேற்கொளுதல்.
- சர்வதேச நிறுவனங்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குதல்.
- 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழான முறைமை அனுமதிப்பத்திரங்களை புதிதாக வழங்குதல், புதுப்பித்தல், திருத்துதல் என்பவற்றுடன் தொடர்புடைய செயற்பாடுகளை முகாமை செய்தல்.
- முதலீட்டாளர்களின் வியாபாரத் திட்டங்களை தொழில்நுட்ப, பொருளாதார, சட்ட மற்றும் நுகர்வோர் ஆகிய கோணங்களில் மதிப்பீடு செய்தல்.

## 4.2 செயலாற்றுகை

### 4.2.1 தொலைத்தொடர்புத் துறையில் ஆய்வு மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்

சட்டத்தின் பிரிவு 5(s) இல் கூறப்பட்டுள்ளது போன்று “சேவை வழங்குநர்களின் ஒத்துழைப்புடன் அல்லது அவ்வாறில்லாமல், இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆய்வு நிறுவனங்களில் தொலைத்தொடர்புத் துறைசார்ந்த ஆய்வுகளையும் அபிவிருத்தியையும் ஊக்குவித்தல்” இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் கடமைகளில் அடங்கும்.

பின்வரும் இரண்டு ஆய்வுப் பரப்புக்களும் பூர்த்திசெய்யப்பட்டு இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் சமர்ப்பிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**1.** சைகை மொழி உரைபெயர்ப்பாளர் (SLI)- பொறியியல் பீடம், ருஹுணுப் பல்கலைக்கழகம்




**2.** மிகச் சிறிய அளவிலான வானொலி (RF) அதிர்வெண் சேகரிப்பு அலகு, பொறியியல் பீடம், ருஹுணுப் பல்கலைக்கழகம்



பின்வரும் ஆய்வுச் செயற்பாடுகள் தொடர்ந்தும் நடைபெற்று வந்தன. அவற்றின் இறுதி அறிக்கை 2014 ஆம் ஆண்டில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

8GHZ வரையான நுண் அலை அளவீடுகளுக்கான செலவு குறைந்த அளவீட்டு முறையொன்றை உருவாக்குதல் - பேராதனைப் பல்கலைக்கழகம்

### 4.2.2 வலுவூட்டப்படாத.:.ஒதுக்கப்பட்ட சமுதாயங்களுக்கு தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பத்தை வழங்குதல் ந- யேுீடுநு உதவி நிகழ்ச்சித்திட்டம்

தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு இச்செயற்திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டில் விசேட தேவையுடன் ஆட்களுக்காக வடிவமைக்கப்பட்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் திறன் விருத்தி நிகழ்ச்சியொன்றை நடாத்தியது

திருகோணமலை, மட்டக்களப்பு, அநுராதபுரம், பொலனறுவை, அம்பாறை கல்முனை, கொழும்பு, கேகாலை ஆகிய மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளிலும் தொழிற் பயிற்சி நிலையங்களிலும் உள்ள அறுபது (60) விசேட கல்வி அலகுகளும் விசேட பாடசாலைகளும் இவ்வருடத்த்திற்கான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வசதிகளைப் பெறுவதற்காகத் தெரிவுசெய்யப்பட்டன. இந்நிகழ்ச்சித்திட்டம் அரசாங்கத்தின் தேசத்துக்கு மகுடம் நிகழ்ச்சியுடன் இணைந்த வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த நிலையங்களுக்குான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சிகள் கல்வி அமைச்சின் ஊடாக ஏற்பாடு செய்யப்படுகின்றன.

அனுமதிப்பத்திரம்பெற்ற சேவை வழங்குநர்களின் உதவியுடன் சலுகைக் கட்டண முறையிலான இணையப் பொதிகளும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன.

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் விசேட கோரிக்கையின் பேரில் சர்வதேச தொலைத்தொடர்புச் சங்கம் விசேட தேவைகளையுடைய ஆட்களுக்குப் பின்வரும் உதவிகளை வழங்கியது.

- கண்பார்வையற்றவர்களுக்காக டெய்சி லங்கா .:.பவுன்டேஷன் நிறுவனத்தின் உதவியுடன் “Sinhala Bashakaya Software” உருவாக்கப்பட்டு இலங்கையிலுள்ள கண்பார்வையற்றோர் பாடசாலைகளுக்கும் நிலையங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன.
- Duxbury Braille Translation Software version 11.1SR4 என்ற அனுமதிப்பத்திரம் பெற்ற மென்பொருள் கண்பார்வையற்ற மாணவர்களைக் கொண்ட எட்டுப் பாடசாலைகளுக்கும் இரண்டு பல்கலைக்கழகங்களுக்கும் வழங்கப்பட்டன.
- புத்தளம்/ சாஹிரா ஆரம்பப் பாடசாலையிலுள்ள விசேட கல்வி அலகுக்கு FM செவிப்புல உபகரணத் தொகுதி அன்பளிப்புச் செய்யப்பட்டது.
- Electronic Braille Writer (Mountbatten MB Plus Electronic Braille System) தொகுதி ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகத்தின் விசேட தேவை வள நிலையத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது.

ஜினசேன பயிற்சி மற்றும் புனரமைப்பு நம்பிக்கை நிதியத்தின் உதவியுடன் e-NABLE நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்ளடங்குகின்ற விசேட தேவையுடைய ஆட்கள், பாடசாலைகள், நிலையங்கள், நிறுவனங்கள் ஆகியோருக்கு இலவச மென்பொருட்கள் வழங்கப்பட்டன.

i. பிரயில் ஆங்கில-சிங்கள அகராதி (பிரயில் எழுத்தில் சொற்களைத் தேடுவதற்கு உதவுகின்ற ஒரு அகராதி

ii. சிங்களம்/ தமிழ் மற்றும் ஆங்கிலமொழிக்கான மொழிபெயர்ப்பு மென்பொருள் (கட்புலனற்றவர்களுக்கான பிரயில் எழுத்து)

iii. பிரயில் ஆங்கிலம்-சிங்கள மொழி மற்றும் பேசும் திறனற்ற மாணவர்களுக்கான கணித மென்பொருள்



விசேட கல்வி அலகுகளுக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வசதிகளைக் கையளித்தல்



செவிப்புலனற்றவர்களுக்கு சிங்களம் மாணவர் கல்விக்கான FM கேள்வித் தொகுதி பாஷாக்யா மென்பொருள் கையளித்தல்



விசேட தேவை வள நிலையத்திற்கான இலத்திரனியல் பிரயில் ரைட்டர் ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம்

### 4.2.3. சர்வதேச தொலைத்தொடர்புச் சங்கம்- தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு உதவியுடனான "ஒரு பாடசாலைக்கு இணைப்பு வழங்குவதன் மூலம் ஒரு சமுதாயத்தை இணைப்போம்" செயற்திட்டம் (அங்கத்துவ நாட்டில் சர்வதேச தொலைத்தொடர்புச் சங்கத்தின் சிறந்த நடைமுறைகளை அமுலாக்குதல்)

சர்வதேச தொலைத்தொடர்புச் சங்கத்தின் தொலைத்தொடர்பு அபிவிருத்திப் பணியகத்தின் "ஒரு பாடசாலைக்கு இணைப்பு வழங்குவதன் மூலம் ஒரு சமுதாயத்தை இணைப்போம்" என்ற முன்னெடுப்பு உலகம் முழுவதிலும் உள்ள பாடசாலைகளில் புரோட்பேண்ட் இணைய இணைப்பினை ஊக்குவிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு முன்னோடி நிகழ்ச்சித்திட்டமாகும். இதன் நோக்கம், கிராமிய, நகரப்புறங்களில் ஓரங்கட்டப்பட்ட மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களுக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையங்களாகச் செயற்பட முடியுமா என்பதை உறுதிப்படுத்துவதாகும்.

இந்த விரிவுபடுத்தப்பட்ட பாடசாலை இணைப்புச் செயற்திட்டத்திற்காக சர்வதேச தொலைத்தொடர்புச் சங்கத்தினால் தெரிவுசெய்யப்பட்ட ஐந்து நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். சர்வதேச தொலைத்தொடர்புச் சங்கத்தின் இச்செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பணி இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச்செயற்திட்டத்தின் முன்னெடுப்புக்களின் அமுலாக்கத்திற்கு கல்வி அமைச்சு ஒத்துழைப்பு வழங்குகின்றது.

இச்செயற்திட்டம், சர்வதேச தொலைத்தொடர்புச் சங்கம் (ITU), இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRCSL), கல்வி அமைச்சு (MOE), தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம் முகவரகம் (ICTA), அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகரின் (UNHCR) கொழும்பு அலுவலகம், ஸ்ரீலங்கா ரெலிகொம் (SLT) பீஎல்சீ, மொபிடெல் பிரைவெட் லிமிடட், டயலொக் அக்சியாட்டா பீஎல்சீ, லங்கா பெல் பிரைவெட் லிமிடட், மெட்ரோபொலிட்டன் கம்பியூட்டர்ஸ், டய்சி லங்கா ∴பவண்டேசன், ஜினசேன பயிற்சி மற்றும் புனரமைப்பு நிதியம் என்பவற்றை உள்ளடக்கிய ஒரு அரசாங்க-தனியார்-

மக்கள்-பங்குடமைச் (Public – Private – Peoples' Partnership-4P) செயற்திட்டமாகும். இச்செயற்திட்டத்தின் மூலம் பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் சூழவுள்ள சமுதாயத்தினர் நன்மையடைவர். இவை தவிர பெண்கள், சுதேசிய மக்கள், அங்கவீனர்கள், கிராமப் புறங்களில், கஷ்டப் பிரதேசங்களில் மற்றும் குறைவான வசதிகளைக் கொண்ட பிரதேசங்களில் வாழும் மக்கள் போன்ற எளிதிற் தாக்கமுறும் தன்மை கொண்ட ஓரங்கட்டப்பட்ட மக்களுக்கு வலுவூட்டுவதன் ஊடாக சமூக-பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதற்கும் இது உதவும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைந்துள்ள ஒரு பின்தங்கிய ஆரம்ப அல்லது இடைநிலைப் பாடசாலையொன்றில் கணனி ஆய்வுகூடமொன்றை நிறுவுவதற்காக இந்த மாவட்டங்கள் அனைத்தும் தெரிவுசெய்யப்பட்டன. இச்செயற்திட்டத்தின் கீழ் முப்பத்து மூன்று (33) பாடசாலைகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. உபகரணங்கள், வன்பொருள் மற்றும் மென்பொருள் தொடர்பில் ஆசிரியர்களுக்கான பயிற்சி, இணைய இணைப்பு வசதி, மின் சுற்று, உபகரணங்களின் பராமரிப்புக்கான வசதிகள், நுகர்வுப் பொருட்கள் போன்றவை இந்த உதவியில் அடங்கும்.

இச்செயற்திட்டத்தின் மூலம் குறைந்த தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அபிவிருத்தி கொண்ட பிரதேசங்களில் அமைந்துள்ள 33 பாடசாலைகளிலுள்ள 8560 மாணவர்கள் பயனடைவர். அத்துடன் அவற்றில் எட்டுப் பாடசாலைகளில் உள்ள விசேட தேவையுடன் பிள்ளைகளுக்கும் கல்வியூட்டப்படும். தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவைளைப் பயன்படுத்துவது குறிப்பாக Linux இல் ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. அனைத்துப் பாடசாலைகளுக்கும் இணைய வசதிகள் வழங்கப்பட்டன.

பாடசாலைகளிலுள்ள கணினி ஆய்வுகூடங்களுக்கான வன்பொருட்களையும் மென்பொருட்களையும் வழங்குவதற்காக சர்வதேச தொலைத்தொடர்புச் சங்கமும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவும் நிதிகளை வழங்கின. இவ்வசதிகளின் பராமரிப்பு மற்றும் தொழிற்பாட்டுக்குப் அப்பாடசாலைகளே பொறுப்பாக இருக்கும் அதேவேளை தொலைத்தொடர்புச் சேவை வழங்குநர்கள் புரோட்பேண்ட் இணைய இணைப்புக்களை சலுகை விலைகளில் வழங்குவர்.

கல்வி அமைச்சர் இச்செயற்திட்டத்தை 2013 டிசம்பர் 05 ஆந் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். கொழும்பு மாவட்டத்தில் ஹோமாகமையிலுள்ள வட்டரக கனிஷ்ட வித்தியாலயத்தில் கணினி ஆய்வுகூடத்தில் உரை நிகழ்த்திய அதிமேதகு சனாதிபதியின் செயலாளரும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தலைவருமான திரு. லலித் வீரதுங்க அவர்கள் "இந்த பாடசாலையையும் கிராமிய சமுதாயத்தையும் இலக்காகக் கொண்ட தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் செயற்திட்டம் கிராமியத் துறைக்குப் பயனுள்ளதாக அமைவதுடன் எதிர்காலத்தில் நாட்டின் கிராமிய மற்றும் பின்தங்கிய பிரதேசங்களுக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவைக் கொண்டு செல்வதில் இப்பாடசாலைகள் முக்கிய பங்கு வகிக்கும்" என்று குறிப்பிட்டார்.

சர்வதேச தொலைத்தொடர்புச் சங்கத்தின் ஆசிய மற்றும் பசுவிக் பிராந்தியத்திற்கான பணிப்பாளர் கலாநிதி யூன் ஜூ கிம் உரை நிகழ்த்துகையில் "கிராம மற்றும் பின்தங்கிய பிரதேசங்களுக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைக் கொண்டு செல்வதற்கான இந்த அறிவுபூர்வமான முன்னெடுப்பின் மூலம் ஆசிரியர்களும் மாணவர்களும் மாத்திரமன்றி அவர்கள் வாழும் சமுதாயங்களும் பயனடையும் என்றும் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட சமுதாய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையங்களை ஊக்குவிக்கும் இத்தகைய புத்தாக்கமான அரச-தனியார்-மக்கள் பங்குடமை, இலங்கை மக்களுக்கு டிஜிட்டல் வாய்ப்புக்களை வழங்குவதற்கான கவர்ச்சியான, தாங்கிக்கொள்ளக் கூடிய,





ஹோமாகமை வட்டரக கனிஷ்ட வித்தியாலயத்தில் கணினி ஆய்வுகூடம் திறந்து வைக்கப்படும் காட்சி

அனைவரையும் உள்ளடக்கிய, அளவிடத்தக்க நிலைபேறான முன்னேற்றகரமான நடவடிக்கையாகும்" என்றும் குறிப்பிட்டார். அத்துடன் இந்த முன்னெடுப்புக்களின் வெற்றிக்குப் பங்களிப்புச் அனைத்துத் தரப்பினருக்கும் அவர் தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

### 4.2.4. "எதிர்காலத்தைப் பசுமையாக்கல் தொடர்பான சுற்றாடல் நிலைபேறு தொடர்பான தரநியமப்படுத்தல் இடைவெளியை நிரப்புதல்"

இலங்கையில் கொழும்பு சினமன் லேக்சைட் ஹோட்டலில் 2013 ஒக்டோபர் 3-4 ஆந் திகதிகளில் நடாத்தப்பட்ட "எதிர்காலத்தைப் பசுமையாக்கல்சுற்றாடல் நிலைபேறு தொடர்பான தரநியமப்படுத்தல் இடைவெளியை நிரப்புதல்" தொடர்பான சர்வதேச தொலைத்தொடர்புச் சங்க-இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுச் செயலமர்வுக்கு இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு உபசரிப்பு அனுசரணை வழங்கியது.

முதலாம் நாள் அமர்வுகளில், நிலைபேறான காபன் குறைந்த பொருளாதாரம், சுற்றாடல் நிலைபேறு என்பவற்றை உருவாக்குவதிலும் அறிவுபூர்வ நிலைபேறான நகரங்களை உருவாக்குவதிலும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையினால் செய்யப்பட்ட முக்கியமான பங்களிப்புக்கள் கலந்துரையாடப்பட்டன. அத்துடன் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவைகளின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கான சமூக, பொருளாதார, சுற்றாடல் வாய்ப்புக்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. நகரங்களில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவைகளின் சூழல் தாக்கங்களை மதிப்பீடுசெய்வதற்கான ITU-T முறைமைகளும் இந்த அமர்வுகளில் சமர்ப்பிக்கப்பட்டன.

இரண்டாம் நாளின் தொழில்நுட்ப அமர்வுகளின் போது, பசுமை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் தரநியமங்களை தேசிய மடத்தில் எவ்வாறு நடைமுறைப்படுத்த முடியும் என்பது தொடர்பாகவும் அதன் மூலம் நாடுகளுக்கு கிடைக்கும் பயன்கள் தொடர்பாகவும் சுருக்கமான விளக்கமொன்று வழங்கப்பட்டது. ITU – T ஆய்வுக் குழு 5 இனால் உருவாக்கப்பட்ட "சுற்றாடலும் காலநிலையும்" என்பது தொடர்பான பசுமை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் தரநியமங்களும் (ITU – T சிபாரிசுகள்) சமர்ப்பிக்கப்பட்டன.

ITU- T தரநியமங்களைப் பயன்படுத்திய பசுமைத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கான உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான இரணடு முன்மொழிவுகள் இச்செயலமர்வில் தீர்மானிக்கப்பட்டன:

i. இலங்கையில் இலத்திரனியல் கழிவுகளுக்கான கொள்கையொன்றை உருவாக்குதல்

ii. இலங்கைக்கான தரநியமப்படுத்தப்பட்ட பசுமைத் தரவு நிலைய நடத்தைக் கோவையொன்றை உருவாக்குதல்.




இ.தொ.ஆ. தலைவர் கூட்டத்தில் உரை நிகழ்த்தும் காட்சி



செயலமர்வில் பங்கேற்றோர்

இச்செயலமர்வு உள்நாட்டு தொலைத்தொடர்புச் சேவை வழங்குநர்கள் தங்களது அனுபவங்களைப் பிறருடன் பகிர்ந்துகொள்வதற்கான பெறுமதியான ஒரு சந்தர்ப்பமாகவும் அமைந்தது

### 4.2.5 கொரிய தகவல் தொழில்நுட்பத் தன்னார்வளா கள் நிகழ்ச்சித்திட்டம்

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு e- NABLE செயற்திட்டத்தின் கீழ் சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் இரண்டு தொழிற் பயிற்சி நிலையங்களில் 2013 ஜூலை மாதத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பயிற்சி வழங்குவதற்காகத் தேசிய தகவல் சமூக முகவர் (NIA)- இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ்

இரண்டு குழுக்களைக் கொண்ட கொரிய தகவல் தொழில்நுட்பத் தன்னார்வளர்கள் (KIV) 2013 ஜுலை 1 ஆந் திகதி இலங்கை வந்தடைந்தனர். இலங்கையிலுள்ள விசேட தேவையுடைய ஆட்களின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவையும் திறன்களையும் மேம்படுத்தும் நோக்கில், உலக நண்பர்கள் (World Friends), விஞ்ஞான, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப, எதிர்காலத்



கொரியா தன்னார்வளர் குழுவுக்கு வழங்கப்பட்ட வரவேற்பு




தொழிற் பயிற்சி நிலையம் - வத்தேகமை




தொழிற் பயிற்சி நிலையம் - அங்குணகொலபெலஸ்ஸ

திட்டமிடல் அமைச்சு, கொரியாவின் தேசிய தகவல் சமூக முகவர் என்பவற்றின் ஒத்துழைப்புடன் கொரியாவின் தகவல் தொழில்நுட்பம் தன்னார்வளர்களுடன் இணைந்து இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைப்புச் செய்தது.

### 4.2.6 உலக தொலைத்தொடர்பு, தகவல் சமுதாய தினம் (WTISD)

2013 ஆம் ஆண்டின் உலக தொலைத்தொடர்பு, தகவல் சமுதாய தினத்திற்கான தொனிப்பொருள் "தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையும் வீதிப் பாதுகாப்பு மேம்பாடும்" என்பதாகும்.

உலக தொலைத்தொடர்பு, தகவல் சமுதாய தினத்தை முன்னிட்டு இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு 2013 மே மாதம் 17 ஆந் திகதி மு.ப 8.30 முதல் பி.ப 12.30 மணி வரை இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தரைமாடியில் அமைந்துள்ள மாநாட்டு அறையில்" தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையும் வீதிப் பாதுகாப்பு மேம்பாடும்" என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்றை நடாத்தியது. உரிய நிறுவனங்களிலிருந்து அழைக்கப்பட்டிருந்த பேச்சாளர்கள் தொனிப்பொருளுடன் தொடர்புடைய பின்வரும் தலைப்புக்களில் கலந்துரையாடல்களை நடாத்தினார்கள்.

- தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பமும் வீதிப் பாதுகாப்பை மேம்படுத்துதலும் : பேராசிரியர் சமன் பண்டார, மொரட்டுவைப் பல்கலைக்கழகம்.

- வீதிப் பாதுகாப்பை இணையவழியில் உறுதிசெய்தல்: பொது முகாமையாளர், தொழில்முயற்சி விற்பனைப் பிரிவு, ஸ்ரீலங்கா ரெலிகொம் பீஎல்சீ.

- தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பமும் வீதிப் பாதுகாப்பும் : பிரதம தொழில்நுட்ப அதிகாரி, எயார்டெல் ஸ்ரீலங்கா.




உலக தொலைத்தொடர்பு, தகவல் சமுதாய தினத்தின் நிகழ்வுகள்

- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவையும் வீதிப் பாதுகாப்பும், முகாமையாளர், உற்பத்தி அபிவிருத்தி, மொபிடெல் (பிரைவெட்) லிமிடட்

உலக தொலைத்தொடர்பு, தகவல் சமுதாய தினத்தை முன்னிட்டு அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் ஆசிச் செய்தியொன்றை அனுப்பியிருந்தார். "விபத்துக்களால் ஏற்படும் மரணங்களையும் காயங்களையும் தவிர்ப்பதில் வீதிப் பாதுகாப்பு முக்கிய பங்கு வகிப்பதனாலும், சமூக பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் விதத்தில் வாகனப் போக்குவரத்து முகாமையில் பல மேம்பாடுகள் செய்யப்படுவதற்குக் காரணமாக அமைவதனாலும் வீதிப் பாதுகாப்பு இன்று உலகில் மிகவும் கரிசணை காட்டப்படும் ஒரு விடயமாக உள்ளது" என அவர் தனது ஆசிச் செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

**செலுத்திய சந்தாக்கள், 2013** அட்டவணை 4.1

| நிறுவனம் | சந்தாப் பெறுமதி இ.ரூபாக்களில் |
|---|---:|
| சர்வதேச தொலைத்தொடர்புச் சங்கம் (ITU) | 21,578,591.10 |
| ஆசிய பசுபிக் தொலைத்தொடர்புச் சமுதாயம் (APT) | 1,751,459.00 |
| பொது நலவாய தொலைத்தொடர்பு நிறுவனம் (CTO) | 4,029,980.68 |
| உட்கட்டமைப்பு ஒழுங்குபடுத்தலுக்கான தெற்காசிய மன்றம் (SAFIR) | 400,743.00 |
| **மொத்தம்** | **27,760,773.78** |

### 4.2.7 சந்தாக்கள்

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சர்வதேச தொலைத்தொடர்புச் சங்கம், ஆசிய பசுபிக் தொலைத்தொடர்புச் சமுதாயம், பொது நலவாய தொலைத்தொடர்பு நிறுவனம் போன்ற பல்வேறு சர்வதேச நிறுவனங்களில் இலங்கை அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்தது. இந்நிறுவனங்களில் உறுப்புரிமையைப் பாதுகாப்பதற்காக வருடாந்த அடிப்படையில் சந்தாப் பணங்கள் செலுத்தப்படுகின்றன. மீளாய்வாண்டில் ஏறக்குறைய 28 மில்லியன் ரூபா அட்டவணை 4.1 இல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கான சந்தாவாகச் செலுத்தப்பட்டது. அந்நிறுவனங்களின் ஒரு அங்கத்தவர் என்ற வகையில் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அவற்றுடன் தொடர்புடைய செயற்பாடுகளில் பயனுறுதி வாய்ந்த முறையில் பங்கேற்றது.

**4.2.8 வெளிநாட்டுத் தூதுக்குழுக்களின் விஜயங்களுக்கான ஒருங்கிணைப்பு**
கொள்கை, சர்வதேச உறவுகள் மற்றும் அனுமதிப்பத்திர நிர்வாகப் பிரிவு, இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஏனைய பிரிவுகளின் ஒத்துழைப்புடன், தொலைத்தொடர்பு தொடர்பான செயற்பாடுகள், ஆய்வு விஜயங்கள், செயற்திட்ட நிகழ்ச்சிகள், பயிற்சி நிகழ்ச்சிகள் போன்றவற்றுக்காக இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டுத் தூதுக் குழுக்களின் விஜய ஏற்பாடுகளைச் செய்தது.

**4.2.9 அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல், புதுப்பித்தல் மற்றும் திருத்தங்கள்**
சேவை வழங்குநர்களிடமிருந்த புதிய அனுமதிப்பத்திரங்களுக்கான மற்றும் தங்களது அனுமதிப்பத்திரங்களை திருத்துவதற்கான அல்லது புதுப்பிப்பதற்கான கோரிக்கைகள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெறுகின்ற போது, அக்கோரிக்கைகள் இப்பிரிவினால் கையாளப்பட்டு ஆணைக்குழுவிடம் பொருத்தமான சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்படும். அத்தகைய கோரிக்கைகள் தொடர்பில் ஆணைக்குழு முன்வைக்கும் சிபாரிசுகள் தொடர்பில் பத்திரிகை அறிவித்தல்கள் ஊடாகவும் பொது மக்களிடமிருந்து கருத்துக்களை/ எதிர்ப்புக்களைப் பெறுவதன் ஊடாகவும் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த கருத்துக்களை/எதிர்ப்புக்களை ஆராய்ந்ததன் பின்னர் ஆணைக்குழு தனது சிபாரிசுகளை அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கும்.

**4.2.9.1 புதிய அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல்**

2013 ஆம் ஆண்டில் பின்வரும் சேவை வழங்குநர்களுக்குப புதிதாக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

i. ஆஸ்க் கேபிள் விஷன் பிரைவெட்) லிமிடட்

ii. சுப்றீம் சட் பிரைவெட்) லிமிடட்

iii. டிஷ் ரீவீ லங்கா பிரைவெட்) லிமிடட்

**4.2.9.2 அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பித்தல்**

2013 ஆம் ஆண்டில் பின்வரும் செல்லிட தொலைபேசிச் சேவை அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டன.

i. மொபிடெல் பிரைவெட்) லிமிடட்

ii. டயலொக் அக்சியாட்டா (பிஎல்சி)

iii. ஹட்சிசன் டெலிகொமியூனிகேஷன்ஸ் லங்கா பிரைவெட் லிமிடட்

**4.2.9.3 திருத்தங்கள்**
நிலையான, செல்லிட, தரவுத் தொடர்பாடல், இணையச் சேவை வழங்குநர், கேபிள் தொலைக்காட்சி, செய்மதித் தொலைக்காட்சி சேவை அனுமதிப்பத்திரங்களில் பல திருத்தங்கள் செய்யப்பட்டன.

**4.2.9.4 இரத்துச் செய்தல்கள்**
பின்வரும் அனுமதிப்பத்திரம் இரத்துச்செய்வதற்காக மீள ஒப்படைக்கப்பட்டது.
சட்நெட் (பிரைவெட்) லிமிடட்

அத்தியாயம்

5

# வலையமைப்புப் பிரிவு

**சுருக்க அறிமுகம்**

வலையமைப்புப் பிரிவு, இலங்கையில் உள்ள தொலைத்தொடர்புச் சேவைகளுக்கு இலக்கமிடல் கட்டமைப்பை உருவாக்குதல், அத்தகைய சேவைகளுடன் தொடர்புடைய இலக்கங்களின் பயன்பாடு என்பவற்றுக்கான சட்டகத்தை வடிவமைக்கின்ற இலக்கமிடல் திட்டத்திற்குப் பொறுப்பாகவுள்ளது. மேலும் அது, தற்போது இலங்கையில் காணப்படும் இலக்கமிடல் வளங்களை முகாமை செய்வதற்கும் புதிய இலக்கமிடல் அபிவிருத்திகளைத் திட்டமிடுவதற்கும் பொறுப்பாகவுள்ளது.

செப்பு அல்லது ஒளியிழை (optical fibre) வலையமைப்புக்கள், கடலுக்குக் கீழான கம்பிகள் கரைசேரும் நிலையங்கள், தொலைத்தொடர்பு அன்ரெனாக் கோபுரங்கள் போன்ற தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பு வசதிகளுக்கான கோரிக்கைகள் வலையமைப்புப் பிரிவினால் செயன்முறைப்படுத்தப்படுகின்றன. தொலைத்தொடர்புகளுக்கான தேசிய ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை என்ற வகையில், இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, தொலைத்தொடர்புச் சேவை வழங்குநர்களால் அத்தகைய பயன்பாடுகளுக்காக விடுக்கப்படும் கோரிக்கைகளைச் செயன்முறைப்படுத்துவதற்காகப் பல்வேறு அரசாங்க நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்புப் பணியை மேற்கொள்கின்றது. இச்செயற்பாட்டில் வலையமைப்புப் பிரிவு ஒரு முக்கிய வகிபாகத்தைக் கொண்டுள்ளது. தொலைத்தொடர்புக் கைத்தொழிலின் நிலைபேறான அபிவிருத்தியைப் பேணி வரும் அதேவேளை சூழல் தாக்கங்கள், சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்து ஆகிய துறைகளில் பொது மக்களின நலன்களைக் கவனத்திற் கொண்டு இப்பணி கையாளப்படுகின்றது.

வலையமைப்புப் பிரிவு, தொலைத்தொடர்புச் சட்டத்திற்கு இணங்க 2013 ஆம் ஆண்டில் பின்வரும் தொழிற்பாடுகளை மேற்கொண்டதன் மூலம் ஆணைக்குழுவின் கடமைகளை நிறைவேற்றியது.

## 5.1 தொழிற்பாடுகள்

- தேசிய இலக்கமிடல் திட்டம் மற்றும் சுருக்க இலக்கங்கள் என்பற்றை முகாமை செய்தல்.
- தொலைத்தொடர்பு சேவை வழங்குநர்களுக்கான குறிகை வழங்கும் குறியீடுகளைத் திட்டமிட்டு நிர்வகித்தல்.
- புதிய தொலைத்தொடர்புச் சேவைகள் அறிமுகப்படுத்தப்படுவதை ஊக்குவித்தல்.
- அனுமதிப்பத்திரம்பெற்ற சேவை வழங்குநர்களுக்கு உட்கட்டமைப்பு நிறுவல் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வசதி ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தல்.
- தொலைத்தொடர்பு உட்கட்டமைப்புக்களை நிறுவுவதுடன் தொடர்புடைய விடயங்களுக்காக பல்வேறுபட்ட அரசாங்க நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.
- இலங்கையின் தொலைத்தொடர்புத் துறையில் கடைப்பிடிக்கப்படும் தொழில்நுட்பத் தரநியமங்கள், சர்வதேச தொலைத்தொடர்புச் சங்கத்தின் சிபாரிசுகளுக்கும் வழிகாட்டல்களுக்கும் இணங்கியதாக அமைவதை உறுதிசெய்தல்.
- தொலைத்தொடர்பு உட்கட்டமைப்புக்களை நிறுவது தொடர்பில் பொது மக்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- தொலைத்தொடர்பு உட்கட்டமைப்புக்களை நிறுவுவது தொடர்பில் தனிப்பட்ட ஆட்களால்/ நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்படும் செயற்திட்டப் பிரேரணைகளை ஆராய்ந்து அவை தொடர்பில் சிபாரிசுகளை செய்து அறிக்கை சமர்ப்பித்தல்.

- தொலைத்தொடர்பு இறங்குதுறை மற்றும் வலையமைப்பு உபகரணங்களுக்கு அனுமதி வழங்குதலும் சுங்க விடுவிப்பு நோக்கங்களுக்காகச் சிபாரிசுகளைச் செய்தலும்.
- அரசாங்க நிறுவனங்களினதும் பொதுக் கூட்டுத்தாபனங்களினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களில் பங்கேற்று தொலைத்தொடர்புத் தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்குதல்.
- விற்பனையாளர் அனுமதிப்பத்திரங்களைப் வழங்குவதற்கான விண்ணப்பங்களை தயார்படுத்துதலும் விற்பனையாளர் அனுமதிப்பத்திர நிர்வாக முறைமையை முகாமை செய்தலும்.
- தொலைத்தொடர்புத் துறையில் பொது மக்கள் பாதுகாப்பு, சட்டம் மற்றும் ஒழுங்கு என்பவற்றுடன் தொடர்புடைய பொலிஸ்/ குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (CID) புலன் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

## 5.2 செயலாற்றுகை

2013 ஆம் ஆண்டில், வலையமைப்புப் பிரிவு, தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பு வசதிகளின் பயன்பாடு, விற்பனையாளர் அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல், வலையமைப்பு தொடர்பான உபகரணங்களின் இறக்குமதிக்கான விடுவிப்புக் கடிதங்கள் வழங்குதல், முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளை நடாத்துதல், தொலைத்தொடர்பு உட்கட்டமைப்புக்களின் பயன்பாடு தொடர்பான கொள்கைகளையும் வழிகாட்டல்களையும் உருவாக்குதல், பொது மக்கள் மத்தியில் விழிப்பு நிகழ்ச்சிகளை நடாத்துதல் என்பன போன்ற தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஒழுங்குபடுத்தல் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது.

வலையமைப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளுடன் தொடர்புடைய புள்ளிவிபரங்கள் அட்டவணை 5.1 இல் தரப்பட்டுள்ளன.

**வலையமைப்புப் பிரிவுடன் தொடர்புடைய புள்ளிவிபரங்கள், 2012-2013** *(அட்டவணை 5.1)*

| விபரம் | 2012 | 2013 |
|---|---|---|
| வழங்கப்பட்ட விற்பனையாளர் அனுமதிப்பத்திரங்களின் மொத்த எண்ணிக்கை | 810 | 763 |
| நிர்மாணிக்கப்பட்டுள்ள கோபுரங்களின் திரட்டு எண்ணிக்கை | 5897 | 6364 |
| கோபுரங்கள் தொடர்பாகக் கிடைத்த முறைப்பாடுகள் மொத்த எண்ணிக்கை | 178 | 181 |
| கையாளப்பட்ட (கோபுரங்கள் தொடர்புடைய) புலன் விசாரணைகளின் மொத்த எண்ணிக்கை | 65 | 32 |
| கோபுரங்கள் தொடர்பான நீதிமன்ற வழக்குகளின் மொத்த எண்ணிக்கை | - | 03 |
| பொது மக்களுக்காக நடாத்தப்பட்ட விழிப்பு நிகழ்ச்சிகளின் மொத்த எண்ணிக்கை | 16 | 16 |
| வழங்கப்பட்ட புதிய வகை அனுமதிகளின் மொத்த எண்ணிக்கை | 72 | 43 |
| வழங்கப்பட்ட இறக்குமதி விடுவிப்புக்களின் மொத்த எண்ணிக்கை | 3526 | 3640 |
| தனிப்பட்ட விடுவிப்புக்களின மொத்த எண்ணிக்கை | 177 | 45 |
| வழங்கப்பட்ட புதிய சுருக்க இலக்கங்களின் திரட்டு எண்ணிக்கை | 32 | 40 |

### 5.2.1 விற்பனையாளர் அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல்

தொலைத்தொடர்புச் சாதனங்களை இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல், திருத்துதல் என்பவற்றுக்கான விற்பனையாளர் அனுமதிப்பத்திரங்கள் தொலைத்தொடர்புச் சட்டத்தின் 21 (1) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்படுவதுடன் 2013 ஆம் ஆண்டில் 763 விற்பனையாளர் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

### 5.2.2 தொலைத்தொடர்புக் கோபுரங்களை நிர்மாணித்தல்

2013 ஆம் ஆண்டில் 467 தொலைத்தொடர்புக் கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டதன் மூலம் நாட்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தொலைத்தொடர்புக் கோபுரங்களின் எண்ணிக்கை 6364 ஆக அதிகரித்துள்ளது. முன்னைய வருடத்துடன் (2012) ஒப்பிடுகையில், நிர்மாணிக்கப்பட்ட புதிய கோபுரங்களின் எண்ணிக்கை 50% ஆல் குறைவடைந்துள்ளது. கோபுர உட்கட்டமைப்புக்களைப் பகிர்ந்துகொள்வதன் மூலம் அவற்றிலிருந்து உச்ச பயனைப் பெறுவதற்கு இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சேவை வழங்குநர்களுக்கு வழங்கிய தூண்டுதலே இதற்குப் பிரதான காரணமாகும்.

தொலைத்தொடர்புச் சேவை இயக்குநர்கள் தொலைத்தொடர்புக் கோபுரங்களுக்காக உள்ளூர் அதிகாரசபைகளிடம் நிர்மாண அனுமதியைப் பெற வேண்டியுள்ளன. பல்வேறுபட்ட உள்ளூர் அதிகாரசபைகள், திடீர் தீர்மானங்களில் அடிப்படையில் மிகவும் அதிகூடிய கட்டணங்களை அறிவிடுகின்றன. இது தொலைத்தொடர்புத் துறையின் அபிவிருத்திக்குப் பிரச்சினையாக அமைகின்றது. உள்ளூர் அதிகாரசபை அனுமதிகளைப் பெறுவதில் ஏற்படுகின்ற அசாதாரணமான காலதாமதங்கள் செயற்திட்டங்களின் அமுலாக்கம் தாமதமடைவதற்குக் காரணமாக அமைகின்றது

### 5.2.3 கொக்காவில் பல்தொழிற்பாட்டு கோபுரம் மற்றும் பரிவர்த்தனை நிலையம்

2013 ஆம் ஆண்டில் நான் மேலதிக **PSTN** (பொது மாற்றல் தொலைபேசி வலையமைப்பு) சேவை வழங்குநர்கள், கொக்காவில் நிலையத்தை பயன்படுத்தியதன் மூலம் அவர்கள் வட பகுதிக்கான தங்களது தழுவல் அளவை விஸ்தரித்தனர்.

### 5.2.4. உட்கட்டமைப்பு அபிவிருத்தி தொடர்பான முறைப்பாடுகளைக் கையாளுதல்.

தொலைத்தொடர்புக் கோபுரங்களின் நிர்மாணங்களுடன் இணைந்த வகையில் கோபுர நிர்மாணங்களுக்கு எதிரான முறைப்பாடுகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. பொது மக்கள் பல்வேறு காரணங்களுக்காக கோபுர நிர்மாணங்களுக்கு எதிரான முறைப்பாடுகளைச் செய்கின்றனர். வலையமைப்புப் பிரிவு 2013 ஆம் ஆண்டில் 32 புலன் விசாரணைகளை மேற்கொண்டது. 2013 ஆம் ஆண்டில் தொலைத்தொடர்புக் கோபுரங்களுடன் தொடர்புடைய மூன்று (03) நீதிமன்ற வழக்குகள் நடைபெற்று வந்தன. 2013 ஆம் ஆண்டில் கோபுரங்களுடன் தொடர்புடைய (09) முறைப்பாடுகளுக்கு தீர்வுகள் எட்டப்பட்டன. பிரதானமாக வினைத்திறன்மிக்க விழிப்பூட்டல் நிகழ்ச்சிகளின் காரணமாக, உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் பொது மக்களால் செய்யப்படும் முறைப்பாடுகளில் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

### 5.2.5. பொது மக்களுக்கான விழிப்பு நிகழ்ச்சிகள்

வலையமைப்புப் பிரிவு 2013 ஆம் ஆண்டில், இத்துறையில் சிறப்புத் தேர்ச்சிபெற்ற தொழில்வாண்மையாளர்களின் உதவியுடன் பதினாறு (16) பொது மக்கள் விழிப்பு நிகழ்ச்சிகளை நடாத்தியது. இந்த விழிப்பு நிகழ்ச்சிகளின் பிரதான குறிக்கோள் அன்ரெனா கோபுரங்களுடன் தொடர்புடைய மின்காந்த கதிர்வீச்சு, மின்னல் போன்ற பிரச்சினைகள் தொடர்பில் பொது மக்களுக்கு அறிவூட்டுவதாகும்.

### 5.2.6. வகை அங்கீகாரம் மற்றும் இறக்குமதி விடுவிப்பு வழங்கல்

தொலைத்தொடர்புச் சட்டத்தின் 5(q) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க, இறங்குதுறை உபகரணங்களுக்கு ஆணைக்குழுவின் வகை அங்கீகாரம் பெறப்படுவது அவசியமாகும். இந்த வகையில், தொலைபேசி உபகரணங்கள், தொலைநகல் இயந்திரங்கள், PABXs (தனியார் தன்னியக்க கிளைப் பரிமாற்றம்), மொடம்கள், கம்பியற்ற தொலைபேசிகள் மற்றும் அனுமதிப்பத்திரபெற்ற வலையமைப்புக்களுடன் இணைக்கப்படும் வேறு ஏதேனும் வாடிக்கையாளர் வளவுகளுக்கான உபகரணங்கள் என்பவற்றுக்கு வகை அங்கீகாரம் பெறுவது அவசியமாகும். 2013 ஆம் ஆண்டில் (43) புதிய வகை அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன.

### 5.2.7. சுருக்க இலக்கங்களை ஒதுக்குதல்

தங்களது சேவைகளைப் பொது மக்கள் இலகுவாக அணுகுவதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக சுருக்க இலக்கங்களை ஒதுக்கீடு செய்யுமாறு அரசாங்க மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் கோரிக்கைகளை முன்வைக்கின்றன. அத்தகைய கோரிக்கைகள் கிடைக்கப்பெறும் போது, இப்பிரிவு, உரிய நிறுவனங்களிடமிருந்து செயற்திட்டப் பிரேரணைகளைப் பெற்று, இவ்வாறான இலக்கங்கள் ஒரு அரிதான வளமாகக் காணப்படுவதனால் அப்பிரேரணைகள் தொடர்பில் மிகவும் கவனமாக ஆராயும். ஆய்வு பூர்த்தியடைந்ததன் பின்னர், இப்பிரிவினால்குறித்த கோரிக்கைக்கான சிபாரிசுகள் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படும். 2013 ஆம் ஆண்டில் மூன்று இலக்க சுருக்க இலக்கம் ஒன்றும் (01) நான்கு இலக்க சுருக்க இலக்கங்கள் நான்கும் (04) ஒதுக்கப்பட்டன்.

**2013 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட சுருக்க இலக்கங்கள்** அட்டவணை 5.2

| நிறுவனம் | சுருக்க இலக்கம் |
|---|---|
| அனர்த்த முகாமைத்துவ நிலையம் | 117 |
| உயர் கல்வி அமைச்சு | 1918 |
| அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிடட் (லேக் ஹவுஸ்) | 1949 |
| குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் | 1962 |
| இலங்கை தேசிய வைத்தியசாலை | 1959 |
| சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சு | 1938 |
| மனித உரிமைகள் ஆணைக்குழு | 1996 |
| தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சு | 1966 |

### 5.2.8. அன்ரெனா கட்டமைப்பு நிர்மாணம் தொடர்பான தேசிய கொள்கை மற்றும் நிர்மாணத்திற்கும் பராமரிப்புக்குமான வழிகாட்டல்களின் உருவாக்கம்

தொலைத்தொடர்புச் சேவைகளின் அபிவிருத்தியை முறையற்ற விதத்தில் மட்டுப்படுத்தாது சூழலையும் மக்கள் நலனையும் பாதுகாக்கும் நோக்கில் இச்செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, அன்ரெனா கட்டமைப்புக்களுடன் தொடர்புடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவும் அன்ரெனா கட்டமைப்புக்களின் நிர்மாணம் மற்றும் பராமரிப்புக்கான கொள்கை வழிகாட்டல்களை வரைவதற்காகவும் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவொன்றை நியமித்தது. இந்த கொள்கை வழிகாட்டல்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. உரிய தரப்பினர் இந்த வழிகாட்டல்களைப் பின்பற்றி நடக்கின்ற போது, கோபுர நிர்மாணம் மற்றும் பராமரிப்புடன் தொடர்புடைய பிரச்சினைகளை மிகவும் வினைத்திறன்மிக்க முறையில் கையாள முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### 5.2.9. சட்டவிரோதமான விற்பனையாளர்கள் தொடர்பான புலன் விசாரணைகள்

ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, தொலைத்தொடர்பு உபகரணங்களை விற்பனை செய்வதற்கு இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிடம் அனுமதிப்பத்திரம் அவசியமாகும். கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட தொலைத்தொடர்பு உபகரணங்களை விற்பனை செய்வதற்கான சட்டரீதியான நிலையங்களை நிறுவுவதற்கு நிர்ப்பந்திக்கும்/ ஊக்கமளிக்கும் நோக்கில் வலையமைப்புப் பிரிவு, பொது மக்களுக்கான விழிப்பு நிகழ்ச்சிகளையும் இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் உதவியுடன் சட்டவிரோத விற்பனையாளர்கள் தொடர்பான புலன் விசாரணைகளையும் தொடர்ச்சியாக நடாத்தியது.

### 5.2.10. கேபிள் தொலைக்காட்சிச் சேவைகளின் சட்டவிரோத தொழிற்பாடுகளைக் கட்டுப்படுத்துதல்.

சட்டத்தின் 22 (அ) (1) ஆம் பிரிவிற்கு இணங்க, எந்தவொரு ஆளும் எந்தவொரு வளவிலும், ஆணைக்குழுவினால் அந்நோக்கத்திற்காக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றின் கீழ் அன்றி கேபிள் வேலையினைச் செய்யக்கூடாது. வலையமைப்புப் பிரிவு 2013 ஆம் ஆண்டில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் உதவியுடன் நாடு முழுவதிலும் சட்டவிரோத கேபிள் தொலைக்காட்சிச் சேவைகளைக் கட்டுப்படுத்துவதில் ஈடுபட்டது.

அத்தியாயம்

6

# செயற்திட்ட மற்றும் ஆய்வுப் பிரிவு

## சுருக்க அறிமுகம்

தொலைத்தொடர்புக் கைத்தொழில் துரிதமாக விரிவடைந்து வருதனால், நிலைபேறானதும் பயனுறுதி வாய்ந்ததுமான ஒரு கைத்தொழில் துறையாக அதனை அபிவிருத்திக்கான வசதி ஏற்பாடுகளைச் செய்வதற்காக இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு பல்வேறு செயற்திட்டங்களையும் அவற்றுடன் இணைந்த ஆராய்ச்சிச் செயற்பாடுகளையும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த வகையில், செயற்திட்ட மற்றும் ஆய்வுப் பிரிவு என்ற பெயரில் ஒரு தனியான பிரிவை ஆணைக்குழு 2013 ஆம் ஆண்டில் தாபித்தது. பணிப்பாளரால் நாயகத்தினால் அறிவுறுத்தல் வழங்கப்படும் போது அவற்றுக்கு இணங்க ஏனைய அனைத்துச் செயற்திட்டச் செயற்பாடுகளுக்கும் உதவும் அதேவேளை கொழும்பு தாமரைக் கோபுரச் செயற்திட்டத்தையும் தாமரை பாரிய சந்தைச் செயற்திட்டம் என்பவற்றை முகாமைசெய்து நடைமுறைப்படுத்தும் பொறுப்பும், செயற்திட்ட மற்றும் ஆய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கொழும்பு தாமரைக் கோபுரம், இலங்கையில் முதற் தடவையாக மேற்கொள்ளப்படும் ஒரு பாரிய தனிச் செயற்திட்டமாக இருப்பதனால், நிர்மாண வேலைகளின் தடங்கலின்றிய சீரான முன்னேற்றத்துடன் தொடர்புடைய களரீதியான முக்கிய பிரச்சினைகள் அனைத்தையும் தீர்ப்பதற்கு செயற்திட்ட ஆலோசகருடனும் ஒப்பந்தக்காரருடனும் நெருக்கமாகச் செயற்படுவது மிகவும் முக்கியமானதாகும். கோபுரங்களின் நீர்மாணம் பூர்த்தியடையும் போது அவற்றை காலத்துக்குப் பொருத்தமானவையாகவும் நவீனமானதாகவும் அமைப்பதற்கான ஆரம்ப வடிவமைப்புக்குத் தேவையான திருத்தங்களுடன் தொடர்புடையதாக அறிவிக்கப்படும் முக்கிய பிரச்சினைகள் ஆராயப்பட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்படும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட செயற்திட்ட அமுலாக்கல் குழுவுடனும் இப்பிரிவு நெருக்கமான தொடர்புகளைப் பேணி வருகின்றது. நியதிச் சட்டத் தேவைப்பாடுகளை அனுசரித்துச் செயற்படும் நோக்கில் இப்பிரிவு ஏனைய அரசாங்க நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பை மேற்கொள்கின்றது. இப்பிரிவு பெரும்பாலும் தாமரைக் கோபுர நிர்மாணப் பிரதேச அலுவலத்தில இருந்து செயற்படுவதுடன் நிபுணத்துவம் பெற்ற பொறியியலாளர் குழுவொன்றின் ஊடாக செயற்திட்ட முன்னேற்றத்தை நெருக்கமான முறையில் மேற்பார்வை செய்கின்றது. மேலும் இப்பிரிவு, வாடிக்கையாளர்கள், ஆலோசகர்கள், ஒப்பந்தக்காரர்கள் ஆகியோர் மத்தியில் சிறந்த பணிச் சூழலைப் பேணி வருவதிலும் இச்செயற்திட்டப் பிரதேச அலுவலக முகாமைக்கும் செயலூக்கத்துடன் ஒத்துழைப்பு வழங்குகின்றது. வாடிக்கையாளர்களின் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்காக வாராந்தம் நடைபெறும் செயற்திட்ட மீளாய்வுக் கூட்டங்களில் இப்பிரிவின் ஊழியர்கள் அனைவரும் பங்கேற்று வருகின்றனர். தற்போது இப்பிரிவு இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் மூன்று உத்தியோகத்தர்களுடனும் நிர்மாணப் பிரதேசத்தில் இரண்டு பொறியியலாளர்களுடனும் இயங்கி வருகின்றது. அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட செயற்திட்ட அமுலாக்கல் குழுவின் வழிகாட்டல்களுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க ஆரம்பம் முதல் அது வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்படும் வரை செயற்திட்டம் சீரான முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்யும் பொறுப்பு செயற்திட்டப் பிரிவின் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவின் முக்கிய தொழிற்பாடுகளில் பின்வருவன உள்ளடங்கும்.

## 6.1 தொழிற்பாடுகள்

1. செயற்திட்டத்துடன் தொடர்புடைய இறக்குமதிகள், அனுமதிகள் தொடர்பான தொழில்நுட்ப மற்றும் நிதிசார் விடயங்களுக்குப் பொறுப்பான ஒப்பந்தக்காரர், திறைசேரி, சுங்கம் மற்றும் ஏனைய பலதரப்பட்ட அரசாங்க மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல்,

2. செயற்திட்ட ஆலோசனை அலகுக்கும் பிரதான ஒப்பந்தக்காரருக்கும் இடையிலான தொழில்நுட்பக் கூட்டங்கள் அனைத்திலும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பிரதிநிதியாகப் பங்கேற்று தொழில்நுட்ப விடயங்களில் பணிப்பாளர் நாயகத்திற்கும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு சிபாரிசுகளைச் செய்தல்.
3. செயற்திட்ட அறிக்கைகளை மீளாய்வு செய்தலும் செயற்திட்ட முகாமை விடயத்தில் செயற்திட்ட ஆலோசனை அலகுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குதல்.
4. ஒப்பந்த நிர்வாகம் தொடர்பில் செயற்திட்ட ஆலோசனை அலகுக்கு உதவு செய்தலும் செயற்திட்ட மாறுபாடுகள் மற்றும் ஏனைய முக்கிய பிரச்சினைகள் தொடர்பில் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்திற்குச் சிபாரிசுகளைச் சமர்ப்பித்தலும்.
5. அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட செயற்திட்ட அமுலாக்கல் குழுவுடனான ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்ளுதலும் செயற்திட்ட முன்னேற்றம் தொடர்பான தரங்கணிப்பை அக்குழுவுக்குச் சமர்ப்பித்தலும்.
6. செயற்திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் காலத்தில் வாடிக்கையாளரின் சார்பில் பொறுப்பேற்கும் அதிகாரியாகச் செயற்படுதல்.

## 6.2 செயலாற்றுகை

2013 ஆம் ஆண்டுக்கான இப்பிரிவின் செயலாற்றுகை தொடர்பான சுருக்கம் கீழே தரப்படுகின்றது.

1. 13 செயற்திட்ட அமுலாக்கல் குழு (அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட செயற்திட்ட அமுலாக்கல் குழு) கூட்டங்கள் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.
2. மொரட்டுவைப் பல்கலைக்கழகத்துடனான ஆலோசனைச் சேவை உடன்படிக்கை கைச்சாத்திடப்படடது. – 15.02.2013
3. இச்செயற்திட்டத்திற்கான நியதிச்சட்ட விடுவிப்பு பெறப்பட்டது.
4. கொழும்பு தாமரைக் கோபுரத்திற்கான நிரப்பல் வேலைகளும் அடித்தள வேலைகளும் பூர்த்தியடைந்துள்ளன.
5. காணி எல்லை அடையாளமிடப்பட்டு உறுதிப்படுத்தபட்டதுடன் நிர்மாணப் பிரதேசத்திற்கான பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட்டது.
6. நிர்மாணப் பிரதேசத்திற்கான பயன்பாட்டுச் சேவைகள் ஏற்பாடு செய்யப்படடன.
7. நிர்மாணப் பிரதேச அலுவலகம் நிறுவப்பட்டது
8. தீயணைப்புச் சேவைகள் திணைக்களத்திடமிருந்து நிர்மாணக் கட்டங்களுக்கான அங்கீகாரமும் சிபாரிசுகளும் பெறப்படன.
9. கொழும்பு மாநகர சபையிடமிருந்து நிர்மாண அனுமதி / அபிவிருத்தி அனுமதி பெறப்பட்டது.
10. செயற்திட்டத்திற்குத் தேவையான ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர்.
11. கொழும்பு தாமரைக் கோபுரச் செயற்திட்டத்தின் கடன் பெறுகைக்கான ஆவணங்களைத் தயாரித்து பதிவு செய்தமை.
12. கடனுக்கு அரசாங்க உத்தரவாதம் பெறப்பட்டமை
13. மத்திய வங்கி, நிதி திட்டமிடல் அமைச்சு என்பவற்றிடமிருந்து முற்பணக் கொடுப்பனவு உத்தரவாத வடிவமைப்புக்கான அங்கீகாரம் பெறப்பட்டமை.
14. கடன் பகிர்ந்தளிப்பு மேற்கொள்ளப்பட்டமை
15. வீசா செயன்முறை ஒழுங்குபடுத்தப்பட்டமை
16. நிதி திட்டமிடல் அமைச்சு, சுங்கத் திணைக்களம் என்பவற்றின் ஆலோசனையுடன் மூலப்பொருள் இறக்குமதி விடுவிப்பு ஒழுங்குபடுத்தப்பட்டது.
17. நிர்மாணப் பிரதேச ஊழியர்களுக்கும் பயிலுநர்களுக்கும் காப்புறுதிப் பூட்கைகளைப் பெற்றுக்கொடுக்குமாறு ஒப்பந்தக்காரருக்கு ஆலோசனை வழங்கி அறிவுறுத்தப்பட்டது.

## 6.3 செயற்திட்ட முன்னேற்றம்(கொழும்பு தாமரைக் கோபுரம்)

முப்பது வீத கட்டமைப்பு நிர்மாணப் பணிகளும் தொண்ணூறு வீத வடிவமைப்பு வேலைகளும் 2013 ஆம் ஆண்டில் பூர்த்தியடைந்திருந்தன. கோபுரத்தின் கூரைத் தளத்தின் 15 மீற்றர் கொண்ட இரண்டு கட்டங்களை சீன தேசிய இலத்திரனியல் இறக்குமதி ஏற்றுமதிக் கூட்டுத்தபானம் (CEIEC) பூர்த்திசெய்துள்ளது. இது 2014 ஜனவரி 15 ஆந் திகதியில் பூர்த்திசெய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது, அடித்தளத்தில் (கடல் மட்டத்திற்கு 5.0 மீற்றர் கீழ்) இருந்து கோபுரத் தளக் கூரையின் மேற்பகுதி (கடல் மட்டத்திலிருந்து 15.0 மீற்றர்) வரையிலான பகுதி 2013 ஜனவரி முதல் டிசம்பர் வரையான காலப் பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டது.



கொழும்பு தாமரைக் கோபுரம் பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர் எவ்வாறு இருக்கும் என்பதைக் காட்டும் ஒரு வரைவுப் படம்





நிர்மாணப் பணிகள் நடைபெறுகின்றன

# தேசிய புரோட்பேண்ட் முன்னெடுப்பு

அத்தியாயம்

7

**சுருக்க அறிமுகம்**

இலங்கையில் அதி வேக புரோட்பேண்ட் சேவைகளின் அபிவிருத்தியைத் துரிதப்படுத்தும் நோக்கில் தேசிய புரோட்பேண்ட் முன்னெடுப்பு (NBI) 2013 ஆம் ஆண்டில் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த தேசிய புரோட்பேண்ட் முன்னெடுப்பு தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்துநரின் கீழ் நேரடியாக இயங்கி வருவதுடன் அது இந்நாட்டில் துரிதப்படுத்தப்பட்ட புரோட்பேண்ட் அபிவிருத்திக்கான முக்கிய நிலையமாகவும் விளங்கும்.

ஒரு உபாயமுறைச் செயன்முறையின் ஊடாக இந்நாட்டில் அதிவேக புரோட்பேண்ட் சேவைகளை ஊக்குவிப்பது தவிர, அதிவேக இணையச் சேவைகளின் வளர்ச்சியுடன் நேரடியாகத் தொடர்புடைய விடயப் பரப்புக்களில் மாத்திரமன்றி நவீன பொருளாதாரங்களில் பயன்படுத்தப்படும் பல்வேறு விடயப் பரப்புக்களிலும் இந்த முன்னெடுப்பு கவனம் செலுத்துகின்றது. புரோட்பேண்ட்ச் சேவைகளின் தரத்தை அளவிடுவது, இறுதிப் பயனர்களுக்கு தாங்கள் வழங்குகின்ற சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்குச் சேவை வழங்குநர்களுக்கு உதவுவதில் முக்கியமான வகிபாகத்தைக் கொண்டுள்ளது.

மற்றொரு பாரிய நடவடிக்கையாக, இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தேசிய புரோட்பேண்ட் முன்னெடுப்பு, நாட்டிலுள்ள கணனி ஆய்வுகூடங்களைத் தொடர்புபடுத்துவதற்காக பாடசாலைகளுக்கு அதிவேக புரோட்பேண்ட் இணையச் சேவைகளை வழங்குவதற்காக கல்வி அமைச்சுடனும் சேவை வழங்குநர்களுடன் கைகோர்த்துள்ளது.



அதிவேக புரோட்பேண்ட் இணையச் சேவைகளைக் கொண்ட பாடசாலைக் கணனி ஆய்வுகூடமொன்று

கல்வி அமைச்சின்/இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் இந்த முன்னெடுப்பின் ஊடாக, 100Mbps வேகத்தை இலக்காகக் கொண்டு அதிவேக இணையச் சேவைகள் குறைந்த விலையில் பாடசாலை கணனி ஆய்வுகூடங்களுக்கு வழங்கப்படும். இது, கல்வி அமைச்சின் தற்போது நடைமுறையிலுள்ள 2005 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட SchoolNet என்ற பெயரிலான வலையமைப்புக்கான விரிவாக்கமாக அமையும். SchoolNet II என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆரம்ப கட்டமாக 4000 பாடசாலைகளுக்கு இணைய வசதிகள் வழங்கப்படுவதுடன் அது 2020 ஆம் ஆண்டாகும் போது பாடசாலை கணனி ஆய்வுகூடங்கள் அனைத்துக்கும் இணைய வசதிகளை வழங்குவதை இலக்காகக் கொண்டுள்ளது.

இதனுடன் தொடர்புடையதாக, முன்னணிப் பாடசாலைகளிலுள்ள கணனி ஆய்வுகூடங்களை உள்ளடக்கிய வகையில் பாரிய கொழும்புப் பிரதேசத்தில் முன்னோடிச் செயற்திட்டமொன்று ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த கணனி ஆய்வுகூடங்களுக்கு சராசரியாக ஒரு ஆய்வுகூடத்திற்கு 40Mbps என்ற வேகம் கொண்ட 4G LTE இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

**அதிவேக இணைய வசதிகொண்ட ஸ்மார்ட் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வகுப்பறைக்கான வசதி ஏற்பாடுகளை தேசிய புரோட்பேண்ட் முன்னெடுப்பு செய்துகொடுத்தது**

ஹோமாகமையில் அமைந்துள்ள மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்தில் நிறுவப்பட்டுள்ள நாட்டின் முதலாவது ஸ்மார்ட் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வகுப்பறைக்கு, கல்வி அமைச்சு/தேசிய புரோட்பேண்ட் முன்னெடுப்பு என்பவற்றின் கூட்டுத்தொழில்முயற்சியின் கீழ் அதிவேக இணைய இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இணையத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் நவீன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பல்லூடக உபகரணங்களை இந்த வகுப்பறை கொண்டுள்ளது. நாடு முழுவதிலும் உள்ள பிள்ளைகளுக்கு சிறந்த கல்வி கிடைப்பதை உறுதிப்படுத்தக்கூடியவாறு பிள்ளைகளுக்கான கல்வி வசதிகளை இணையவழியில் நடாத்தக்கூடியதாக உள்ளது.

ஸ்மார்ட் வகுப்பறையில் பாடங்கள் இணையத்தின் ஊடாக நடாத்தப்படுவதனால், அதிவேகமானதும் அகன்ற பட்டை கொண்டதுமான இணைய வசதி அதற்கு அவசியமாகின்றது. இத்தேவையினைப் பூர்த்திசெய்வதற்காக 30Mbps இற்கு மேற்பட்ட பதிவிறக்க வேகம் கொண்ட அதிவேக 4G LTE இணைப்புக்கள் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன.

**புரோட்பேண்ட் வேகத்தைத் துல்லியமாகக் கணிப்பதற்கான மேம்படுத்தப்பட்ட கருவி**

அதிவேக புரோட்பேண்ட் 4G LTE முதல் FTTH (Fiber to the Home) வரையான பல்வேறு வடிவத் தொழில்நுட்பங்களில் வழங்கப்படுவதனால், இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு புதிய அம்சங்களைச் சேர்ப்பதன் மூலம் தனது இணையத்தளத்தை அடிப்படையாகக் கொண்ட இணையவழியிலான இணைய வேகச் சோதனைக் கருவியை மேம்படுத்தியுள்ளது.

FTTH> 4G LTE என்பன போன்ற அதிவேக புரோட்பேண்ட் சேவைகளைப் பரிசோதிப்பதற்கு உதவுவதற்காக, இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அதன் பரிசோதனைச் சேவையை நெதர்லாந்திலும், சிங்கப்பூரிலும் உள்ள சேர்வர்களுடன் தொடர்புபடுத்தியுள்ளது. பாவனையாளர்கள் தங்களது அதிவேக இணைப்புக்களை ஐரோப்பாவிலுள்ள சேர்வருடன் மாத்திரமன்றி ஆசியாவிலுள்ள உள்ள சேர்வர் ஒன்றுடன் தொடர்புபடுத்துவதன் மூலமும் சேவைத் தரத்தை மதிப்பீடு செய்வதற்கு இந்த புதிய கட்டமைப்பு உதவும்.

# போட்டிப் பிரிவு

அத்தியாயம்
8

**சுருக்க அறிமுகம்**
சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பொறுப்பு, நியாயமான விலையைக் கொண்ட தொலைத்தொடர்புச் சேவைகள் நாட்டு மக்களுக்கு வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதாகும். இந்நோக்கத்திற்காக, இத்துறையில் நியாயமான போடியை ஊக்குவிப்பதற்காக, கட்டணங்களை ஒழுங்குபடுத்துதல், இடைத் தொடர்புச் சேவைககளை மேற்பார்வை செய்தல், துறைசார்ந்த தகவல்களை வெளியிடுதல், மானியத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக சேவைகள் வழங்கப்படாத மற்றும் குறைவாகச் சேவை வழங்கப்படும் பிரதேசங்களுக்கு சேவைகளை விரிவுபடுத்துமாறு சேவை வழங்குநர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்குதல் என்பன போன்ற பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகும். இத்தொழிற்பாடுகள் இலங்கை தொலைத்தொடர்புச் சேவை ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் போட்டிப் பிரிவினால் கையாளப்படுகின்றன. மேலும் இப்பிரிவு, சேவை வழங்குநர்களிடமிருந்து வரிகள், தீர்வைகள், செஸ் வரி என்பன சேகரிக்கப்படுவதை மேற்பார்வை செய்தல், பகுப்பாய்வு நோக்கங்களுக்காகத் தரவுகளைச் சேகரித்தல், மத்திய வங்கி, திறைசேரி மற்றும் ஏனைய பொருத்தமான உள்ளூர் மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு இத்துறை தொடர்பான தகவல்களை வழங்குதல் ஆகிய பணிகளை மேற்கொள்கின்றது.

போட்டிப் பிரிவினால் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட தொழிற்பாடுகளும் அவற்றின் செயலாற்றுகையும் கீழே தரப்படுகின்றன.

## 8.1. தொழிற்பாடுகள்

- செலவு அடிப்படையிலான கட்டண விதிமுறைகளை உருவாக்குவதற்காகச் செலவு ஆய்வுகள் உள்ளிட்ட கட்டணப் பகுப்பாய்வுகளை நடாத்துதலும் புதிய கட்டண முன்மொழிவுகளை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பித்தலும்
- அனுமதிப்பத்திரம்பெற்ற சேவை வழங்குநர்களின் நிதி மற்றும் தொழிற்பாட்டுச் செயலாற்றுகையினைப் பகுப்பாய்வு செய்வதன் ஊடாக துறைவாரியான செயலாற்றுகையினை மேற்பார்வை செய்தல்.
- இத்துறைக்கான பொருளாதாரப் பகுப்பாய்வை மேற்கொள்ளுதல்.
- இடைத் தொடர்பு மற்றும் சேவை வழங்குநர் இடைத் தொடர்பு ஏற்பாடுகளுக்கான வர்த்தக விதிமுறைகளை, ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காகத் தயாரித்தல்.
- சேவை வழங்குநர்களிடமிருந்து கணக்காய்வு செய்ய்பபட்ட நிதிக் கூற்றுக்கள் உரிய நேரத்தில் பெறப்படுவதை உறுதிப்படுத்துதல்.
- கிராமப் பிரதேசங்களில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அபிவிருத்திக்கான முன்மொழிவுகளை ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பித்து நிகழ்ச்சிகளைச் சிபாரிசு செய்தல்.
- இக்கைத்தொழில் தொடர்பான புள்ளிவிபரத் தகவல்களைச் சேகரித்து பகுப்பாய்வு செய்தல்.
- இக்கைத்தொழில் மூலம் அரசாங்க வரிகள் / தீர்வைகள் (தொலைத்தொடர்புத் தீர்வை, சர்வதேச தொலைத்தொடர்புச் சேவை வழங்குநர் தீர்வை) மற்றும் செஸ் வரி என்பன அறவிடப்படுவதை மேற்பார்வை செய்தல்.

## 8.2 செயலாற்றுகை

### 8.2.1 கட்டணங்களை ஒழுங்குபடுத்துதல்

இச்சட்டத்தின் பிரிவு 5 (ஓ) யின் கீழ் கட்டணத் திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்கும் அதிகாரம் இந்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதனால், அனுமதிப்பத்திரம்பெற்ற தொலைத்தொடர்புச் சேவை வழங்குநர்கள், தாங்கள் வழங்குகின்ற கட்டணத் திட்டங்களைச் சந்தைப்படுத்த முன்னர் அவற்றுக்கு ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெறுவது அவசியமாகும். இந்த வகையில், அவர்கள் காலத்துக் காலம் தாங்கள் எதிர்பார்க்கின்ற உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கான கட்டண முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கின்றனர். அரசாங்கக் கொள்கைகள், விதிகள், வழிகாட்டல்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றைக் கவனத்திற் கொண்டு இந்தக் கட்டணத் திட்டங்களை மிகவும் கவனமாக ஆராய்ந்ததன் பின்னர் ஆணைக்குழு அவற்றுக்கு அங்கீகாரம் வழங்கும். நீண்ட கால அடிப்படையிலான கட்ட அங்கீகாரங்கள், ஊக்குவிப்பு அடிப்படையிலான கட்டண அங்கீகாரங்கள் என இரண்டு வகையான கட்டண அங்கீகாரங்ககள் காணப்படுகின்றன.

அ) நீண்ட கால அடிப்படையிலான கட்டண அங்கீகாரங்கள் என்பது ஆணைக்குழுவின் தீர்மானமொன்றுக்கு இணங்க மீளாய்வு செய்யப்படும் வரை அல்லது முடிவுறுத்தப்படும் வரையில் நடைமுறையில் காணப்படக் கூடிய அங்கீகாரங்களைக் குறிக்கின்றது. சேவை வழங்குநர்கள் கட்டணங்களை மீளாய்வு செய்வதற்கு அல்லது தற்காலிகமாக அங்கீகாரம் வழங்கப்பட்ட கட்டணத் திட்டங்களைத் தொடர்ந்து பேணி வர வேண்டுமாயின் அல்லது அவர்கள் நீண்ட கால கட்டணத் திட்டமொன்றை வழங்க விரும்பினால் இந்த வகையின் கீழ் அவர்கள் தங்களது கட்டணத் திட்டங்களைச் சமர்ப்பிக்க முடியும்.

ஆ) இந்த இரண்டாம் வகை கட்டண அங்கீகாரம் ஊக்குவிப்பு அடிப்படையிலான கட்டண அங்கீகாரங்கள் என அழைக்கப்பட்ட போதும் உண்மையில் அவை ஊக்குவிப்புக்களைக் குறிக்கமாட்டாது. போட்டித் தன்மையின் காரணமாக சேவை வழங்குநர்கள் தங்களது போட்டியாளர்களின் கட்டணங்களுக்கு ஏற்பத் துரிதமாகத் தங்களது கட்டணங்களை முன்வைப்பது அவசியமாகும். மேலும், வாடிக்கையாளர் நடத்தையின் நிச்சயமற்ற தன்மையின் காரணமாக சேவை வழங்குநர்கள் சந்தையில் பரீட்சார்த்த முயற்சிகளைச் செய்வது அவசியமாக முடியும். அத்தகைய சந்தர்ப்பங்களில், சேவை வழங்குநர்கள் தங்களது ஊக்குவிப்பு அடிப்படையிலான கட்டணப் பிரேரணைகளைச் சமர்ப்பிப்பர். அதிகபட்சமாக மூன்று மாதங்களுக்கு ஆணைக்குழுவின் தற்காலிக அனுமதி வழங்கப்படும். சேவை வழங்குநர்கள் தங்களது கட்டணத் திட்டத்தைத் தொடர விரும்பினால் அவர்கள் நீண்ட கால அடிப்படையிலான கட்டண அங்கீகாரத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

2013 ஆம் ஆண்டில் மேற்குறித்த இரண்டு வகைகளின் கீழும் அங்கீகாரம் வழங்கப்பட்ட கட்டணத் திட்டங்களின் எண்ணிக்கை 161 ஆகும். இவற்றில் 25 நீண்ட கால அடிப்படையிலான கட்டண அங்கீகாரங்களும் 136 ஊக்குவிப்பு அடிப்படையிலான கட்டண அங்கீகாரங்களும் அடங்கும். 2013 ஆம் ஆண்டில், குரல் அழைப்புக்கள் மற்றும் குறுந்தகவல் சேவை என்பவற்றுக்கான கட்டணங்கள் எந்தவொரு மாற்றமும் இன்றித் தொடர்ந்து அதே நிலையில் காணப்பட்டன.

உலகில் மிகக் குறைந்த குரல் மற்றும் அகன்றபட்டை கட்டணங்களைக் கொண்ட நாடுகளில் ஒன்றாக இலங்கை விளங்குகின்றது. சர்வதேச தொலைத்தொடர்புச் சங்கத்தின் வெளயீடான "Measuring the information society 2013" என்ற சஞ்சிகை, நியாயமான விலை தொடர்பான பிரச்சினைகளை இலங்கை வெற்றிகரமாகத் தீர்த்துள்ளது எனக் குறிப்பிடுகின்றது. கையடக்கத் தொலைபேசிக் கட்டணங்களை பொறுத்தவரையில், 2013 ஆம் ஆண்டில் இலங்கை 14 ஆவது இடத்தைப் பெற்றிருந்தது. அதாவது 13 நாடுகள் மாத்திரமே இலங்கையை விடக் குறைவான கட்டணங்களைக் கொண்டிருந்தன. நிலையான அகன்றபட்டைக் கட்டணங்களைப் பொறுத்த வரையில் இலங்கை ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் 9 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. நியாயமான விலை என்பது பாவனையாளர்களின் ஊடுருவலுக்கான காரணிகளில் ஒன்றாக விளங்குகின்றது. அதனால், உலக ஏனைய நாடுகள் பல நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை மிகச் சிறந்ததொரு நிலையில உள்ளது எனலாம்.

### 8.2.2 தொழிற்பாட்டு மற்றும் நிதிச் செயலாற்றுகை

#### 8.2.2.1 தொழிற்பாட்டுச் செயலாற்றுகை

பாவனையாளர்களின் மொத்த எண்ணிக்கை, 2013 ஆம் ஆண்டின் இறுதியில் 23 மில்லியன்களாகக் காணப்பட்டது. இது 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2.8 சதவீத வீழ்ச்சியாகும். 2012 ஆம், 2013 ஆம் ஆண்டுகளில் நிலையான தொலைபேசிப் பாவனையாளர்களின் எண்ணிக்கை

எண்ணிக்கை முறையே 3,449, 391, மற்றும் 2,706,787 ஆகக் காணப்பட்டன. இது முன்னை வருடத்துடன் ஒப்பிடுகையில் 21.5 சதவீத வீழ்ச்சியாகும். இதற்கு மாற்றமாக, 2012 ஆம் ஆண்டில் 20,234,070ஆகக் காணப்பட்ட கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளரின் எண்ணிக்கை 20315,150 ஆக 0.4 சதவீதத்தால் அதிகரித்தது.

### 8.2.2.2 நிதிச் செயலாற்றுகை

#### I) முதலீடு

சேவை வழங்குநர்களால் செய்யப்பட்ட முதலீடுகள் தொடர்பான தகவல்கள் அட்டவணை 8.1 இல் தரப்பட்டுள்ளன 2012 ஆம் ஆண்டில் 20638 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட நிலையான தொலைபேசிச் சேவை வழங்குநர்களின் முதலீடு 2013 ஆம் ஆண்டில் 26.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 20,638 மில்லியன் ரூபாவாக் காணப்பட்டது. இக்காலப்பகுதியில் கையடக்கத் தொலைபேசிச் சேவைவழங்குநர்களின் முதலீடு 47.8 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

**தொலைத்தொடர்புச் சேவை வழங்குநர்களால் செய்யப்பட்ட முதலீடுகள், 2012-2013** அட்டவணை 8.1

| சேவை வழங்குநரின் வகை | முதலீடு (ரூபா மில்லியன்) | |
|---|---|---|
| | 2012 | 2013 |
| நிலையான தொலைபேசிச் சேவை வழங்குநர்கள் | 20,638 | 15,141 |
| கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குநர்கள் | 29,808 | 44,047 |
| நிலையான மற்றும் கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குநர்கள் | 50,446 | 59,188 |

குறிப்பு: சொத்துகள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் என்பன முதலீடுகளில் உள்ளடங்கும்.

கையடக்கத் தொலைபேசித் துறை 2012 ஆம் ஆண்டிலும் 2013 ஆம் ஆண்டிலும் அதிக முதலீடுகளைக் கவர்ந்துள்ளது. 2012 ஆம் ஆண்டில் 59.1 சதவீதமாகக் காணப்பட்ட மொத்த முதலீட்டில் கையடக்கத் தொலைபேசித் துறைக்கான முதலீடு, 2013 ஆம் ஆண்டில் 74.4 சதவீதமாக அதிகரித்தது. இது இக்காலப்பகுதியில் சேவை வழங்குநர்களின் கவனம் கையடக்கத் தொலைபேசித் துறையின் மீது குவிக்கப்பட்டிருந்ததைக் காட்டுகின்றது.

நிலையான மற்றும் கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குநர்களின் வருமானம் 2012-2013 அட்டவணை 8.2

| சேவை வழங்குநரின் வகை | முதலீடு (ரூபா மில்லியன்) | |
|---|---|---|
| | 2012 | 2013 |
| நிலையான தொலைபேசிச் சேவை வழங்குநர்கள் | 43,403 | 46,318 |
| கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குநர்கள் | 101,702 | 111,583 |
| நிலையான மற்றும் கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குநர்கள் | 145,105 | 157,901 |

#### II ) வருமானம்

நிலையான தொலைபேசிச் சேவை வழங்குநர்களினதும் கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குநர்களினதும் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்கான வருமானம் அட்டவணை 8.2 இல் தரப்பட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013 நிலையான தொலைபேசிக் கைத்தொழிலின் வருமானம் 6.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளதுடன் கையடக்கத் தொலைபேசித் துறையின் வருமான 9.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இந்த இரு துறைகளினதும் மொத்த வருமானம் இக்காலப்பகுதியில் 8.8 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. நிலையான தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி ஆகிய துறைகள் மொத்த வருமானத்திற்குச் செய்த பங்களிப்பு 2012 ஆம் ஆண்டில் முறையே 29.9 சதவீதமாகவும் 70.1 சதவீதமாகவும் காணப்பட்டது. இந்த பங்களிப்பு வீதம் 2013 ஆம் ஆண்டில் முறையே 20.3 சதவீதமாகவும் 70.7 சதவீதமாகவும் காணப்பட்டது (வரைபு 8.1). இந்த இரண்டு வருடங்களிலும் மொத்த வருமானத்தில் 70% இற்கு மேற்பட்ட பகுதி கையடக்கத் தொலைபேசித் துறையின் பங்களிப்பாக அமைந்துள்ளதை இதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

மொத்த வருமானத்திற்கான பங்களிப்பு வீதம் 2012-2013 வரைபு 8.1




### III) கைத்தொழிலின் தேறிய இலாபம்/ நட்டம்

2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளில் நிலையான மற்றும் கையடக்கத் தொலைபேசித் துறைகளின் தேறிய இலாபங்களை/ நட்டங்களை அட்டவணை 8.3 காட்டுகின்றது.

நிலையான மற்றும் கையடக்கத் தொலைபேசித் துறைகளின் தேறிய இலாபம்/ நட்டம், 2012-2013 அட்டவணை 8.3

| சேவை வழங்குநரின் வகை | முதலீடு (ரூபா மில்லியன்) | |
|---|---|---|
| | 2012 | 2013 |
| நிலையான தொலைபேசிச் சேவை வழங்குநர்கள் | 3,304 | 2,962 |
| கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குநர்கள் | (1,970) | (143) |
| நிலையான மற்றும் கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குநர்கள் | 1,334 | 2,819 |

2012 ஆம் ஆண்டில் 3,304 மில்லியன் ரூபாவாகக் காண்பபட்ட நிலையான தொலைபேசிச் சேவை வழங்குநர்களின் தேறிய இலாபம் 2013 ஆம் ஆண்டில் 10.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 2,962 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது. கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குநர்கள் 2012 ஆம் ஆண்டிலும் 2013 ஆம் ஆண்டிலும் நட்டங்களை எதிர்நோக்கினர். எவ்வாறாயினும், 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டில் நட்டத்தின் அளவு குறைவடைந்து காணப்பட்டது. 2012 ஆம் ஆண்டிலும் 2013 ஆம் ஆண்டிலும் அடைந்த முன்னேற்றங்கள் முறையே 1,970 மில்லியன் ரூபா, 143 மில்லியன் ரூபா எனக் காணப்பட்டது. இது 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2013 ஆம் ஆண்டில் கையடக்கத் தொலைபேசிக் கைத்தொழிலின் நட்டங்கள் 93 சதவீதத்ததால் வீழ்ச்சியடைந்துள்ளன. 2012 ஆம் ஆண்டில் 1.3 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட இரண்டு துறைகளினதும் தேறிய இலாபம் 2013 ஆம் ஆண்டில் 2.8 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. தேறிய இலாபத்தில்/நட்டத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் வரைபு 8.2 இல் வரைபுகளாகக் காட்டப்பட்டுள்ளன.

சேவை வபழங்குநர்களின் தேறிய இலாம்/நட்டம், 2012-2013 வரைபு 8.2




## VI) சேவைகள் வழங்கப்படாத மற்றும் குறைவாகச் சேவை வழங்கப்படும் பிரதேசங்களுக்கு வலையமைப்பை விரிவாக்க்குவதற்கான நிதி விடுவிப்புக்கள்

இலங்கையினுள் முடிவுறுத்தப்படும் உள்வரும் சர்வதேச அழைப்புக்காகவும் சர்வதேச சேவை வழங்குநர்கள், சர்வதேச தொலைத்தொடர்புச் சேவை வழங்குநர் தீர்வையொன்றை (ITO Levy) இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்குச் செலுத்துகின்றனர். இத்தீர்வையின் வரையறுக்கப்பட்ட சதவீதமொன்று தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணமாகக் கருதப்படுகின்றது. இது இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு நேரடியாகச் செலுத்தப்படுகின்றது. ஒவ்வொரு சேவை வழங்குநரும், சேவை வழங்குநரினால் இந்த தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணத்திற்குச் செலுத்தப்படும் இந்த நிதியத்தில் மூன்றில் இரண்டு பங்கினை மூன்று வருட காலத்தினுள் சேவைகள் வழங்கப்படாத மற்றும் குறைவாகச் சேவை வழங்கப்படும் பிரதேசங்களில் தொலைத்தொடர்பு வலையமைப்பு அபிவிருத்திக்குப் பயன்படுத்துவதற்குக் கோர முடியும். உலகளாவிய சேவைக் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான வசதி ஏற்பாடாக, இந்த தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டண நிதிகளை விடுவிப்பதற்கான வழிகாட்டல்கள், இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் உருவாக்கப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் (2009/2010) இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, கிராமப் புறங்களில் புதிய கோபுரங்களினதும் தள நிலையங்களினதும் நிர்மாணத்திற்காக 1696 மில்லியன் ரூபாவையும் பின்தங்கிய பிரதேசங்களில் 7700 நிலையான கம்பித் தொலைபேசி இணைப்புக்களை உருவாக்குவதற்காக 389 மில்லியன் ரூபாவையும் விடுவிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த விடுவிப்புச் செயற்திட்டத்தின் மூலம் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, நீதியானதும், நியாயமானதும், தாங்கிக்கொள்ளக் கூடியதுமான விலைகளில் தொலைத்தொடர்புச் சேவைகள் கிடைப்பதையும் நாடு முழுவதிலும் முன்னேற்றிகரமான தொலைத்தொடர்புச் சேவைகளைப் பெறுவதற்கான வசதி அதிகரிப்பதையும் ஊக்குவித்துள்ளதுடன் கிராமிய, வருமானம் குறைந்த நகர மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட சமுதாயங்களுக்கும் சேவைகளை விரிவுபடுத்துவதற்கு சேவை வழங்குநர்களுக்கு உற்சாகமளித்துள்ளது. உலகளாவிய சேவைக் கடப்பாடுகளை மேலும் பயனுறுதி வாய்ந்த முறையில் பூர்த்திசெய்வதற்காக இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டண நிதியத்தை வெளிப்படைத்தன்மையுடன் பயன்படுத்தியுள்ளது.

அத்தியாயம்
9

# இணக்கப்பாட்டுப் பிரிவு

**சுருக்க அறிமுகம்**

இலங்கையில் தேசிய மற்றும் சர்வதேச தொலைத்தொடர்புச் சேவைகள், நம்பகமான முறையிலும் வினைத்திறன்மிக்க முறையிலும் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதும் இவ் ஆணைக்குழுவின் பிரதான குறிக்கோள்களில் ஒன்றாகும். இந்நோக்கத்தின் அடிப்படையில் நம்பகமான, வினைத்திறன்மிக்க, தரம்வாய்ந்த தொலைத்தொடர்புச் சேவைகளை வழங்கும் விடயத்தில் தொலைத்தொடர்புச் சேவை வழங்குநர்கள் தங்களது ஒழுங்குபடுத்தல் கடப்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுகின்றார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காக ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளன. இதற்காக இத்துறையில் தொடர்ச்சியாகக் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் பொருத்தமான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை அமுலாக்குவதும் அவசியமாகும். வாடிக்கையாளர்களின் முறைப்பாடுகளை விசாரித்து அவர்களது பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வுகளைக் கண்டறிவது வாடிக்கையாளர்களைத் திருப்தியடையச் செய்யும் என்பதுடன் இத்துறையின் முழுமையான மேம்பாட்டுக்கும் உதவும். இந்தப் பொறுப்புக்கள் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டுப் பிரிவினால் கையாளப்பட்டன.

## 9. 1 தொழிற்பாடுகள்

- சேவை வழங்குநர்கள், நியதிச் சட்டங்களுக்கும் அனுமதிப்பத்திரங்களின் விதிமுறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும், தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் அவர்களுக்கு வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கும் கட்டளைகளுக்கும் தீர்மானங்களுக்கும் இணங்கச் செயற்படுவதை மேற்பார்வை செய்து தேவையான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகும்.
- சேவையின் தரத்தை மேற்பார்வை செய்தல்
- வாடிக்கையாளர்களின் முறைப்பாடுகளுக்குத் தீர்வு வழங்குதல்
- தொலைத்தொடர்புடன் தொடர்புடைய பிரச்சினைகள் தொடர்பில் பொது மக்களுக்கு அறிவூட்டுவதற்கான விழிப்பு நிகழ்ச்சிகளை நடாத்துதல்.

## 9.2 செயலாற்றுகை

### I) கண்காணிப்புச் செயற்பாடுகள்

இப்பிரிவு பின்வரும் விடயங்களை மேற்பார்வை செய்து, பகுப்பாய்வு செய்து, ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

i. கட்டணங்கள், சட்டவிரோதமான முடிவுறுத்தல் போன்றவை உள்ளிட்ட அனுமதிப்பத்திர நிபந்தனை மீறல்கள்.

ii. அனுமதிப்பத்திரம்பெற்ற சேவை வழங்குநர்கள் அனுமதிக்கப்படாத சேவைகளை வழங்குதல்.

iii. விற்பனையாளர்கள் வகை அங்கீகரிக்கப்படாத சுங்க நிலை தொலைத்தொடர்புச் சாதனங்களை விளம்பரம் செய்தல் மற்றும் விற்பனை செய்தல்.

iv. அனுமதிப்பத்திரம்பெற்ற சேவை வழங்குநர்களால் வழங்கப்படும் தொலைத்தொடர்புச் சேவைகள் தொடர்பில் பிழையான தகவல்களை வெளியிடுதல்.

2013 ஆம் ஆண்டில் இணக்கப்பாட்டுப் பிரிவு பெருந் தொகையான கட்டண மீறல் பிரச்சினைகள் தொடர்பில் புலன் விசாரணைகளை நடாத்தியது. இந்த புலன் விசாரணைகள் இணக்கப்பாட்டுப் பிரிவின் முன்னெடுப்பாகவும் இப்பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்டன. பெருந்தொகையான கட்டண மீறல்கள், அனுமதிப்பத்திரம்பெற்ற சேவை வழங்குநர்களால், அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை விலைக்குக் குறைவான கட்டணப் பொதிகளாக வழங்கப்பட்டவையாகும். அனுமதிப்பத்திரம்பெற்ற சேவை வழங்குநர்களால் மேற்கொள்ளப்படும் இத்தகைய மீறல்களைக் குறைப்பதற்கான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

## II) சேவைச் செயற்பாடுகளின் தரம்

சேவை வழங்குநர்களால் வழங்கப்படும் தொலைத்தொடர்புச் சேவைகள், ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்டுள்ள தரநியமங்களைப் பூரத்தி செய்பவையாக உள்ளனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக அச்சேவைகளின் தரத்தை இப்பிரிவு மேற்பார்வை செய்கின்றது. மீளாய்வு செய்யப்படும் வருடத்தில் பின்வரும் பிரதான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

i. அனுமதிப்பத்திரம்பெற்ற சேவை வழங்குநர்கள்/ அனுமதிப்பத்திரங்களை வைத்திருப்பவர்கள் சேவைகளின் தர நியமங்களுக்கும் விதிமுறைகளுக்கும் இணங்கச் செயற்படாமை மற்றும் வாடிக்கையாளர் வளவு உபகரண வகைக் குறிப்புக்கள் மீறப்படுதல் தொடர்பில் கண்காணித்து பகுப்பாய்வு செய்து ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

ii. வளர்ச்சியடைந்து வரும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ற வகையில் தற்போது நடைமுறையிலுள்ள சேவைத் தர நியமங்கள் மற்றும் விதிமுறைகளைத் திருத்துதல்.

சேவைத் தர ஒழுங்குபடுத்தல்களுக்கான தற்போது நடைமுறையிலுள்ள நியதிச்சட்டக் கட்டமைப்பு, வளர்ச்சியடைந்து வரும் தொழில்நுட்பங்களுக்குப் பொருந்தக்கூடியவாறு திருத்தப்படுவது அவசியமாகும். அதனால், நிலையான மற்றும் கையடக்கத் தொலைபேசி குரல் அழைப்புச் சேவைகளுக்கான சேவைத் தரக் கட்டமைப்பை உருவாக்குவதற்காகப் பொது மக்களிடம் கருத்துக்களைக் கோரும் பணி 2013 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது நடைமுறையிலுள்ள சேவைத் தர விதிமுறைகள் மற்றும் நியமங்களைத் திருத்தும் பணி, பொது மக்களின் கருத்துக்களைப் பெறும் பணி பூர்த்தியடைந்ததன் பின்னர் 2014 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படும்.

## III) தொலைந்த கையடக்கத் தொலைபேசிகளுடன் தொடர்புடைய விடயங்களைக் கையாளுதல்

ஒரு சமூகக் கடமை என்ற வகையில், இணக்கப்பாட்டுப் பிரிவு தொலைந்த கையடக்கத் தொலைபேசிகளைக் கண்டுபிடிக்கும் பணியில் செயலூக்கத்துடன் ஈடுபட்டு வருகின்றது. சராசரியாக தினமும் 200 முறைப்பாடுகள் என்ற வகையில் இது வரையில் ஏறக்குறைய 100,000 தொலைந்த கையடக்கத் தொலைபேசிகள் தொடர்பான விண்ணப்பங்களையும் வாடிக்கையாளர் முறைப்பாடுகளையும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு ஏற்றுக்கொண்டுள்ளதுடன் பொது மக்கள் விழிப்பூட்டல் பிரிவு 2013 ஆம் ஆண்டில் தொலைந்த கையடக்கத் தொலைபேசிகள் பலவற்றைக் கண்டுபிடிப்பதில் பொலிஸாருக்கு உதவிகளை வழங்கியது.

## IV) பொது மக்களுக்கான விழிப்பு நிகழ்ச்சிகள்

வாடிக்கையாளர் முறைப்பாடுகளைப் பகுப்பாய்வு செய்து பார்க்கையில், தொலைபேசிகளின் பயன்பாடு மற்றும் ஏனைய தொடர்புடைய பிரச்சினைகள் தொடர்பில் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் அவசியம் தெரிவந்தது. அதனால், தொலைத்தொடர்புடன் தொடர்புடைய பிரச்சினைகள் தொடர்பில் பொது மக்களுக்கு அறிவூட்டுவதற்கான பரந்த அளவிலான விழிப்பூட்டல் நிகழ்ச்சிகளை இணக்கப்பாட்டுப் பிரிவு நடாத்தியது. தொலைத்தொடர்பு தொடர்பான குற்றங்களை நேரடியாகக் கையாள்கின்ற பொலிஸ் உத்தியோகத்தர்களுக்காக ஒரு நாள் செயலமர்வுகள் பலவற்றை இப்பிரிவு ஏற்பாடு செய்தது. தொலைத்தொடர்புச் சேவை வழங்குநர்களின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களும் இச்செயலமர்வுகளுக்கான வளவாளர்களாகப் பங்கேற்றனர்.

எதிர் காலத்தில் தொலைத்தொடர்புப் பாவனையாளர்களாக மாறவுள்ள பாடசாலைப் பிள்ளைகளுக்கான விழிப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றை இணக்கப்பாட்டுப் பிரிவு நடைமுறைப்படுத்தியது. கொழும்பு மாவட்டத்திலுள்ள முன்னணிப் பாடசாலைகள் மத்தியில் ஆறு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. இணக்கப்பாட்டுப்

**வாடிக்கையாளர் முறைப்பாடுகளுக்குத் தீர்வுகாணும் செயன்முறை** வரைபு 9.1



பிரிவு, இந்த விழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை, பிள்ளைகளின் பிரச்சினைகளை நேரடியாகக் கையாளும் பாடசாலை ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலை அதிபர்கள், கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்காகவும் விரிவுபடுத்தியுள்ளது. இணக்கப்பாட்டுப் பிரிவு இவ்வாறான நிகழ்ச்சியொன்றை மேல் மாகாணத்திலுள்ள கல்விப் பணிப்பாளர்களுக்காக மேல் மாகாணக் கல்வி அமைச்சில் நடாத்தியது. அடுத்த வருடத்திலும் இந்த நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த விழிப்பு நிகழ்ச்சியின் ஓர் அங்கமாக, இணக்கப்பாட்டுப் பிரிவு செய்தித்தாள்களில் (ஏறக்குறைய 100) ஆக்கங்களை வெளியிட்டதுடன் சில வானொலி.். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றது.

### V) வாடிக்கையாளர் முறைப்பாடுகளைத் தீர்த்தல்

கையடக்கத் தொலைபேசித் துறையினால் உந்தப்பட்டு (நிலையான மற்றும் கையடக்கத் தொலைபேசி ஆகிய இரண்டு) துறைகளின் கூட்டு ஊடுருவல் வீதம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 100% ஆகக் காணப்படுவதனால் அண்மைக்காலம் முதல் இலங்கையின் பொருளாதாரத்தில் மிகத் துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் துறையாக தொலைத்தொடர்புத் துறை விளங்குகின்றது. மேலும், பல நிறுவனங்கள் இச்சந்தையில் நுழைந்தமையானது இத்துறையை அதிக போட்டித் தன்மை கொண்டதாக மாற்றியது. இத்துறையில் ஏற்பட்ட இரட்டைத் தன்மை அபிவிருத்தியுடன் இணைந்த வகையில் பொது மக்களால் சமர்ப்பிக்கப்படும் தொலைத்தொடர்பு தொடர்பான முறைப்பாடுகளின் எண்ணிக்கையும் பாரியளவிலான அதிகரித்து வருகின்றது. அதனால், சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க இந்த முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த வகையில், தொலைத்தொடர்புத் துறையுடன் தொடர்புடைய பிரச்சினைகள் தொடர்பில் பொது மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் இணக்கப்பாட்டுப் பிரிவினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள், தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக உரிய சேவை வழங்குநர்களுக்கு அனுப்பப்பட்டன. இணக்கப்பாட்டுப் பிரிவு, அம்முறைப்பாடுகள் தொடர்பில் சேவை வழங்குநர்களுடன் தொடர்பு கொண்டு குறித்த முறைப்பாடுகளுக்கு நியாயமானதும் நீதியானதுமான தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. சேவை வழங்குநரால் வழங்கப்பட்ட தீர்வு தொடர்பில் வாடிக்கையாளர் திருப்தியடையாதவிடத்து, இணக்கப்பாட்டுப் பிரிவின் பிரதிப் பணிப்பாளரின் பங்கேற்புடன் இரண்டு தரப்புக்களும் சந்தித்துப் பேசித் தீர்ப்பதற்கான கூட்டம் ஒன்றும் நடாத்தப்பட்டது. இரு தரப்பினரும் சுமுகமான தீர்வை எட்டுவதற்கான வசதி ஏற்பாடுகளை இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு செய்து கொடுத்தது. வாடிக்கையாளர் முறைப்பாடுகளைக் கையாள்வதுடன் தொடர்புடைய செயற்பாடுகளின் சுருக்கம் வரைபு 9.1 இல் தரப்பட்டுள்ளன.

அத்தியாயம்

# 10 சட்டப் பிரிவு

**சுருக்க அறிமுகம்**

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, இலங்கையில் தொலைத்தொடர்புக் கைத்தொழிலை ஒழுங்குபடுத்துவதற்கான நியதிச் சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒழுங்குபடுத்தல் சபையாக விளங்குகின்றது. இவ் ஆணைக்குழுவுக்கு அரையளவான நீதித்துறைத் தொழிற்பாடுகளுக்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், ஆணைக்குழுவின் தீர்மானங்களும் கட்டளைகளும் சட்டத்தின் இயற்கை நீதிக் கோட்பாட்டு விதிமுறைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்றன. ஆணைக்குழுவின் சட்டப் பிரிவு, ஆணைக்குழுவின் தீர்மானம் எடுக்கும் செயன்முறையில் சட்ட ஆலோசனை வழங்குவதன் மூலமும் நடைமுறைகளை உருவாக்குவதன் மூலமும் ஆணைக்குழுவுக்கு உதவும் ஒரு முக்கியமான பணியை மேற்கொள்கின்றது. சட்டப் பிரிவின் தொழிற்பாடுகளும் 2013 ஆம் ஆண்டில் அதன் செயலாற்றுகையும் கீழே தரப்படுகின்றன.

## 10.1. தொழிற்பாடுகள்

- சட்ட ஆலோசனை தேவைப்படும் விடயங்கள் / ஆவணங்கள் தொடர்பில் ஆணைக்குழுவுக்கு சட்டக் கருத்துக்களை / ஆலோசனைகளை வழங்குதல்.
- ஆணைக்குழுவின் சார்பில் விதிமுறைகள், ஒழுங்குவிதிகள், கட்டளைகள், அறிவுறுத்தல்கள், வழிகாட்டல்கள், அனுமதிப்பத்திரங்கள் என்பவற்றை வரைதல்.
- சட்ட நடவடிக்கை நோக்கங்களுக்காக கௌரவ சட்டமா அதிபரின் அல்லது தனியார் சட்டதரணிகளின் ஆலோசனைகளைப் பெறுதல்.
- சட்ட நடவடிக்கைகளிலும் அவற்றுடன் தொடர்புடைய அவற்றுக்கான கோவைகளைத் தயாரித்தல் உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் ஆணைக்குழுவைப் பிரதிநிதித்துவம் செய்தல்.
- ஆணைக்குழுவுக்காக உத்தியோகபூர்வக் கடிதங்கள் மற்றும் ஏனைய தொடர்பாடல்கள், அதிகாரமளிப்புத் பத்திரங்கள், ஆணைக்குழுவுக்கான ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகள் என்பவற்றின் நகல் வரைபுகளைத் தயாரித்தல்
- இலங்கை தொலைத்தொடர்புச் சட்டத்தின் பிரிவு 18 அ வின் கீழ் மீள் விற்பனையாளர் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.
- இலங்கை தொலைத்தொடர்புச் சட்டத்தின் கீழும் 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழும் எடுக்கப்படும் அமுலாக்கல் நடவடிக்கைகளுக்காகவும் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளுக்காக ஏனைய பிரிவுகளுக்கு சட்ட உதவிகளை வழங்குதல்.
- தொலைத்தொடர்புடன் தொடர்புடைய விடயங்களில் ஏனைய நிறுவனங்களுக்கு சட்ட உதவிகளை வழங்குதல்.

## 10.2. செயலாற்றுகை

2013 ஆம் ஆண்டில் சட்டப் பிரிவு, வானொலி அனுமதிப்பத்திரம் வழங்கல், விற்பனையாளர் அனுமதிப்பத்திரம் வழங்கல், கட்டணங்கள், இணக்கப்பாட்டுப் பிரச்சினைகள், விழிப்புணர்வு சார்ந்த பிரச்சினைகள் என்பன தொடர்பிலும் நிர்வாகம் மற்றும் மனித வளத்துடன் தொடர்புடைய உள்ளக

விடயங்கள் என்பன தொடர்பிலும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கும் அதன் பல்வேறு பிரிவுகளுக்கும் சட்ட உதவிகளை வழங்கியது. இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் சார்பில் சட்டப் பிரிவின் உத்தியோகத்தர்கள் நீதிமன்றங்களின் முன்னிலையில் ஆஜராகினர். குறித்த சில வழக்குகளில் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களத்தினதும் தனியார் சட்டதரணிகளினதும் சேவைகளைப் பெற்றுக்கொண்டது. சட்டச் செலவுகளுக்கான 2013 ஆம் ஆண்டுக்கான செலவுத் திட்ட ஒதுக்கீடுகளில் சுமார் 25% ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்பட்டது. சட்டப் பிரிவினால் 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செயற்பாடுகளின் சுருக்கமான விபரமொன்று கீழே தரப்படுகின்றது:-

**சட்ட நடவடிக்கைகள்**

### 10.2.1. உயர் நீதிமன்ற / மேன்முறையீடு நீதிமன்ற வழக்குகள்

2013 ஆம் ஆண்டில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை சில வழக்குகள் மேன்முறையீடு நீதிமன்றத்தில் நிலுவையாகக் காணப்படுகின்றன. இந்த வழக்குகள், அடிப்படையில் ஒலிபரப்பரப்புக் கம்பனிகளால் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டவையாகும்.

### 10.2.2. நீதிமன்றங்களிலும்/ நியாயசபைகளிலும் ஆணைக்குழுக்களிலும் நடைபெறும் ஏனைய வழக்குகளில் ஆஜராகுதல்

2013 ஆம் ஆண்டில் மற்றும் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதுடன் முன்னைய வருடத்திலிருந்து தொடர்ந்து நடாத்தப்படும் வழக்குகளும் காணப்படுகின்றன. அவற்றில் மாவட்ட நீதிமன்றங்கள், வர்த்தக மேல் நீதிமன்றம் என்பவற்றிலுள்ள பண அறவீடு தொடர்பான வழக்குகளும் தொழில் நியாயசபைகள், கைத்தொழில் நீதிமன்றங்கள் என்பவற்றிலுள்ள மனித வளங்கள் தொடர்பான வழக்குகளும் அடங்கும்.

இரண்டு தரப்பினரால் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இரண்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இவற்றின் தீர்ப்புக்கள் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்குச் சார்பாக அமைந்தன.

சட்ட அமுலாக்கத்தைத் தூண்டுவதற்கான நடவடிக்கையின் ஓர் அங்கமாக, இலங்கை தொலைத்தொடர்புச் சட்டத்தைத் மீறும் குற்றங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது

### 10.2.3. ஏனைய விடயங்கள்

2013 ஆம் ஆண்டில் சர்வதேச வலைப்பின்னல் தொடர்பான முறைப்பாடுகளில் உறுதியான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. நீதிமன்றக் கட்டளைகளின் அடிப்படையிலும் குறித்த துறைகளில் அவ்வாறு தடைகளை விதிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்களின் அறிவுறுத்தல்களுக்கு இணங்கவும் குறித்த சில இணையத்தளங்களைப் பார்வையிடுவதற்கான வசதியின் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இவ்வருடத்தில் சட்டப் பிரிவு, கையடக்க/ நிலையான தொலைபேசி இணைப்புக்கள் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கான கோரிக்கைகளுடன் தொடர்புடைய நீதிமன்றக் கட்டளைகளுடன் தொடர்புடைய அதிகமான செயற்பாடுகளை அதிகளவில் மேற்கொண்டது.

அத்தியாயம்

11

# நிர்வாக மற்றும் நிறுவன அலுவல்கள் பிரிவு

**சுருக்க அறிமுகம்**

நிர்வாக, நிறுவன அலுவல்கள் பிரிவின் விடயப் பரப்பு மிகவும் பரந்ததாகும். நிறுவனத்தின் சுமுகமான தொழிற்பாட்டுக்கு அவசியமான பரந்த அளவிலான பணிகள் அதில் உள்ளடங்கும். இப்பணிகளில், திட்டமிடல், ஏற்பாடுசெய்தல், வழிநடாத்துதல், கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு, நிறுவனத்தின் உள்ளேயான ஒருங்கிணைப்பு, வெளி நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு, தாபனச் செயற்பாடுகள், மதிப்பீடு, பயிற்சி, கொடுப்பனவுகளுக்கு சிபாரிசு செய்தல்/ அங்கீகாரம் வழங்குதல், பொருட்கள் மற்றும் சேவைகளின் பெறுகை, போக்குவரத்து வசதிகளை வழங்குதல், ஊழியர் நலனோம்பல், வேலைகளின் தரத்தை மேம்படுத்திப் பேணி வருவதற்கு உகந்த பௌதிகச் சூழலொன்றை உருவாக்குதல், தகவல் தொழில்நுட்ப வசதிகளையும் நூலக வசதிகளையும் வழங்குதல், ஆணைக்குழுவின் முக்கிய நிகழ்வுகளின் ஊடகப் பதிவு என்பன போன்ற பல்வேறு விடயப் பரப்புக்கள் உள்ளடங்கும். இப்பொறுப்புக்கள் அனைத்தும் நிர்வாக, நிறுவன அலுவல்கள் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. நிர்வாக, நிறுவன அலுவல்கள் பிரிவினால் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட தொழிற்பாடுகளும் அவற்றின் செயலாற்றுகையும் கீழே தரப்படுகின்றன.

## 11.1 தொழிற்பாடுகள்

- மனித வள முகாமை மற்றும் பொது நிர்வாகத்துடன் தொடர்புடைய சட்ட திட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் நடைமுறைகளைத் தயாரித்தமை
- ஊழியர்களின் ஆட்சேர்ப்பு, பதவியில் நிரந்தரமாக்குதல், செயலாற்றுகைத் தரங்கணிப்பு, தரமுயர்வுகள், விடுமுறைப் பதிவுகள், தினவரவு, இடமாற்றங்கள், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, விடுவிப்பு, ஓய்வு வழங்குதல் என்பவற்றுடன் தொடர்புடைய அனைத்து விடயங்களையும் மேற்கொண்டமை
- ஊழியர்களின் தனிப்பட்ட கோவைகளைப் பேணி வந்தமை
- உரிய சிரேஷ்ட முகாமையாளர்களின் ஆலோசனையுடன் ஒவ்வொரு பதவிக்குமான கடமை விபரங்களுடன் ஆணைக்குழுவுக்கான ஆளணித் திட்டத்தைத் தயாரித்தமை
- சிரேஷ்ட தொழிற்பாட்டுத் தலைவர்களைக் கொண்டதாக மனித வள அபிவிருத்தி வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தமை.
- வருடாந்த ஊழியர் பயிற்சி நிகழ்ச்சிகளைத் தயாரித்தமை.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆளணியினருக்கான பயிற்சிச் செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்தமையும் பயிலுநர்களுக்காக தேவையான பிரயாண, பதிவு மற்றும் ஏனைய ஏற்பாடுகளைச் செய்தமையும்.
- ஆண்டறிக்கை, நிறுவனத் திட்டம் செயற்பாட்டுத் திட்டம் என்பவற்றைத் தயாரித்தலுடன் தொடர்புடைய செயற்பாடுகளை ஒருங்கிணைத்தமை.
- பாதுகாப்புச் சேவை, துப்புரவுச் சேவை, கட்டடப் பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு என்பவற்றுடன் தொடர்புடைய செயற்பாடுகளை ஒருங்கிணைத்தமை.

- வினைத்திறன்மிக்க முறையில் மின்சார, நீர் மற்றும் தொலைபேசிச் சேவைகளின் விநியோகத்தை உறுதிசெய்தமை.
- வாகனத் தொகுதியின் பரமரித்தமை
- இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஏனைய பிரிவுகளின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான ஏற்பாட்டுச் சேவை உதவிகளை வழங்கியமை
- கொடுப்பனவுகளுக்கான சிபாரிசு/அங்கீகாரம் வழங்கியமை
- இருப்புக்கள், பதிவு அறை என்பவற்றின் பராமரிப்பு
- வருடாந்த மதிப்பாய்வுச் சபையினை நடாத்தியமையும் அவசியமற்ற பொருட்களை அகற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தமையும்
- பாராளுமன்ற வினாக்களுக்கான பதில்களைச் சமர்ப்பித்தல், கணக்காய்வாளர் நாயகத்திற்கும் பொதுத் தொழில்முயற்சிகள் குழுவுக்கும் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல், அமைச்சரவை விஞ்ஞாபனங்களைச் சமர்ப்பித்தல் என்பவற்றுடன் தொடர்புடைய செயற்பாடுகளை ஒருங்கிணைத்தமை.
- பொது தொழில்முயற்சிகள் திணைக்களம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம், தேசிய சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழு என்பவற்றுடனான தொடர்பாடல் செயற்பாடுகளை மேற்கொண்டமை.
- வருடாந்த தேசத்துக்கு மகுடம் கண்காட்சியில் பங்கேற்பதற்கான அனைத்துச செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்தமை.
- தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதிசெய்தமை
- ஊழியர்களுக்கான ஆயுட் காப்புறுதி மற்றும் மருத்துவக் காப்புறுதித் திட்டங்களை நிர்வகித்தமை
- ஊழியர்களுக்கு நலனோம்பல் சேவைகளை வழங்குவதற்காக ஒருங்கிணைப்பு, துக்ககரமான நிகழ்வுகளைக் கையாளல், நிதி ரீதியான மற்றும் நிதியல்லாத ஊக்குவிப்புப் பொதிகளை வழங்குவதற்கான உளவள ஆலோசனை வழங்கியமை.
- நிறுவனத்தின் சமூகப் பொறுப்புணர்வு நிதியத்தைக் கையாண்டமை.
- இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தகவல் தொழில்நுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய்தமை
- வினைத்திறன்மிக்க நூலகச் சேவையொன்றை வழங்கியமை
- ஊடகச் செயற்பாடுகளை நிர்வகித்தமை.

## 11.2. செயலாற்றுகை

### 11.2.1. பதவியணி மற்றும் நிறுவனக் கட்டமைப்பு மீளாய்வு.

2013 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஊழியர் தொகை 201 ஆகும். அவர்களில் 08 பேர் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலுள்ளவர்களாகவும் 26 பேர் நடுத்தர முகாமைத்துவ மட்டத்திலுள்ளவர்களாகவும் 119 பேர் துணைப் பதவிகளை வகிப்பவர்களாகவும் 48 பேர் சிற்றூழியர்களாகவும் இருந்தனர். இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கான அனுமதியளிக்கப்பட்ட பதவியணி 290 ஆகும்.

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கான முதலாவது பதவியணியையும் நிறுவனக் கட்டமைப்பை சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழு 1997 ஆம் ஆண்டில் சிபாரிசு செய்திருந்தது. 1997 இற்கும் 2012 இற்கும் இடைப்பட்ட காலத்தில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் உடன்பாட்டுடன் பதவியணி 06 சந்தர்ப்பங்களில் மீள்கட்டமைப்புச் செய்யப்பட்டது.

தொலைத்தொடர்புத் துறையில் ஏற்பட்டுள்ள பாரிய அபிவிருத்திகளின் விளைவாக இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தொழிற்பாடுகளிலும் கடமைகளிலும் ஏற்பட்டுள்ள விரிவாக்கங்களைக் கவனத்திற் கொண்டு, சிரேஷ்ட முகாமைத்துவம், நடுத்தர முகாமைத்துவம், கனிஷ்ட முகாமைத்துவம், துணச் சேவைகள், ஆரம்பநிலை ஆகிய 5 மட்டங்களிலும் அதிகரித்த பதவியணியைக் கொண்ட புதிய நிறுவனக் கட்டமைப்பு ஒன்றுக்கு இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியது. நிதி திட்டமிடல் அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம், சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் உடன்பாட்டுடன் 2013 ஆம் ஆண்டில் மீளாய்வு செய்யப்பட்ட பதவியணிக்கு அங்கீகாரம் வழங்கியது.

ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட திருத்தப்பட்டவாறான நிறுவனக் கட்டமைப்பு வரைபு 11.1 இல் தரப்பட்டுள்ளது.


ஆணைக்குழு
(05 அங்கத்தவர்கள் - தலைவர், 03 நியமன அங்கத்தவர்கள் மற்றும் பணிப்பாளர் நாயகம்
பணிப்பாளர் நாயகம்
மேலதிகப் பணிப்பாளர் நாயகம் பொது ஸ்பெக்ரம் முகாமை, வலையமைப்பு மற்றும் தொழில்நுட்பம்
மேலதிகப் பணிப்பாளர் நாயகம் பொருளாதார மற்றும் சட்ட விவகாரங்கள்
மேலதிகப் பணிப்பாளர் நாயககம் நிர்வக, நிறுவன அலுவல்கள் மற்றும் நிதி
பணிப்பாளர் ஸ்பெக்ரம் முகாமை.
பணிப்பாளர் அனுமதிப்பத்திரம் வழங்கல், சர்வதேச விவகாரங்கள், மற்றும் கொள்கை
பணிப்பாளர் வலையமைப்பு மற்றும் புதிய சேவைகள்
பணிப்பாளர் செயற்திட்டங்கள் மற்றும் ஆராய்ச்சி
பணிப்பாளர் போட்டி
பணிப்பாளர் இணக்கப்பாடு
பணிப்பாளர் சட்ட அலுவல்கள்
பணிப்பாளர் நிர்வக, நிறுவன அலுவல்கள்
பணிப்பாளர் நிதி
பணிப்பாளர் புலன் விசாரணை மற்றும் வியாபாரப் புலனாய்வு
பிரதான உள்ளகக் கணக்காய்வாளர்
பி.ப/உ.ப ஸ்பெக்ரம் முகாமை 11 பதவிகள்
பி.ப/உ.ப அனுமதிப்பத்திரம் வழங்கல், சர்வதேச விவகாரங்கள், மற்றும் கொள்கை 4 பதவிகள்
பி.ப/உ.ப வலையமைப்பு மற்றும் புதிய சேவைகள் 9 பதவிகள்
பி.ப/உ.ப செயற்திட்டங்கள் மற்றும் ஆராய்ச்சி 2 பதவிகள்
பி.ப/உ.ப போட்டி 02 பதவிகள்
பி.ப/உ.ப இணக்கப்பாடு 04 பதவிகள்
பி.ப/உ.ப சட்ட அலுவல்கள் 04 பதவிகள்
பி.ப/உ.ப Admi. Cor.Affairs/ Media/Eng. -5
பி.ப/உ.ப நிதி 3 பதவிகள்
பி.ப/உ.ப விசாரணை மற்றும் புலனாய்வு 2 பதவிகள்
உள்ளகக் கணக்காய்வாளர் 1 பதவி
ஆணைக் குழுவின் செயலாளர்
சிரேஷ்ட தொலைத்தொடர்பு உத்தியோகத்தர் - 02
சிரேஷ்ட தொலைத்தொடர்பு உத்தியோகத்தர் - 02
நிர்வாக உத்தியோகத்தர்- 02
நிர்வாக உத்தியோகத்தர் 01
கணக்காய்வு உத்தியோகத்தர் 01
தொலைத்தொடர்பு உத்தியோகத்தர் - 13
தொலைத்தொடர்பு உத்தியோகத்தர் - 03
தொலைத்தொடர்பு உத்தியோகத்தர் - 10
தொலைத்தொடர்பு உத்தியோகத்தர் -02 நுகர்வோர் தொடர்பு உத்தியோகத்தர் 06
தலைவரின்/பி.நி.உத்தியோகத்தரின் தனிப்பட்ட உதவியாளர் 02 மொழிபெயர்ப்பாளர் 02
புள்ளிவிபர உத்தியோகத்தர்.01 கணனி நிகழ்ச்சியாளர் 01
நூலகர் 02 பொ.உத் 01 கணனி நிகழ்ச்சியாளர் 01
அபிவிருத்தி உத்தியோகத்தர் 01
அபிவிருத்தி உத்தியோகத்தர் 04
அபிவிருத்தி உத்தியோகத்தர் 08
அபிவிருத்தி உத்தியோகத்தர் 12
அபிவிருத்தி உத்தியோகத்தர் 04
அபிவிருத்தி உத்தியோகத்தர் 04
அபிவிருத்தி உத்தியோகத்தர் 01
அபிவிருத்தி உத்தியோகத்தர் 04
த.தொ. உதவியாளர் 05
த.தொ. உதவியாளர் 02
த.தொ. உதவியாளர் 02
த.தொ. உதவியாளர் 01
த.தொ. உதவியாளர் 02
த.தொ. உதவியாளர் 01
த.தொ. உதவியாளர் 01
த.தொ. உதவியாளர் 01
த.தொ. உதவியாளர் 01 வீ.கெ.இயக்குநர். 01 புகைப்படவியலாளர் 01
த.தொ. உதவியாளர் 02
த.தொ. உதவியாளர் 01
த.தொ. உதவியாளர் 03
முகா.உதவியாளர் 8
முகா.உதவியாளர் 3
முகா.உதவியாளர் 5
முகா.உதவியாளர் 4
முகா.உதவியாளர் 5
முகா.உதவியாளர் 03
முகா.உதவியாளர் 14
முகா.உதவியாளர் 02
முகா.உதவியாளர் 02
முகா.உதவியாளர் 07
முகா.உதவியாளர் 03
முகா.உதவியாளர் 03
முகா.உதவியாளர் 01
மின்னியலாளர் 1 சாரதிகள் 21
ஒளிதொழி. 01 கெமரா உதவியாளர் 01 படத்தொகுப்பு
அலுவலக உதவியாளர் 04
அலுவலக உதவியாளர் 01
அலுவலக உதவியாளர் 01
அலுவலக உதவியாளர் 01
அலுவலக உதவியாளர் 03
அலுவலக உதவியாளர் 01
அலுவலக உதவியாளர் 06 தோட்டத் தொழிலாளர். 02
அலுவலக உதவியாளர் 01
அலுவலக உதவியாளர் 01
அலுவலக உதவியாளர் 01
அலுவலக உதவியாளர் 01
அலுவலக உதவியாளர் 01
அலுவலக உதவியாளர் 01

### 11.2.2. ஊதியக் கட்டமைப்பு மீளாய்வு

1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தொலைத்தொடர்புத் திருத்தச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட ஒரு ஒழுங்குபடுத்தல் நிறுவமான இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு,

"அதன் உத்தியோகத்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் எத்தகைய ஊதியம் வழங்கப்பட வேண்டும்" என்பதைத் தீர்மானிப்பதற்கான அதிகாரம் அச்சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, தொலைத்தொடர்புத் துறைப் பொறியியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் உள்ளிட்ட உயர் தகுதிவாய்ந்த, தேர்ச்சிமிக்க ஆளணியினரை வேண்டி நிற்கின்ற மிகவும் உயிரோட்டம் மிக்கதும் தொழில்நுட்ப ரீதியில் முன்னேற்றகரமானதுமான ஒரு கைத்தொழில் துறையைக் கையாளுகின்றது. இவ் ஆளணியினருக்கு இலங்கையிலும் அதேபோன்று உலகிலும் பல நாடுகளிலும் குறிப்பிடத்தக்களவு அதிக சம்பளம் வழங்கப்படுகின்றது.

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு குறிப்பிடத்தக்களவு வருமானத்தை உழைப்பதுடன் அதில் பெரும் பகுதி தொலைத்தொடர்புக் கைத்தொழிலின் அபிவிருத்திக்காகச் செலவிடப்படுகின்றது. அதில் மற்றொரு பெரும் பகுதி அரசாங்கக் கணக்குகளுக்கு அனுப்பப்படுகின்றது. அதனால், இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு திறைசேரிக்கு ஒரு பாரமாக அமையவில்லை மாறாக அது அரசாங்க வருமானத்திற்குப் பங்களிப்புச் செய்யும் ஒரு முக்கிய நிறுவனமாக விளங்குகின்றது. ஊழியர்களின் திறமைககளைப் பயன்படுத்தி அவர்களது அர்ப்பணிப்பு மிக்க சேவையின் மூலம் வருமானம் உழைக்கப்படுகின்றது. அதற்காக அவர்களுக்கு உரிமைபூர்வமான முறையிலும் நியாயமாகவும் ஊதியங்கள் வழங்கப்படுகின்றன.

DMS/30/2006, DMS/30/2006(1) ஆகிய சுற்றறிக்கைகளில் வரையறை செய்யப்பட்டுள்ள அரச துறைக்கும் அரச தொழில்முயற்சிகளுக்கும் ஏற்புடையதாகும் அடிப்படைச் சம்பளக் கட்டமைப்பு 7 வருடங்களுக்கும் மேலாக மீளாய்வு செய்யப்படாதுள்ளது. அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ற வகையில் ஊழியர்களின் கொள்வனவு ஆற்றல் குறைந்து செல்கின்றது என்ற கவலையை நீக்குவதற்காக வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் விசேட படிவகள் போன்ற பல்வேறு கொடுப்பனவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

மத்திய வங்கி, பிணையங்கள் மற்றும் பங்குப் பரிவர்த்தனை ஆணைக்குழு என்பன போன்ற பல்வேறு ஒழுங்குபடுத்தல் நிறுவனங்கள் நீண்ட காலமாக அரச துறையிலிருந்து பெரிதும் வேறுபடுகின்ற தங்களுக்கே உரிய சம்பளக் கட்டமைப்புக்களைப் பின்பற்றி வருகின்றன.

மேற்குறித்த விடயங்களையும் பொதுவான சம்பளக் கட்டமைப்பையும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்குப் பிரயோகிப்பதில் உள்ள சிரமங்களையும் கவனத்திற் கொண்டு 2013 ஆகஸ்ட் மாதம் 01 ஆந் திகதி முதல் புதிய சம்பளக் கட்டமைப்பு ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

### 11.2.3. அலுவலகச் சுற்றறிக்கைகளை வெளியிடுதலும் அலுவலக நடைமுறைகளை அறிமுகப்படுத்தலும்

2013 ஆம் ஆண்டில், நிர்வாக, நிறுவன அலுவல்கள் பிரிவு குறித்த விடயப் பரப்புக்களை ஒழுங்குபடுத்தி நிறுவனத்தின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காகப் பின்வரும் விடயப் பரப்புக்களுக்கான அலுவலகச் சுற்றறிக்கைகளை வெளியிட்டட்து.

- பயிற்சி நிகழ்ச்சிகளுக்காக.'. செயலமர்வுகளுக்காக/ கருத்தரங்குகளுக்காக/ஆய்வுக் குழுக் கூட்டங்களுக்காக வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வது தொடர்பில் அறிவித்தல்.
- உத்தியோகபூர்வ தொடர்பாடல்களும் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்குப் பொது மக்களால் செய்யப்படும் முறைப்பாடுகளுக்கும் நடவடிக்கை எடுத்தல்.
- 135 - 139 மற்றும் 142-144 ஆம் இலக்க நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க 2013 ஆம் ஆண்டிற்காக நிதி அதிகாரங்களை ஒப்படைத்தல்
- அலுவலகப் பொருட்கள், உபகரணங்கள், சொத்துக்கள் என்பன தொடர்பான பதிவுகளைப் பேணி வருதலும் இச்சொத்துக்களின் மாற்றல்களும்
- கொடுப்பனவுகளுக்காகச் சமர்ப்பிக்கப்படும் வவுச்சர்களை ஆவணப்படுத்துதல்
- இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஊழியர்கள் அலுவலக நடைமுறைகளைப் பின்பற்றுவதன் ஊடாக மிகச் சரியானதும் வினைத்திறன்மிக்கதுமான முறையில் சேவைகளை வழங்குதல்.
- இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அனுமதியளிக்கப்பட்ட பதவியணியின் சம்பள மீளாய்வு
- இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கான ஓய்வுபெறும் வயதெல்லை

- தற்போது நடைமுறையிலுள்ள இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களுக்கு சம்பளங்களைச் செலுத்துவதற்கான காசுப் பாய்ச்சல் முகாமைச் செயன்முறையை மேம்படுத்துதல்.
- மேலதிக நேர வேலையில் ஈடுபடுதல்

### 11.2.4. பயிற்சி

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு ஊழியர்கள் தங்களது அறிவை மேம்படுத்திக்கொள்வதற்காகவும், திறன்களை விருத்தி செய்துகொள்வதற்காகவும் மனப்பாங்குகளை மாற்றிக்கொள்வதற்காகவும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களை வழங்கியது. 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள்/பயிலுநர்வாய்ப்புக்கள்/ கருத்தரங்குகள் தொடபான தகவல்கள் அட்டவணை 11.1 இல் தரப்பட்டுள்ளன.

பயிற்சி நிகழ்ச்சிகளில்/பயிலுநர் வாய்ப்புக்களில்/ கருத்தரங்குகளில் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு ஊழியர்களின் பங்கேற்பு, 2013 அட்டவணை 11.1

**அ) வெளிநாட்டு நிகழ்ச்சிகள்**

| பயிற்சிப் பரப்பு/பயிலுநர் நிலை/கருத்தரங்குகள் | நாடு | காலப்பகுதி | | பங்குபற்றிய-வர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | | (தி/மா/வ) முதல் | (தி/மா/வ) வரை | |
| இணையப் பாதுகாப்பு மன்றம் 2013 | கெமரூன் | 20-ஏப்-13 | 29-ஏப்-13 | 1 |
| ஜீஎஸ்எம் மொபைல் உலக காங்கிரஸ் தொடர்பான அமைச்சர் மட்ட நிகழ்ச்சி | ஸ்பெய்ன் | 14-பெப்-11 | 16-பெப்-11 | 3 |
| டிஜிட்டல் பிளவை வெற்றி கொள்வதற்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் இ-பிரயோக செய்நிரல்கள் | ஜப்பான் | 13-ஜன-13 | 02-பெப்-13 | 1 |
| சேவைகள் துறையின் உற்பத்தித்திறனில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் தாக்கம் தொடர்பான செயலமர்வு | ஈரான் | 18-ஜன-13 | 25-ஜன-13 | 1 |
| “புரோட்பேண்ட் வலையமைப்பு உட்கட்டமைப்பின் விரிவாக்கத்துக்கு உதவும் குவுவுர் மற்றும் கம்பியற்ற அனுகல் தொழில்நுட்பங்கள்” | ஜப்பான் | 20-ஜன-13 | 02-பெப்-13 | 1 |
| விரிவான வடிவமைப்பு இறுதிநிலைப்படுத்தலுக்காக ஆலோசகரின் சீன விஜயம் | சீனா | 25-ஜன-13 | 02-பெப்-13 | 10 |
| சுற்றாடல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச தொலைத்தொடர்புச் சங்கம் - T ஆய்வுக் குழு5 இன் மாநாடு | சுவிட்சர்லாந்து | 28-ஜன-13 | 09-பெப்-13 | 1 |
| விரிவான வடிவமைப்பு இறுதிநிலைப்படுத்தலுக்காக ஆலோசகரின் சீன விஜயம் | சீனா | 28-ஜன-13 | 03-பெப்-13 | 1 |
| பொது நலவாய தொலைத்தொடர்பு நிறுவனத்தின் 6 ஆவது இ-நிர்வாக ஆபிரிக்க மன்றம் | பொட்ஸ்வானா | 03-மார்ச்-13 | 11-மார்ச்-13 | 1 |
| WTSA-12 மற்றும் WCIT-12 மற்றும் APT தரநியமப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களின் பெறுபெறுகள் தொடர்பான கருத்தரங்கு | தாய்லாந்து | 03.'.06.'.13 | 16-மார்ச்-13 | 1 |
| ஆசிய பசுபிக் தொலைத்தொடர்புச் சமுதாய கம்பியற்ற குழுவின் 16 ஆசிய பசுபிக் தொலைத்தொடர்புச் சமுதாயக் கூட்டம் | தாய்லாந்து | 17-மார்ச்-13 | 22-மார்ச்-22 | 1 |
| ஆசிய, பசுபிக் பிராந்தியத்திற்கான செலவுகள் மற்றும் கட்டணங்கள் தொடர்பான கருத்தரங்கு மற்றும் SG3RG-AO மாநாடு | ஜப்பான் | 07-ஏப்-13 | 11-ஏப்-13 | 1 |
| பொது நலவாய தொலைத்தொடர்பு நிறுவனத்தின் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக் குழுவின் அங்கத்தவராகப் பங்கேற்றல் | ஐக்கிய இராச்சியம் | 26-ஏப்-13 | 02-மே-13 | 1 |

| பயிற்சிப் பரப்பு/பயிலுநர் நிலை/கருத்தரங்குகள் | நாடு | காலப்பகுதி | | பங்குபற்றிய-வர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | | (தி/மா/வ) முதல் | (தி/மா/வ) வரை | |
| தென் ஆசிய தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் மன்றத்தின் 14 ஆவது மாநாடு | மாலைதீவு | 13-மே-13 | 17-மே-17 | 1 |
| ஒருங்கிணைந்த சேவை டிஜிட்டல் ஒலிபரப்பு-வு சர்வதேச மன்றத்தின் VI மாநாடு | உருகுவே | 25-மே-13 | 01-ஜுன்-13 | 2 |
| செய்மதி அனுப்புதல் மற்றும் ஒருங்கிணைப்பு தொடர்பான பிராந்தியச் செயலமர்வு | இந்தோனேசியா | 02-ஜுன்-13 | 06-ஜுன்-13 | 1 |
| சர்வதேச தொலைத்தொடர்புச் சங்கத்தின் 2013 மன்ற அமர்வு | சுவிட்சர்லாந்து | 09-ஜுன்-13 | 23-ஜுன்-13 | 3 |
| 2ஆவது ஆசிய பசுபிக் தொலைத்தொடர்புச் சமுதாய மனித வள அபிவிருத்தி நிபுணர் மாநாடு | தாய்லாந்து | 11-ஜுன்-13 | 13-ஜுன்-13 | 2 |
| WRC15 இற்கான ஆசிய பசுபிக் தொலைத்தொடர்புச் சமுதாய மாநாட்டு தயார்படுத்தல் குழுவின் 2ஆவது கூட்டம் | தாய்லாந்து | 29-ஜுன்-13 | 07-ஜுலை-13 | 1 |
| ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களுக்கான 13ஆவது உலகளாவிய ஆய்வரங்கு | போலாந்து | 01-ஜுலை-13 | 08-ஜுலை-13 | 2 |
| சர்வதேச தொலைத்தொடர்புச் சங்கம்-செயற்படும் தரப்பு 5D | ஜப்பான் | 08-ஜுலை-13 | 19-ஜுலை-13 | 1 |
| அனர்த்த முகாமைத்துவம்/ தொடர்பாடல் தொடர்பான செயலமர்வு | பிலிப்பைன்ஸ் | 22-ஜுலை-13 | 26-ஜுலை-13 | 1 |
| கொள்கை, ஒழுங்குபடுத்தல்,சேவைகள் தொடர்பான தென் ஆசிய தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் மன்றச் செயலமர்வு | நேபாளம் | 29-ஜுலை-13 | 03-ஜுன்-13 | 2 |
| USTTI செல்லிட புரோட்பேண்ட் பயிற்சி | ஐக்கிய அமெரிக்கா | 06-ஆக-13 | 17-ஆக-13 | 1 |
| 10ஆவது ஆசிய பசுபிக் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் அபிவிருத்தி மன்றம் | வங்காளதேசம் | 19-ஆக-13 | 23-ஆக-13 | 1 |
| கொரியாவில் கற்றல் நிகழ்ச்சிகள் | கொரியா | 01-செப்-13 | 07-செப்-13 | 1 |
| சர்வதேச தொலைத்தொடர்புச் சங்க-னு ஆய்வுக் குழுக்களின் 4ஆவது மாநாடு | ஜெனீவா | 07-செப்-13 | 22-செப்-13 | 1 |
| 22 ஆவது ஆசிய பசுபிக் தொலைத்தொடர்புச் சமுதாய தரநியமப்படுத்தல் நிகழ்ச்சி மன்றம் | தாய்லாந்து | 08-செப்-13 | 16-செப்-13 | 1 |
| IPMAN மற்றும் அதன் பிரயோகம் | சீனா | 11-செப்-13 | 19-செப்-13 | 1 |
| ஆய்வுக் குழு 2 இன் மாநாடு | ஜெனீவா | 16-செப்-13 | 20-செப்-13 | 1 |
| கொழும்பு தாமரைக் கோபுரச் செயற்திட்டம் | சீனா | 21-செப்-13 | 30-செப்-13 | 14 |
| அலைக்கற்றை முகாமைப் பயிற்சிநெறி | இந்தியா | 22-செப்-13 | 28-செப்-13 | 1 |
| தயார்படுத்தல் கூட்டம் | தாய்லாந்து | 23-செப்-13 | 26-செப்-13 | 1 |
| டிஜிட்டல் பொருளாதார தொடர்பான 2ஆவது ஆசிய பசுபிக் தொலைத்தொடர்புச் சமுதாயம் | சீனா | 23-செப்-13 | 28-செப்-13 | 1 |
| பொது நலவாய தொலைத்தொடர்பு நிறுவனம் 53ஆவது மன்ற மாநாடு | நைஜீரியா | 05-ஒக்-13 | 15-ஒக்-13 | 2 |
| 13ஆவது ஆசிய பசுபிக் தொலைத்தொடர்புச் சமுதாயக் கொள்கை மற்றும் ஒழுங்குபடுத்தல் மன்றம் | மலேசியா | 07-ஒக்-13 | 11-ஒக்-13 | 1 |
| சர்வதேச தொலைத்தொடர்புச் சங்கம்-KCC சர்வதேச பயிற்சி நிகழ்ச்சி | கொரியா | 13-ஒக்-13 | 19-ஒக்-13 | 1 |

| பயிற்சிப் பரப்பு/பயிலுநர் நிலை/கருத்தரங்குகள் | நாடு | காலப்பகுதி | | பங்குபற்றிய-வர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | | (தி/மா/வ) முதல் | (தி/மா/வ) வரை | |
| 2ஆவது மற்றும் 3ஆவது ஆசிய பசுபிக் தொலைத்தொடர்புச் சமுதாய தயார்படுத்தல் கூட்டம் | அவுஸ்திரேலியா | 21-ஒக்-13 | 01-நவ-13 | 1 |
| க்ளவுட் கணனிப் பயன்பாடு | இந்தியா | 27-ஒக்-13 | 02-ஒக்-13 | 1 |
| தகவல் தொழில்நுட்ப ஒழுங்குபடுத்தல் தொடர்பான கருத்தரங்கு | துருக்கி | 02-நவ-13 | 06-நவ-13 | 1 |
| ஆசிய பசுபிக் தொலைத்தொடர்புச் சமுதாயக் குழுக் கூட்டத்தின் 37ஆவது அமர்வு | வியட்னாம் | 04-நவ-13 | 09-நவ-13 | 1 |
| பயனுறுதி வாய்ந்த வேதனக் கொள்கைகளை உருவாக்குதல் | இத்தாலி | 24-நவ-13 | 30-நவ-13 | 1 |
| கம்பியற்ற புரோட்பேண்ட்டுக்கான வானொலி அலைக்கற்றை முகாமைக் கண்காணிப்பு | ஜப்பான் | 25-நவ-13 | 05-டிச-13 | 1 |
| வலையமைப்புப் பாதுகாப்பு தொடர்பான 17ஆவது மாநாடு | ஜெனீவா | 25-ஆக-14 | 06-செப்-14 | 1 |
| புரோட்பேண்ட் விரிவாக்கத்திற்கு உதவும் அனுகல் வலையமைப்புத் தொழில்நுட்பங்கள் | ஜப்பான் | 01-டிச-13 | 14-டிச-13 | 1 |
| அடுத்த தலைமுறை செல்லிடத் தொடர்பாடல் முறைமைக்கான செயற்பாடு | ஜப்பான் | 10-டிச-13 | 20-டிச-13 | 1 |

## ஆ) உள்நாட்டு நிகழ்ச்சிகள்

| நிகழ்ச்சி | காலம் மற்றும் இடம் | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|
| அரச துறையில் உள்ள நிர்வாக உத்தியோகத்தர்களுக்கான பயனுறுதி வாய்ந்த முகாமைத்துவத் திறன் | 2 நாட்கள் - வ/ப திறன் விருத்தி நிதியம் | 1 |
| வரவு செலவுத் திட்டக் கருத்தரங்கு 2014 | 1 நாள் - கலதாரி ஹோட்டல் | 1 |
| “2014 வரவு செலவுத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்” தொடர்பான கருத்தரங்கு | 1 நாள் இலங்கை சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனம் | 1 |
| இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கான நீண்ட கால பரிணாம வளர்ச்சி (LTE) தொடர்பான பயிற்சி | 10 நாட்கள் - ரெலிகொம் கல்விக்கழகம் | 12 |
| பட்டயக் கணக்காளர்களின் தேசிய மாநாடு | 2 நாட்கள் - பட்டயக் கணக்காளர் நிறுவனம் | 2 |
| வினைத்திறன்மிக்க ஒளியூட்டலை நோக்கி | கலதாரி ஹோட்டல் - கொழும்பு | 3 |
| SEARCC – 2013 சர்வதேச மாநாடு | 2 நாட்கள் -கலதாரி ஹோட்டல் - கொழும்பு | 1 |
| CMA சர்வதேச முகாமைத்துவக் கணக்காளர் மாநாடு 2013 - செலவு வினைத்திறனின் ஊடாக நிலைபேறான பெறுமதி உருவாக்கம்” | | 3 |

### 11.2.5 பெறுகைச் செயற்பாடுகள்

ஆணைக்குழுவுக்கான பல்வேறு வகைப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் வழங்கல் செயற்பாடுகள் அனைத்தையும் இப்பிரிவு ஒருங்கிணைப்புச் செய்தது. விலைமனுக்கோரல் ஆவணங்கள் தயாரித்தல், அறிவித்தல்களை வெளியிடுதல், பெறுகைக் குழுக்களையும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களையும் நியமித்தல், தேவையான அனுமதிகளைப் பெறுவதற்கான அறிக்கைகளைத் தயாரித்தல், தெரிவுசெய்யப்பட்ட தரப்பினருக்குத் தீர்மானங்களை அறிவித்தல், சட்டப் பிரிவின் ஒத்துழைப்புடன் சேவை ஒப்பந்தங்களைத் தயாரித்தல், தேவைப்படுமிடத்து சேவை வழங்குநர்களின் வேலைகளை மேற்பார்வை செய்தல், சேவை ஒப்பந்தங்களிலிருந்து விலகிச் சென்ற விடயங்கள் அவதானிக்கப்படுமாயின் அவற்றைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் ஆகிய விடயங்கள் இச்செயற்பாடுகளில் உள்ளடங்கும்.

மீளாய்வுக் காலப்பகுதியில் கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட கேள்விமனுச் சபைகளின கூட்டங்கள் முறையே 04 மற்றும் 05 தடவைகள் நடாத்தப்பட்டன. கனிஷ்ட கேள்விமனுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பெறுகைகளின் மொத்தப் பெறுமதி 1.66 மில்லியன் ரூபாவாகும். அது இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் சிவில் பராமரிப்பு வேலைகளுக்காக அதிகபட்ச நிச்சயிக்கப்பட்ட விலைகளுக்கு அங்கீகாரம் வழங்கியது. சிரேஷ்ட கேள்விமனுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பெறுகைகளின் மொத்தப் பெறுமதி 1.93 பில்லியன் ரூபாவாகும். அதற்கிணங்க, இரண்டு கேள்விமனுச் சபைகளினால் அங்கீகரிக்கப்பட்ட பெறுகைகளின் மொத்தப் பெறுமதி 1.932 பில்லியன் ரூபாவாகும்.

வினைத்திறன்மிக்க மின்சார, நீர் மற்றும் தொலைபேசிச் சேவைகளின் விநியோகத்தை உறுதிசெய்ததுடன் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அனைத்துப் பிரிவுகளுக்குமான எழுது பொருட்கள், அலுவலக உபகரணங்கள், இயந்திரங்கள் என்பன உரிய நேரத்தில் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்காகச் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தது.

மேற்குறித்த செயற்பாடுகள் அனைத்தினதும் பிரதான குறிக்கோள், நிறுவனத்தின் சுமுகமான தொழிற்பாட்டுக்குத் தேவையான சேவைகளையும் பொருட்களையும் உரிய நேரத்தில் வெளிப்படைத்தன்மையுடனும் செலவுப் பயனுறுதி கொண்டதும் நியாயமானதுமான ஒரு முறையில் வழங்குவதாகும்.

### 11.2.6 வாகனத் தொகுதியின் பராமரிப்பு

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் வாகனத் தொகுதியில் பதினான்கு கார்களும் மூன்று டப்ள்கெப் வண்டிகளும், மூன்று ஜீப் வண்டிகளும் ஒரு பஸ் வண்டியும் நான்கு லொறிகளும் ஒரு முச்சக்கர வண்டியும் காணப்படுகின்றன. பஸ் வண்டியானது, மேற்பார்வை விஜயங்கள், கண்காட்சிகளுக்கு உத்தியோகத்தர்களை அழைத்துச் செல்லல், ஊழியர் நலனோம்பல் செயற்பாடுகள் போன்றவற்றுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. வாகனத் தொகுதியிலுள்ள சில வாகனங்கள், வாகனங்கள் ஒதுக்கப்படுவதற்கான உரிமையைக் கொண்ட உத்தியோகத்தர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய வாகனங்கள் மேற்பார்வை விஜயங்கள், கூட்டங்கள்/செயலமர்வுகள்/கருத்தரங்கு போன்றவற்றில் பங்கேற்றல், கண்காட்சிகளை ஏற்பாடுசெய்தல், கடிதங்களைச் சேகரித்தல், உத்தியோகபூர்வ கடிதங்களை நேரடியாகக் கையளித்தல் போன்றவற்றுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. வாகனத் தொகுதிக்கான திருத்த வேலைகள், ரயர்களையும் பற்றரிகளையும் மாற்றுதல், வருமான அனுமதிப்பத்திரங்கள் பெறுதல் என்பவற்றுக்காக 2013 ஆம் ஆண்டில் 7.07 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

### 11.2.7 மதிப்பாய்வுச் சபை

2012 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மதிப்பாய்வுச் சபை 2013 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டது. இந்த மதிப்பாய்வை மேற்கொள்வதற்காக 03 அங்கத்தவர்களைக் கொண்ட சபையொன்று நியமிக்கப்பட்டது. இச்சபையின் அறிக்கை மேலதிக நடவடிக்கைகளுக்காக முகாமைத்துவத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### 11.2.8 தேசத்துக்கு மகுடம் கண்காட்சிக்கான செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்

2013 ஆம் ஆண்டுக்கான தேசத்துக்கு மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சி, இலங்கையிலுள்ள கிராமப் புறங்களின் அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கும் நோக்கில் அம்பாறை மாவட்டத்திலுள்ள ஹார்டி தொழில்நுட்பக் கல்லூரியின் வளாகத்தில் நடாத்தப்பட்டது.

நிர்வாக, நிறுவன அலுவல்கள் பிரிவு, இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஏனைய பிரிவுகளின் ஒத்துழைப்புடன் தொலைத்தொடர்புத் துறையில் ஏற்பட்டுள்ள புது அபிவிருத்திகளைக் காட்சிப்படுத்திய இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் காட்சிக்கூடத்திற்கான ஏற்பாடுகளைச் செய்ததுடன் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பில் பொது மக்களுக்கு முக்கிய தகவல்களையும் வழங்கியது.

ஏற்பாட்டுக் குழுக்களின் நியமனம், பொருத்தமான கண்காட்சி அறைகளைப் பெறுதல், ஊழியர்களுக்கும் கண்காட்சிப் பொருட்களுக்குமான தங்குமிட மற்றும் போக்குவரத்து வசதிகளை ஏற்பாடுசெய்தல் என்பவற்றுக்கான முன்னெடுப்புக்களை நிர்வாக, நிறுவன அலுவல்கள் பிரிவு மேற்கொண்டது.

### 11.2.9 நலன்புரிச் சங்கம்

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் நலன்புரிச் சங்கம், ஊழியர் குழாத்தின் அங்கத்தவர்களை உள்ளடக்கியதும் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நியமிக்கப்படும் நிறைவேற்றுக் குழுவொன்றின் முகாமையின் கீழ் இயங்கும் சுயாதீனமான அமைப்பாகும். நலன்புரிச் சங்கத்தின் நிதி மேற்குறித்த நிறைவேற்றுக் குழுவினால் நிர்வகிக்கப்படுவதுடன் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படும்.

### 11.2.9.1 நலன்புரிச் செயற்பாடுகள்

மீளாய்வுக் காலப்பகுதியில், பின்வரும் பிரதான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

#### i. யாப்புக்கான திருத்தம்

ஊழியர்களினதும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களினதும் நிதிரீதியான ஸ்திரத்தன்மையையும் நலனோம்பல் தேவைகளையும் கவனத்திற் கொண்டு, ஒரு புதிய யாப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன் பயனாக, இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள அனைத்து ஊழியர்களுக்கும் இச்சங்கத்தின் உறுப்புரிமை திறந்தவிடப்பட்டதுடன் அங்கத்தவர்களுக்கு மேலதிகமான நலனோம்பல் வழங்குவதும் சாத்தியப்பட்டது.

#### ii. உணவகம் மற்றும் நலன்புரிச் சங்கக் கடை

- காலையுணவு, பகலுணவு, பின்னேரச் சிற்றுண்டி, பின்னேரத்தில் எடுத்துச் செல்வதற்கான உணவு, உள்ளகக் கூட்டங்கள் மற்றும் மாநாடுகளுக்கான தேவைகள் என்பவற்றை சிறந்த தரத்திலும் மானிய விலையிலும் வழங்கும் நோக்கில், உணவகத்தின் முகாமைத்துவத்தை நலன்புரிச் சங்கம் பொறுப்பேற்றது.
- உணவகத்தின் சேவைகளை மேம்படுத்துவதற்காக, இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் முகாமைத்துவத்தின் ஒத்துழைப்புடன் சமையலறைக்காக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.
- உணவகத்தின் சேவைகள் வருகை தருபவர்களுக்கு சிற்றுண்டியும் தேநீரும் வழங்கக்கூடியவாறு விரிவாக்கப்பட்டுள்ளன.
- நலன்புரிச் சங்கம் தனது நலன்புரி வேலைகளின் ஓர் அங்கமாக இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கு தினசரி தேநீர் வழங்கும் பணியை மேற்கொண்டது. இதன் மூலம் ஊழியர்கள் தினமும் இரு வேளை தரமான தேநீரைப் பருகும் வாய்ப்பைப் பெற்றனர்.
- நலன்புரிச் சங்க விற்பனை நிலையம் தரமுயர்த்தப்பட்டு அதன் சேவைககளை மேம்படுத்துவதற்காக நவீனமயப்படுத்தப்பட்டதுடன் பல்வேறு வகையான உணவு மற்றும் பான வகைகள் குறைந்த விலைகளில் இலகு தவணைக் கொடுப்பனவு முறைகளின் கீழ் விற்பனை செய்யப்படுகின்றன.



நலன்புரிச் சங்கம் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் உணவகத்தின் முகாமைத்துவத்தைப் பொறுப்பேற்றதன் பின்னர் உணவகம் திறக்கப்பட்ட போது

### iii. சமயச் செயற்பாடுகள்

- 2013 மே மாதம் 15 ஆந் திகதி நலன்புரிச் சங்கத்தினால் உணவகம் திறக்கப்பட்டதை முன்னிட்டும் வெசாக் போயா தினத்தை முன்னிட்டும் நுகேகொடையிலுள்ள கங்கொடவிலை மகளிர் இல்லத்தில் தானம் வழங்கும் நிகழ்ச்சிகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அன்றைய தினத்தில் பகலுணவு தானம் தவிர, நலன்புரிச் சங்கம், இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஆகியோரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பயிற்சிப் புத்தகங்கள், எழுது பொருட்கள் திருமதி சமிலா ரூபசிங்ஹவினால் எழுதப்பட்ட கதைப் புத்தகங்கள், பழவகைகள் மற்றும் ஏனைய உணவு வகைகள் என்பனவும் வழங்கப்பட்டன. தானம் வழங்கும் வைபத்தின் பின்னர் மகளிர் இல்லத்தைச் சேர்ந்த மாணவிகள் தங்களது திறமைகளை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளை அரங்கேற்றினர்.



இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பிள்ளைகளுக்கு தர்மக் கொடைகளை வழங்கினார்.

- வெசாக் மற்றும் பொசன் சமயச் செயற்பாடுகளின் ஓர் அங்கமாக, நலன்புரிச் சங்கத்தினால் இரண்டு தம்ம நிகழ்ச்சிகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நலன்புரிச் சங்கம் தம்ம போதனைக்காக கொரத்தொட்டை வெஸ்ஸாபோ தேரர் அவர்களை அழைத்திருந்ததுடன் அந்நிகழ்ச்சி புடிஸ்ட் அலைவரிசையின் ஊடாக ஒளிபரப்புச் செய்யப்பட்டது. இந்த நிகழ்வின் போது வணக்கத்துக்குரிய குகுல்பனே சுதஸ்ஸி தேரர் அவர்களால் எழுதப்பட்ட புத்தகங்கள் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஊழியர்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டன.



இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் வளவில் வெசாக் தம்ம போதனை நடைபெற்ற போது

பாரியளவிலான வெசாக் கூடுகளைச் செய்து இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அலுவலகத்தை அலங்கரிக்கும் பணியையும் நலன்புரிச் சங்கம் முன்னெடுத்தது. இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு ஊழியர்களான திரு. சுமிந்த சில்வா, திரு. டபிள்யு. எம். தரிந்து தர்ஷன பத்மகுமார ஆகிய இருவரும் இச்செயற்பாட்டை முன் நின்று மேற்கொண்டதுடன் இப்பணியைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கு ஏனைய ஊழியர்கள் தங்களது ஒத்துழைப்பை வழங்கினர்.

## IV பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள்

- அரசாங்க உத்தியோகத்தர்கள் மத்தியில் பிரபலமான வானொலி நிகழ்ச்சியான “லிபிகொனுவே சொந்துரு மினிசா” என்ற நிகழ்ச்சி 2013 ஜூலை 15ஆந் திகதி இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு வளவில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பதின்மூன்று (13) பாடகர்கள் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். இந்நிகழ்ச்சி 2013 ஆகஸ்ட் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு இலங்கை ஒலிபரப்பரப்புக் கூட்டுத்தபானத்தின் “சுவதேசிய சேவை”யில் ஒலிபரப்புச் செய்யப்பட்டது.



வானொலி நிகழ்ச்சியின் ஒலிப்பதிவு

- ஊழியர்கள் முகாமைத்துவத்தின் அனுமதியுடன் அலுவலக நேரத்தின் பின்னர் இசையினைக் கற்று பயிற்சிபெற்றனர். இந்த இசைக்குழுவை ஊழியர் குழாத்தின் அங்கத்தவர்களில் ஒருவரான திரு.ஆர்.என்.பீ.கே. ரத்னபால முன் நின்று வழிநடாத்தினார்.

- நலன்புரிச் சங்கத்திற்கான தொனிப்பொருள் பாடலொன்றை எழுதுவதற்கான போட்டியொன்று நடாத்தப்பட்டது. சுயாதீனமான குழுவொன்றினால் சிறந்த பாடல் தெரிவு செய்யப்பட்டு அப்பாடலை நலன்புரிச் சங்கத்தின் தொனிப்பொருள் பாடலாக ஏற்றுக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

## V. சுகாதார சேவைகள் மற்றும் விழிப்பு நிகழ்ச்சிகள்

- தேசிய இரத்த சேகரிப்பு நிலையத்தின் வேண்டுகோளின் பேரில் நலன்புரிச் சங்கத்தினால் இரத்த தான நிகழ்ச்சியொன்று இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த முக்கியமான நிகழ்வில் 35 இற்கும் மேற்பட்டோர் தன்னார்வ அடிப்படையில் பங்கேற்றனர்.



இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு வளவில் நடைபெற்ற இரத்த தான நிகழ்ச்சி

- ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட அரச வர்த்தக கம்பனி (தனியார்) நிறுவனத்தின ஊடாக அரச "Pure It" என்ற நீர் வடிகட்டும் இயந்திரங்களை இலகு தவணைக் கொடுப்பனவு முறையில் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. இதன் மூலம் முப்பத்தைந்து (35) ஊழியர்கள் பயனடைந்தனர்.
- ஊழியர்களுக்கான கண் சிகிச்சை மற்றும் விழிப்பு நிகழ்ச்சியொன்றை கண் பராமரிப்பு நிறுவனம் நடாத்தியதுடன் கே.ஏ. ஜயசிங்ஹ ஐ ஒப்டீசியன்ஸ் நிறுவனத்திடமிருந்த இலகு தவணைக் கொடுப்பனவு முறையில் மூக்குக் கண்ணாடிகளைக் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தது.
- புற்றுநோய் கண்டுபிடிப்பு நிலையத்துடன் இணைந்து இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பெண் ஊழியர்களுக்கான "நாம் புற்றுநோயை எவ்வாறு குறைக்க முடியும்" என்ற தலைப்பிலான விழிப்பு நிகழ்ச்சியொன்றும் மருத்துவ கிளினிக்கொன்றும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.
- மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஒத்துழைப்புடன் பிளாஸ்டிக் மீள்சுழற்சி, திண்மக் கழிவு மற்றும் இலத்திரனியல் கழிவு முகாமை தொடர்பான பகிரங்க விரிவுரையொன்றை ஏற்பாடு செய்தது.
- கடன்களுக்கான காப்புறுதிக் கொள்கைகள் தொடர்பில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் விரிவுரையொன்று நடாத்தப்பட்டது.

### vi. நுகர்வோர் சேவைகள்

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் முகாமைத்துவத்தின் அனுமதியின் பேரில் பின்வரும் வகைகளிலான விற்பனை நிலையங்களை ஊழியர்களுக்காக நலன்புரிச் சங்கம் ஏற்பாடுகள் செய்தது.

- இறக்குமதி செய்யப்பட்ட சேலைகள் - பருத்தி மற்றும் செயற்கை உற்பத்திகள்
- தோற் பொருட்கள் - சப்பாத்து இறாக்கைகள் மற்றும் ஆடை இறாக்கைகள்
- பெண்களுக்கான சப்பாத்து வகைகள்
- நுகர்வு மற்றும் அழகுசாதனப் பொருட்கள்
- தங்க ஆபரணங்கள்
- மின் உபகரணங்கள்

### Vii போக்குவரத்து வசதிகள்

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிலிருந்து பிரதான புகையிரத நிலையங்களுக்குச் செல்வதிலுள்ள சிரமங்களை நிவர்த்தி செய்யும் நோக்கில் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிலிருந்து நாளாந்த பஸ் சேவையொன்றை நலன்புரிச் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

## 11.2.10. வருடாந்த குடும்ப ஒன்றுகூடல்

இது 2013 ஆகஸ்ட் 31, செப்டம்பர் 01 ஆந் திகதிகளில் ஒரு இரண்டு நாள் நிகழ்ச்சியாக ஹபரணையில் நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியின் குறிக்கோள், ஊழியர்கள் மத்தியிலும் அவர்களது குடும்பங்கள் மத்தியிலும் சுமுகமான உறவினை ஏற்படுத்துவதும் ஓய்வுநேரத்தைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பை அவர்களுக்கு வழங்குவதுமாகும்.





## 11.2.11. வருடாந்த விளையாட்டுப் போட்டி

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் விளையாட்டுக் கழகத்தின் ஒத்துழைப்புடன் 2013 டிசம்பர் 21 ஆந் திகதி ரோயல் கல்லூரி மைதானத்தில் விளையாட்டுப் போட்டி நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் ஆணைக்குழுவின் தலைவர், பணிப்பாளர் நாயகம் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர். ஊழியர் குழாத்தின் அனைத்து அங்கத்தவர்களும் தங்களது மட்டங்களைக் கவனத்திற் கொள்ளாது பராக்கிரம, விஜய, கெமுனு ஆகிய பெயர்களில் மூன்று அணிகளாகப் போட்டியிட்டனர். சுவட்டு மற்றும் கள நிகழ்சசிகள் உள்ளிட்ட பல்வேறு உள்ளக மற்றும் வெளியரங்கு நிகழ்ச்சிகளில் பெருந்தொகையான அங்கத்தவர்கள் செயலூக்கத்துடன் பங்கேற்றனர். இந்த விளையாட்டுப் போட்டி ஊழியர்களுக்கு தங்களது விளையாட்டுத் திறன்களை அறிந்து கொள்வற்கும் வெளிப்படுத்துவதற்குமான ஒரு சந்தர்ப்பமாக அமைந்ததுடன் அலுவலக அதிகாரவர்க்க முறைக்கு அப்பால் சென்று குழு உணர்வை விருத்தி செய்வதற்கான வாய்ப்பாகவும் அமைந்தது.



இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் விளையாட்டுப் போட்டி - ரோயல் கல்லூரி மைதானத்தில் அங்குரார்ப்பனம் செய்யப்பட்ட போது



இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் விளையாட்டுப் போட்டி - பரிசளிப்பின் போது

### 11.2.12. தகவல் தொழில்நுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அனைத்துப் பிரிவுகளும் தங்களது தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றன. ஏனைய பிரிவுகள் வினைத்திறன்மிக்க தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு ஒன்றினுள் தங்களது தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கான வசதி ஏற்பாடுகளை செய்வதற்காக தகவல் தொழில்நுட்பத் தேவைகளை வினைத்திறன்மிக்க முறையிலும் பயனுறுதி வாய்ந்த முறையில் பூர்த்தி செய்வது நிர்வாக, நிறுவன அலுவல்கள் பிரிவின் பொறுப்பாகும். மீளாய்வு செய்யப்படும் வருடத்தில் பின்வரும் பிரதான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் மின்னஞ்சல் சேர்வர், டொமைன் சேர்வர் (Active Directory- AD), தரவுப் பாதுகாப்பு முகாமையாளர் (DPM), முறைமை மைய உள்ளமைவு முகாமையார் (SCCM, தனிப்பட்ட கணனிகள், அச்சுப்பொறிகள், றவுட்டர்கள் போன்றவற்றை நிர்வகித்தலும் பராமரித்தலும்
- இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அனைத்துப் பிரிவுகளுக்குமான தகவல் தொழில்நுட்ப மென்பொருட்களை உருவாக்குதலும் வடிவமைத்தலும்
- இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கு தகவல் தொழில்நுட்ப பயனர் தொகுதி தொடர்பான பயிற்சிகளை வழங்குதல்
- தகவல்களைச் சேகரித்தலும் கண்காட்சிகளின் ஊடாக அவற்றைப் பரவலாக்குதலும்
- தெரிவுசெய்யப்பட்ட பிரிவுகளுக்கு கம்பியற்ற வலையமைப்புத் தீர்வுகளை வழங்குதலும்
- இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் புதிய இணையத்தளத்தை உருவாக்குவதற்கான கேள்விமனு கொழும்புப் பல்கலைக்கழகததின் கணனிப் பாடசாலைக்கு (UCSC) வழங்கப்பட்டமை
- UCSC உருவாக்கிய மூலோபாய மாதிரிகளை மதிப்பீடு செய்தமை.
- தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்தின் உள்ளடக்க முகாமைத் தொகுதி (CMS) ஜூம்லா 1.5 இலிருந்து ஜூம்லா 2.5 ஆக மாற்றப்பட்டமை. (ஜூம்லா என்பது இணையத்தளப் பதிப்புக்கான ஒரு உள்ளடக்க முகாமைத் தொகுதியாகும்)
- உள்ளடக்க முகாமைக் குழு(CMT) நியமிக்கப்பட்டமை
- உள்ளடக்க முகாமைக் குழுவின் வழிகாட்டலின் கீழ் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் இணையத்தளம் பராமரிக்கப்பட்டமை.

### 11.2.13 நூலகம்

தொலைத்தொடர்புத் துறையானது மிகத் துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் ஒரு துறையாகும். அதனால் இத்துறையில ஈடுபாடு காட்டும் ஆட்களும் ஏனைய ஆர்வமுள்ள தரப்பினரும் இவ்விடயப்பரப்பு தொடர்பாகத் தொடர்ச்சியாகத் தங்களது அறிவை இற்றைப்படுத்திக் கொள்வது அவசியாகும். இந்நோக்கத்திற்காகவே இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் நூலகம் தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் நூலகம், தொலைத்தொடர்புத் துறை தொடர்பான பெருந்தொகையான நூல்களையும் சஞ்சிகைகளையும் கொண்டுள்ளதுடன் பயனர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தொடர்சசியான முறையில் அதற்கு வலுவூட்டப்பட்டு வருகின்றது. இந்த நூலகம் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கு மட்டுமன்றி ஆய்வுவாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலைப் பிள்ளைகள் போன்ற வெளித் தரப்பினருக்கும் உசாவுகை வசதிகளை வழங்குகின்றது.

மீளாய்வு செய்யப்படும் வருடத்தில் பின்வரும் பிரதான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

#### 11.2.13.1 நூலகத்தைப் பராமரித்தலும் பலப்படுத்தலும்

ACCD பிரிவு தொலைத்தொடர்புத் துறையுடன் தொடர்புடைய பல்வேறு ஆவணங்களையும், நூல்களையும் பருவகால இதழ்களையும் கொண்ட இந்த நூலகத்தைத் தொடர்ந்தும் பராமரித்தது. தொலைத்தொடர்பு தொடர்பான நூல்கள் மற்றும் சஞ்சிகைகளைத் தவிர, முகாமைத்துவம், சட்டம், பொருளியல், கணக்கீடு போன்ற ஏனைய துறைசார்ந்த முக்கிய வாசிப்பு ஆக்கங்களையும் இந்நூலகம் கொண்டுள்ளது. இந்நூ லகத்தின் வாடிக்கையாளர்களில் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், ஆய்வுவாளர்கள், நூலகர் ஆகியோர் அடங்குகின்றனர். அது இணைய வசதியையும் ஏனைய நூலகத் தரவுத் தளங்களையும் பயன்படுத்தி வாடிக்கையாளர்களுக்கு தகவல்களை வழங்கியது. வாடிக்கையாளர்களுக்கு அவர்களது கோரிக்கையின் பேரில் நிழற்பிரதி எடுக்கும் வசதிகளும் வழங்கப்பட்டன. வாடிக்கையாளர்களுக்குத் தேவையான தகவல்களைத் துரிதமாக வழங்குவதற்காக நூலகத்தின் மின்னஞ்சல் மற்றும் இணைய வசதிகள், தொலைநகல் வசதிகள், தொலைபேசி வசதிகள் என்பன பயன்படுத்தப்பட்டன.

### 11.2.13.2 நூலகத்தைப் பராமரித்தலும் பலப்படுத்தலும்

இந்நூலகத்தைப் பலப்படுத்துவதற்காக 2013 ஆம் ஆண்டில் சர்வதேச தொலைத்தொடர்புச் சங்கத்தின் வெளியீடுகள் உள்ளிட்ட பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் இந்நோக்கத்திற்காக 659,704/ஸ்ரீ ரூபா செலவிடப்பட்டது. அதில் 566,948/- ரூபா வெளிநாட்டு நூல்களுக்காகவும் 92756/- ரூபா உள்நாட்டு வெளியீடுகளுக்காகவும் செலவிடப்பட்டது.

மேற்குறித்த நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டதைத் தவிர, இந்நூலகம் பல்வேறு சஞ்சிகைகளுக்குச் சந்தாதாரராகியத/ சந்தாக்களைப் புதுப்பித்து. ஒவ்வொரு வகைக்காகவும் செலவிடப்பட்ட மொத்தத் தொகை உள்ளிட்ட தகவல்கள் கீழே அட்டவணை 11.2 இல் தரப்பட்டுள்ளன.

**சஞ்சிகைகளுக்கான சந்தாக்கள் - 2013** அட்டவணை 11.2

| புதிய சஞ்சிகைகள் | புதுப்பித்தல்கள் | |
|---|---|---|
| | வெளிநாட்டுச் சஞ்சிகைகள் | உள்நாட்டுச் சஞ்சிகைகள் |
| டொக்டர் சஞ்சிகை | ஹார்வார்ட் பிஸ்னஸ் ரிவியூ | ஆர்திக விமசும |
| ஆரோக்யா | நஷனல் ஜோக்ர∴பிக் சஞ்சிகை | எகொனமிக் ரிவியூ |
| நவயுகய | நியூ சயன்டிஸ்ட | பிஸ்னஸ் டுடே |
| சட்டஹன | எகொனமிஸ்ட் | ரீடர்ஸ் டைஜஸ்ட் |
| தெசதிய | டைம் | LMD சஞ்சிகை |
| | | பரிகனக |
| ரூபா 2,310 | ரூபா 101,990.00 | ரூபா 9,530.00 |

### 11.2.13.3 ஏனைய நூலகங்களின் வசதிகளைப் பெறுவதற்காகன அங்கத்துவங்களைப் புதுப்பித்தல்

பின்வரும் நிறுவனங்களில் நிறுவன ரீதியான அங்கத்துவங்கள் புதுப்பிக்கப்பட்டன.

- பொது நூலகம்
- தேசிய நூலகம்
- பிரிட்டிஷ் கவுன்சில்

பிரிட்டிஷ் கவுன்சில் அங்கத்துவம் பெறுவதற்கு இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு நிதியினை வழங்கியது. பொது நூலகத்தைப் பொறுத்தவரையில், ஊழியர்கள் அங்கத்துவப் பணத்தைச் செலுத்தி தனிப்பட்ட அங்கத்துவத்தைப் பெற வேண்டும் என ஊழியர்களிடம் கோரப்பட்டது. இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஊழியர் குழாத்தின் அங்கத்தவர்கள் மேற்குறித்த நூலகங்களில் நிறுவனரீதியான உறுப்புரிமை பெற்றதன் மூலம் அவற்றிலிருந்து சேவைகளை இலகுவாகப் பெறக்கூடியதாக உள்ளது. நிறுவனரீதியான உறுப்புரிமையைப் பெற்றிருந்தமையின் காரணமாக இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின ஊழியர்களால் பொது நூலகத்தின் நடமாடும் நூலக சேவையிடமிருந்து நூல்களை/ சஞ்சிகைகளைப் பெறுவது சாத்தியமாகியது. நடமாடும் நூலகம் 2013 ஆம் ஆண்டில் இரு வாரங்களுக்கு ஒரு முறை இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு வளாகத்திற்கு விஜயம் செய்தது.

### 11.2.13.4. நூலகங்களுக்கிடையிலான கடன் வசதியினைப் பெறுவதற்காக ஏனைய நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் நூலகம் தேசிய நூலகம் மற்றும்தேசிய வியாபார முகாமை நிறுவனம் (NIBM), தொழில் திணைக்களம், தேசிய விஞ்ஞான மன்றம் (NSF), பல்கலைக்கழக நூலகங்கள் போன்ற ஏனைய நிறுனங்களுடன் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கு நூலகக் கடன் வசதிகளை வழங்குவதற்கான ஒருங்கிணைப்பு ஏற்பாடுகளைச் செய்தது.

### 11.2.13.5 முக்கிய தகவல்களைச் சேகரித்தலும் சுட்டிகளைத் தயாரித்தலும்

முக்கிய உசாவுகை ஆவணச் சேகரிப்புப் பணியும் சுட்டிகளைத் தயாரிக்கும் பணியும் 2013 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. செய்தித்தாள்களிலிருந்தும் பருவகால இதழ்களிலிருந்தும் தொலைத்தொடர்பு, சுகாதாரம், கல்வி, சுற்றாடல் போன்ற துறைகளுடன் தொடர்புடைய ஆக்கங்கள் சேகரிக்கப்பட்டு திகதி அடிப்படையில் ஒழுங்குபடுத்தப்பட்டன. ஆணைக்குழுவின் பத்திரிகை விளம்பரங்கள் மற்றும் வெளியீடுகள் தொடர்பான சுட்டிகளும் இக்காலப்பகுதியில் நூலகத்தினால் தயாரிக்கப்பட்டன. ஊழியர்களுக்கான வெளிநாட்டுப் பயிற்சி, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கள், காலத்துக் காலம் ஆணைக்குழுவினாலும் அரசாங்க நிர்வாக அமைச்சினாலும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினாலும் ஓய்வூதியத் திணைக்களத்தினாலும் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் என்பன போன்ற இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுடன் தொடர்புடைய முக்கியமான விடயப் பரப்புக்கள் தொடர்பான சுட்டிகளைத் தயாரித்தது. பயிலுநர் வானொலிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் நன்மைக்காக கடந்த கால பரீட்சை வினாப்பத்திரங்களை இந்நூலகம் சேகரித்து வைத்துள்ளது.

### 11.2.13.6 PURNA தொகுதியின் உருவாக்கம்

தொலைத்தொடர்பு தொடர்பான தகவல்களை இலகுவாகப் பெறுவதற்காகப் PURNA தரவுத் தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

### 11.2.13.7 இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு ஊழியர்களுக்காகன கருத்தரங்குகளை/ செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல்

நூலகத்தினால் 2013 ஆம் ஆண்டில் ஏற்பாடுகள் செய்யப்பட்ட கருத்தரங்குகள்/ செயலமர்வுகள் தொடர்பான தகவல்கள் அட்டவணை 11.3 இல் தரப்பட்டுள்ளன.

**நூலகத்தினால் ஏற்பாடுகள் செய்யப்பட்ட கருத்தரங்குகள்/ செயலமர்வுகள், 2013** அட்டவணை 11.3

| விடயப் பரப்பு | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| பாதுகாப்பாக வாகனம் செலுத்துதல | 50 |
| தீப் பாதுகாப்பு | 50 |
| மின்னல் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் | 55 |

### 11.2.14 ஊடகச் செயற்பாடுகள்

இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் முக்கிய நிகழ்ச்சி நடைபெறுகின்ற போது அவை நடைபெறும் இடங்களுக்குச் சென்று புகைப்படங்களையும் காணொளிகளையும் எடுத்து அவற்றை நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி எடிட் செய்து ஒரு காப்பக வடிவில் சேமித்து வைக்கும் பொறுப்பு ஊழியர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவத்திடம் அனுமதி பெற்றதன் பின்னர் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பில் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகப் புகைப்படங்களும் காணொளிகளும் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இவ்வாறு தகவல்கள் வெளி நிறுவனங்களுக்கு அனுப்பும் போது ஊடகப் பிரிவின் ஊழியர்கள் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் உரிய பிரிவுகளிடமிருந்து விடயப் பரப்புக்கள் தொடர்பான விபரங்களைப் பெற்றுக்கொள்ளும்.

#### 11.2.14.1 செயலாற்றுகை

2013 ஆம் ஆண்டில் 1000 டிவீடி களை தயாரித்ததற்கு மேலதிகமாக பின்வரும் நிகழ்வுகளும் பதிவு செய்யப்பட்டன.

- தாமரைக் கோபுரச் செயற்திட்டம்
- சாரதிகளுக்கான வீதி விதிகள் தொடர்பான விழிப்பு நிகழ்ச்சி
- தேசிய சுவடிக்கூடங்கள் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள ஆவணங்களைப் பாதுகாப்பது தொடர்பான செயலமர்வு
- யாழ்ப்பாண மாணவர்களுக்கு கணனிகள் அன்பளிப்பு

- விசேட தேவையுடைய ஆட்களுக்கு கணனிகள் அன்பளிப்பு
- இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கான ஒழுக்காற்றுக் கோவையைச் சமர்ப்பித்தல்
- இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தரமுயர்வுகள்
- இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் உடற்பயிற்சிக் கூடம் திறக்கப்பட்டமை
- நலன்புரிச் சங்கத்தினால் இரத்தா தானம் நிகழ்ச்சி ஏற்பாடுகள் செய்யப்பட்டது.
- உணவகம் திறக்கப்பட்டமை
- இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் வெசாக் கொண்டாட்டங்கள் நடாத்தப்பட்டமை
- மின்னல் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் தொடர்பான விழிப்பு நிகழ்ச்சி
- எதிர்காலத்தைப் பசுமையாக்கல் செயலமர்வு சுற்றாடலின் நிலைபேறான தன்மை தொடர்பான தரநியமப்படுத்தல் இடைவெளியை நிரப்புதல்
- “ஒரு பாடசாலைக்கான இணைப்பதன் ஒரு சமுதாயத்தை இணைக்கும் செயற்திட்டத்தின்” கீழ் ஹோமாகமையிலுள்ள வட்டரெக கனிஷ்ட வித்தியாலயத்தின் கணனி ஆய்வுகூடம் திறக்கப்பட்டமை
- தொலைத்தொடர்புடன் தொடர்புடைய குற்றங்களைக் கையாளும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு
- புதிய தொலைத்தொடர்புச் சட்ட உருவாக்கம் தொடர்பான செயலமர்வு
- இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அன்பளிப்பாக வட்டரெக ரணவிரு வீடமைப்புச் செயற்திட்டம்
- இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் விளையாட்டுப் போட்டி

# உள்ளக கணக்காய்வுப் பிரிவு

அத்தியாயம்
12

### சுருக்க அறிமுகம்

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்துவது தொடர்பாக பிரதானமானதொரு பெறுமதி சேர்க்கின்ற நோக்கில் செயற்படுகின்ற சுயாதீன பிரிவாகும். தரவுகள் மற்றும் வியாபார தொழில்முயற்சி செயற்பாடுகளினை பகுப்பாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பணி மற்றும் சிபாரிசுகளினை வழங்குவதனூடாக நிறுவனத்தின் வினைத்திறன் மற்றும் செயற்திறனை மேம்படுத்துவதற்கு முயற்சி எடுக்கின்றன. கணக்காய்வு பிரிவு சுயாதீனமாக ஆலோசனை வழங்குகின்ற விடயங்களுடன தொடர்புடைய போக்கினைக் கொண்டதான முழுமையான மற்றும் பொறுப்பு கூடிய ஒழுங்குவிதிகளை மேற்கொள்ளும் போது அரச நிறுவனங்களுக்கு மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு பிரயோசனமுடையதாக உள்ளது. நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வாளர் பிரிவின் விடயப்பரப்பினை விஸ்தரிப்பு செய்துள்ளதுடன், செயற்பாட்டு அலுவல்களின் வினைத்திறன் நிதித் அறிக்கைகளின் பகுப்பாய்வு மோசடிகளுக்கு தண்டனை வழங்குதல் மற்றும் விசாரணை செய்தல் சொத்துக்களை பாதுகாத்தல் சட்ட மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க செயற்பாடுகளினை மேற்கொள்ளப்படுகின்றா என குறிப்படல் போன்ற பல விடயப்பரப்புகள் தெடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பிரதான உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பிரதான அலுவலராக நேரடியாக ஆணைக்குழுவிற்கு அறிக்கை வேண்டியதுடன் கணக்காய்வு அறிக்கை கணக்காய்வு குழுவின் முன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். நிருவாக பிரதான உள்ளக கணக்காய்வு பணிப்பாளர் நாயகத்திற்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும்.

### 12.1. பணிகள்

- இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவால் பேணுகின்ற கணக்கு வைப்புகள் மற்றும் அறிக்கையிடல் செயற்பாடுகளினை மேம்படுத்துதல் தொடர்பாகவும் அவற்றினை மீளாய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் குறிக்கோள்களினை அடைந்து கொள்வதற்கு ஏதேனும் பிரச்சினைகள் எழுமாயின் அவற்றுக்குரிய காரணங்கள் மற்றும் அச்சுறுத்தல்களினை விசாரணை செய்தல்
- இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் சொத்துக்கள் நட்டங்கள் சேதங்கள் மோசடிகளிலிருந்து பாதுகாத்தல் பாதுகாப்பு பற்றி உள்ளதா என்று உறுதிப்படுத்திக்கொள்ளுதல்
- கொடுக்கல் வாங்கல்களின் தேவை, பெறுபேறுகளினை பகுப்பாய்வு செய்தல் விரயம் மற்றும் செலவீட்டு எல்லைகளினை மீறி செலவு செய்தல் விற்பனை செய்வதனூடாக செலவினங்களைக் குறைத்தல் போன்ற வழிமுறைகளினை கைப்பற்றுவதற்கான ஆய்வுகளினை மேற்கொள்ளல்
- மேலே குறிப்பிட்ட முறைமைகளினூடாக தெரிந்து கொள்வதற்கு இனங்காணப்பட்ட வியடங்களினை அடிப்படையாக்கொண்டு கண்காய்வுக்குழுவிற்கு அறிக்கையினை சமர்ப்பித்தல் மற்றும் கூட்டத்தினை அழைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்
- கணக்காய்வு குழுவின் தீர்மானத்தினை தயார் செய்தல் மற்றும் புதிய நடவடிக்கைகளினை எடுக்கும் முகமாக பகுதித் தலைவர்களுக்கு பகிர்ந்தளித்தல்
- கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தின் இடைக்கால வருடாந்த அறிக்கையினை சமர்ப்பித்தல்
- பணிப்பாளர் நாயகம் / ஆணைக்குழுவின் பணிப்பாளர் அங்கத்தவர்கள் கோருகின்றவிடத்து விசேட புலனாய்வுகளினை மேற்கொள்ளுதல்
- ஆணைக்குழு பணிப்பாளர்களினால் காலத்துக்ககு காலம் நியமிக்கப்படும் பலதரப்பட்ட குழுக்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் சிபாரிசு செய்தல்

### 12.2. செயலாற்றுகை

2013 ஆம் ஆண்டில் கணக்காய்வுப் பிரிவினால் கண்ணகாய்வுக் குழு கூட்டங்கள் 4 நடைபெற்றுள்ளதுடன். கணக்காய்வுப் பிரிவினால் உள்ளக கணக்காய்வு பிரிவினாலட உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் 17 கணக்காய்வு குழுவுக்கு சமா்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அக்கூட்டங்களுக்கு கலந்துரையாடப்பட்டன.

அறிக்கையிடப்பட்ட விடயத்துறைகள் 12.1 ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

**உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள், 2013** அட்டவணை 12.1

| அறிக்கை இல | அறிக்கையிடப்பட்ட தினம் | விடயத் துறை |
|---|---|---|
| CIA/13/01 | 18/02/2013 | இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவின் தொழில் விபரம் |
| CIA/13/02 | 21/02/2013 | முத்திரை வரி |
| CIA/13/03 | 26/02/2013 | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களை பரீட்சித்தல். |
| CIA/13/04 | 14/03/2013 | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அலுவலகத்தினால் சமர்ப்பித்த அறிக்கை |
| CIA/13/05 | 04/03/2013 | தொலைத்தொடர்பு வரிச் சேகரிப்பு |
| CIA/13/06 | 11/04/2013 | உழைக்கும் போது செலுத்தும் வரியினை கணக்கிடல் |
| CIA/13/07 | 12/04/2013 | சம்பளம் செலுத்துதல் |
| CIA/13/08 | 22/05/2013 | கணக்காய்வாளர் தலைமை அதிபதி அலுவலகத்தினால் சமர்ப்பித்த அறிக்கை |
| CIA/13/09 | 09/07/2013 | இடர் கடன் செலுத்துதல் |
| CIA/13/10 | 10/07/2013 | தொலைத்தொடர்புகள் வரி 2013 |
| CIA/13/11 | 25/07/2013 | வருமானம் சேகரிக்கும் அதிகாரத்தை வழங்குதல். |
| CIA/13/12 | 28/08/2013 | கணக்காய்வாளர் நாயகம் சமர்ப்பித்த அறிக்கை |
| CIA/13/13 | 03/09/2013 | விழா முற்பணம் செலுத்துதல் - 2013 |
| CIA/13/14 | 08/11/2013 | தொலைத் தொடர்புகள் வரி மற்றும் செஸ் வரி தொடர்பாக தொலைத்தொடர்புகள் செயற்படுத்துனர் கம்பனிகளினால் அனுப்புகின்ற இணக்கப்பாட்டு கூற்றினை பரீட்ச்சிப்புச் செய்தல். |
| CIA/13/15 | 04/12/2013 | கணக்காய்வாளர் திணைக்களத்தினால் சமர்ப்பித்த அறிக்கை |

# நிதிப் பிரிவு

அத்தியாயம்
13

**சுருக்க அறிமுகம்**

நிதிப்பிரிவின் பிரதான பணிகளாவன ஆணைக்குழுவின் நிதி அலுவல்கள் தொடர்பில் நிதிமுகாமைத்துவத்தினை செய்தல் வருமானத்தினை சேகரித்தல் அந்த நிதியத்தினை உரிய பிரகாரம் முதலீடு செய்து, ஏற்றுக்கொள்ளப்பட்ட விதத்தில் பயன்படுத்துதல் ஆணைக்குழுவின் பிரதான பணியாக இருக்கின்றது. கொடுக்கல் வாங்கல்களில் உண்மைத் தன்மை மற்றும் பூரணத்துவத்தினை உறுதிபப்டுத்தல் சகல நிதிக் கொள்கைகள் இலங்கை பட்டயக் கணக்கரிஞர் நிறுவனத்தினால் பகிரங்கப்படுத்தப்பட்ட பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகள் மற்றும் கணக்கீட்டு நியமயங்கள் மற்று அரச நிதி பிரமாணங்களுக்கு இணைவாக மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்துவதுடன் அரச நிறுவனங்களின் கணக்காய்வாளர் நாயகத்திற்கு நிதியறிக்கைகளை சமர்ப்பித்தல் தொடர்பாக சட்ட ரீதியாக கட்டுப்பட்டுள்ளது.

நிதி முகாமைத்துவ பிரிவின் பணிகள் வரலாற்று கிரய எண்ணகருவின் பிரகாரம் அறிக்கையிடல் தொடர்பாக வரையறையறை செய்யப்படவில்லை அதுமட்டுமல்லாது நிதி நிருவாகம் கிரயக் கட்டுப்பாடு அபிவிருத்தி திட்டமிடல் மற்றும் உபாய வழி தீர்மானம் எடுத்தல் தொடர்பாக

பங்குபற்றல் இப்பிரிவினூடாக மேற்கொள்ளப்படுகின்ற முக்கிய பணிகளாகும்.

## 13.1 பணிகள்

- வரவு செலவுத் திடடம் / எதிர்வுகூறல் மற்றும் அது தொடர்பான சமமான விடயங்களில் விலகள்களுக்கு ஏற்ப நிதி தாக்கத்தினை அறிக்கையிடல்
- வருடாந்த வரவு செலவுத்திட்டம் / எதிர்வு கூறலினை தயார் செய்தல்.
- உள்ளக நிருவாகக் கடட்மைப்பினை ஸ்தாபித்தல் பேணிச் செல்லல்
- சகல நிலையான சொத:துக்கள் பற்றிய அறிக்கைகளினை பேணுதல் மற்றும் அவற்றினை உரிய முறையில் பயனப்டுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் வழிவகை செய்தல்
- மூலதனச் செலவினம் மற்றும் வருமானச் செலவின நிகழ்ச்சித்திட்டங்களினை அமுல்படுத்துகின்ற சந்தர்ப்பங்களில் உயர் முகாமைத்துவத்துடன் கூடிய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் ஒத்துழைப்பு வழங்குதல்
- வரி திட்டமிடலினை மேற்கொள்ளல் மற்றும் உரிய நியதிச் சட்டத்திற்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- கண்காய்வாளர் நாயக அறிக்கைகள் மற்றும் கணக்காய்வுக்குழு அறிக்கை போன்ற நிதி அறிக்கைகள் கால அடிப்படையிலான செயற்பாட்டு மீளாய்வு செய்தல் பகுப்பாய்வு செய்தல் மற்றும் தேவையான சந்தர்ப்பத்தில் சீரற்ற செயற்பாடுகளை சீர் செய்தல மற்றும் சரியான பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல்
- அரச மற்றும் பாராளுமன்றத்தின் சட்டத்தின்படி விதிக்கப்படுகின்ற வாரிகளினை துரிதமாக சேகரிப்பதற்கு வழிவகை செய்தல் மற்றும் நடவடிக்கைகள் எடுத்தல்
- சேகரிக்கப்பட்ட நிதியினை வினைத்திறனாகவும் உரிய பிரகாரம் பொதுத் திறைசேரியிக்கு மீளளிப்பு செய்வதற்கு வழிவகை செய்தல்
- மேலதீக நிதி இருப்பின் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறைப்படுத்தல் அபிவிருத்தி தொடர்பாக குறைந்த இலாபத்துடன் கூடிய பயன் கிடைகின்ற முதலீடுகளில் உரிய பிரகாரம் பயன்படுத்துவதற்கு வழிவகை செய்தல்

- ஆணைக்குழுவின் காலாண்டு மற்றும் வருடாந்த நிதிக் கூற்றுக்களினை தயார் செய்தல்
- வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகக்ள் நிதியியல் மற்றும் புள்ளிவிபரவியல் அறிக்கைகளினை பேணுதல் மற்றும் உயர்முகாமைத்துவத்துக்கு தேவையான தகவல்களினை வழங்குதல்

## 13.2 பணிகள்

### 13.2.1 வருமானம்

1996 ஆம் ஆண்டில் 17 ஆம் இலக்க, தொலைத்தொடர்புகள் சட்டத்தினூடாக ஆணைக்குழுவின் வருமானம் உழைத்தல் மற்றும் சேகரித்தல் நியதிச் சட்ட அதிகாரங்கள் நியதிச் சட்ட அதிகாரம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஆணைக்குழுவினால் வானொலி ஒலிபரப்பு அனுமதிப்பத்திர கட்டணங்கள் செஸ் கட்டணங்கள் முறைமை செயற்படுத்தல் அனுமதிப்பத்திர கட்டணங்கள் வர்த்தக அனுமதி கட்டணங்கள் பொது சுயாதீன வலையமைப்பு செயற்பாட்டுக் கம்பனிகள் (PSTN) மற்றும் வானொலி தொலைத்தொடர்புகள் பயன்பாடுகளை மேற்கொள்கின்ற உழைத்துக்கொள்கின்ற அல்லது சேரிப்பின் மேற்கொள்ளப்படும். மேலும் ஆணைக்குழுவின் வருமானம் வருடாந்தம் அதிகரித்துள்ளதுடன் அதிகரித்துள்ள விதம் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

13.1 ஆம் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் ஆணைக்குழுவின் வருமானம் (தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரியின் பின்னர்) 2012 ஆம் ஆண்டில் ரூபா 12.5 பில்லியன்களாக இருந்ததுடன் 2013 ஆம் ஆண்டில் ரூபா 21 பில்லியன்கள் அதாவது நூற்றுக்கு 68.9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இரண்டு வருடங்களிலும் ஆணைக்குழுவின் வருமானத்தில் உயர் பங்களிப்பை வானொலி அலைவரிசை அனுமதிப்பத்திரக் கட்டணங்களிலிருந்து கிடைத்ததுடன் 2012 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டாகும்

**2012 - 2013 காலப் பகுதியில் ஆணைக்குழுவின் வருமானம்** அட்டவணை 13.1

| வருமானக் பாய்ச்சல் | 2013 (ரூ.'000) | 2012 (ரூ. '000) |
|---|---|---|
| முறைமை செயற்படுத்துநர் அனுமதிப்பத்திர கட்டணம் | 2,060,743 | 1,418,318 |
| செஸ் கடட்டணம் | 3,500,556 | 3,514,976 |
| வானொலி அனுமதிப்பத்திரக் கட்டணம் | 8,226,963 | 6,532,361 |
| வானொலி அலைவரிசை முன் கட்டணங்கள் | 5,661,039 | 367,347 |
| விற்பபனை அனுமதிப்பத்திரக் கட்டணம் | 12,464 | 8,800 |
| பயிலுநர் வானொலிச்சோவைக் கட்டணங்கள் | 91 | 94 |
| இணைய நிலைய அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 696 | 260 |
| விமான நிலைய அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 170 | 405 |
| கம்பிகளற்ற தொலைபேசி வர்த்தக கட்ணங்கள் | 24,911 | 20,055 |
| பரீட்சைக் கட்டணங்கள் | 4 | 12 |
| விண்ணப்பப் பத்திரங்களைத் தயாரிக்கும் கட்டணங்கள் | 1,633 | 7,143 |
| குறுகிய குறியீட்டுக் கட்டணங்கள் | 8,163 | 6,122 |
| பலதரப்பட்ட நிலையான வருமானங்கள் (பதவியணி கடன் தொடர்பான வட்டியிலிருந்து கிடைக்கின்ற வருமானங்கள்) | 1,991,029 | 823,950 |
| **மொத்தம்** | **21,488,458.4** | **12,699,843** |
| கழி: தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | (421,995.0) | (227,945) |
| **மொத்தம்** | **21,066,463.4** | **12,471,898** |

*REPO என்பது மீள்கொள்வனவு ஒப்பந்தத்தைக் குறிக்கும்.

போது 26 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. வானொலி அலைவரிசை முற்பணக் கட்டணங்கள் 2012 முதல் 2013 வரை நூற்றுக்கு 1441 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதுடன் அதற்கான காரணமாக அமைந்தது 2013 ஆம் ஆண்டில் அலைவரிசை ஏலம் செய்வதாகும்.

பெறுமதி சேர்க்கப்பட்ட வரியின் பிரகாரம் நூற்றுக்கு கையடக்க மற்றும் நிலையான வாடிக்கையாளர் வரி சுற்றாடல் பாதுகாப்பு வரி என்பனவற்றுக்கு அரசினால் பெறுமதி சேர் வரி (VAT)" கையடக்க மற்றும் நிலையான வாடிக்கையாளர் வரி (MSL)" தொழில்முயற்சிப் பாதுகாப்பு வரி(நுஊடு)" வதொடர்பாக அரசாங்கத்தினால் பொது சுயாதின தொலைத்தொடர்புகள் செயற்படுத்தும் கம்பனிகளினால் விநியோகிக்கப்படுகின்ற தொலைத்தொடர்புகள் சேவையின் பிரகாரம் நூற்றுக்கு தொலைத்தொடர்புகள் வரி விதிக்கப்பட்டுள்ளது. மேலும் தொலைபேசி செயற்படுத்துனர் கம்பனிகளின் மொத்த கிரயத்தின் படி அரசாங்கத்தினால் நூற்றுக்கு 2 செஸ் வரி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வருமானங்களுக்கு மேலதிகமாக 2009 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான 2004 ஆம் அண்டின் 11ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரம் கிடைக்கப்படுகின்ற அழைப்புக்கள் தொடர்பில் அபிவிருத்தி கட்டணம் என்ற வகையில ஒரு நிமிடத்துக்கு அமொிக்க டொலர் 0.80 மற்றும் வெளிச் செல்கின்ற சர்வதேச அழைப்புக்கள் தொடர்பில் சர்வதேச தொலைபேசி செயற்படுத்துநர்களிடமிருந்து ஒரு நிமிடத்துக்கு ரூபா 2 வரியினை தொலைத்தொடர்புகள் ஆணைக்குழுவினால் சேகரிக்கப்படுகின்றன. 2012 மற்றும் 2013 ஆண்டுகள் தொடர்பில் தொலைத்தொடர்பு வரி மற்றும் சர்வதேச தொலைத்தொடர்பு செயற்படுத்துனர் வரி பற்றிய தகவல்கள் கீழ் குறிப்பிடப்பட்ட வரைபடத்தில் காட்டப்படுகின்றது

### 13.2.2 திரட்டு நிதியத்துக்கான மீளளிப்பு

2013 ஆம் ஆண்டில் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் திரட்டு நிதியத்திற்கு 35.1 மில்லியன்கள் மீளளிப்பு செய்யபட்டுள்ள அதே வேளை இத் தொகையானது 2012 ஆம் ஆண்டில் ரூபா 37.5 மில்லியன்களாகும். 2013 ஆம் ஆண்டில் திறைசேரிக்கான மீளளிப்பில்

**இலங்கை தொலைத்தொடர்புகள் வரி (ரூ. 000) 2013-2013** 13.2 அட்டவணை

| வருமானப் பாய்ச்சல் | 2013 | 2012 |
|---|---|---|
| தொலைத்தொடர்புகள் வரி | 18,449,721 | 17,263,324 |

**சர்வதேச தொலைத்தொடர்பு செயற்படுத்துனர் வரி (ரூ. 000) 2012 - 2013** 13.3அட்டவணை

| வருமானப் பாய்ச்சல் | 2013 | 2012 |
|---|---|---|
| தொலைத்தொடர்புகள் அபிவிருத்திக் கட்டணம் | 7,239,709 | 6,613,131 |
| வெளிச் செல்கின்ற தேசிய பிரவேசக் கட்டண வரி | 1,994,855 | 2,016,899 |

சிறிய குறைவு காணப்பட்ட போதும் கடந்த சில வருடங்களாக இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழு அரச வருமானம் தொடர்பாக கருதத்தகு பங்களிப்பை தொடர்ச்சியாக வழங்கியுள்ளது. அரசின் ஏனைய தொழில் முயற்சிகளுடன் ஒப்பீடு செய்து பார்க்கின்ற போது இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்கு முறைப்படுத்தல் ஆணைக்குழுவின் அரசாங்கத்திற்கான வருமானத்திற்கான பங்களிப்பும் வருடாந்தம் உயர் தொகையாகக் காணப்படுகின்றன.

### 13.2.3 ஆதனங்கள் பொருத்துக்கள் மற்றும் உபகரணங்கள்

மீளாய்வு வருடத்தின் போது ஆதனங்கள் பொருத்துக்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக ரூபா 447.7 மில்லியன்கள் செலவு செய்யப்பட்டன. மொத்த சேரிப்பில் இருந்து தாமரைகோபுரச் செயற்திட்டத்தினூடாக காணியினை கொள்வவு செய்தல் கொக்காவில் கோபுரத்தினை மேலும் மேம்படுத்தல / நிர்மாணனித்தல் தொடர்பாக முறையே 300 பில்லியன்கள் மற்றும் ரூபா 17.5 பில்லியன்கள் செலவு செய்யப்பட்டுள்ளன.

### 13.2.4 முதலீடு

ஆணைக்குழு மக்கள் வங்கியில் நிலையான வைப்புத் தொடர்பாக் ரூபா 15.8 பில்லியன்கள் முதலீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஆணைக்குழுவினால் மக்கள் வங்கியில் நாளாந்த பங்குச் சந்தை கொடுக்கல் வாங்கல்களை பேணிச் செல்வதுடன் 2013 ஆம் ஆண்டில் அது போன்ற பங்குச் சந்தை கொடுக்கல் வாங்கல்களிலிருந்து பெற்ற வட்டி வருமானமாக ரூபா 55.20 மில்லியன் தொகையினை உழைத்துள்ளது.

# இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

2013 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள்

## இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
## 2013 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமை
(இலங்கை ரூபாக்களில்)

| | குறிப்புக்கள் | 31.12.2013 | 31.12.2012 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| நடைமுறையல்லாப் சொத்துக்கள் | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணம் | 4 | 2,444,056,716 | 2,077,020,071 |
| நடைபெற்று வரும் வேலைகள் | 5 | 4,843,082,281 | 2,053,278,670 |
| முதலீடுகள் | 6 | 17,776,135,000 | 2,566,137,811 |
| முற்பணக் கொடுப்பனவு திரட்டுதல் - (தாமரைக் கோபுரம்) | | 1,597,943,972 | 0 |
| மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள் | | 26,661,217,969 | 6,696,436,552 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| மீள் கொள்வனவு ஒப்பந்தங்களின் கீழ் அரசாங்கப் பிணையங்கள் | | 1,114,000,000 | 7,039,684,939 |
| கிடைக்க வேண்டிய கணக்குகள் | 7 | 1,291,671,609 | 1,476,877,387 |
| ஏனைய கிடைக்க வேண்டியவைகள் | | 640,000 | 890,000 |
| அனர்த்தக் கடன்கள் | | 23,500,693 | 16,927,119 |
| முற்கொடுப்பனவுகள் | | 108,000 | 927,261 |
| விசேட முற்பணங்கள் | | 575 | 575 |
| பண்டிகைக் கால முற்பணங்கள் | | 125,258 | 130,258 |
| மோட்டார் வாகனக் கடன்கள் | | 40,495,317 | 50,311,034 |
| வீடமைப்புக் கடன்கள் | | 4,163,507 | 4,642,847 |
| மோட்டார் சைக்கிள் கடன்கள் | | 563,026 | 926,585 |
| பெறுமதி சேர் வரிக் கட்டுப்பாட்டுக் கணக்கு | | 142,663,074 | 140,432,740 |
| கொள்வனவு முற்பணங்கள் | | 137,140 | 122,140 |
| நிலுவையாகவுள்ள ஊழியர் கடன்கள் மீளஅறவிட வேண்டியவை | | 2,461,764 | 2,461,764 |
| கிடைக்க வேண்டிய விமானச் சீட்டுக் கட்டணம் | | 0 | 516,790 |
| கிடைக்க வேண்டிய விமானச் சீட்டுக் கட்டணம் - SAFIR | | 0 | 1,930 |
| சம்பளக் கழிப்பனவுகள் மீள அறவிடப்பட வேண்டியவை | | 31,057 | 12,987 |
| நிலையான வைப்புக்கள் மீதான கிடைக்க வேண்டிய வட்டி | | 1,001,718,707 | 100,440,927 |
| உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் (நிறுத்தி வைத்தல் வரி) | | 84,154,187 | 1,289,954 |
| கோரமுடியுமான பொருளாதார சேவைகள் கட்டணம் | | 41,372,701 | 16,980,862 |
| கிடைக்க வேண்டிய தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணம் | | 1,136,598,307 | 1,295,355,335 |
| கிடைக்க வேண்டிய OLAC மீதான தீர்வை | | 168,544,617 | 334,255,272 |
| தொலைத்தொடர்பு தீர்வை கிடைக்க வேண்டியவை | | 1,719,984,922 | 1,524,622,591 |
| வங்கியிலுள்ள காசு | 8 | (805,872,890) | 332,648,145 |

## இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
## 2013 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமை
(இலங்கை ரூபாக்களில்) (தொடர்ச்சி....)

| | | | |
|---|---|---|---|
| கையிருப்பிலுள்ள காசு | 8B | 49,795,615 | 56,197 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | | 6,016,857,186 | 12,340,515,638 |
| மொத்தச் சொத்துக்கள் | | 32,678,075,155 | 19,036,952,190 |
| உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள் | | | |
| உரிமையாண்மை | | | |
| அரசாங்கப் பங்களிப்புக்கள் | | | |
| - உலக வங்கி கடன் ஒப்பந்தம் | | 298,572,434 | 298,572,434 |
| - ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | | 19,533,906 | 19,533,906 |
| ஏனைய அரசாங்கப் பங்களிப்புக்கள் | | 208,108,404 | 208,108,404 |
| திரட்டு மிகை | | 21,056,069,244 | 8,635,122,294 |
| மீள்பெறுதிடப்பட்ட மிகை | | 53,580,000 | 53,580,000 |
| மொத்த உரிமையாண்மை | | 21,635,863,988 | 9,214,917,038 |
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | | | |
| சர்வதேச தொலைத்தொடர்புச் சேவை வழங்குநர் தீர்வை நிதியம் | 9A | 1,383,168,816 | 4,094,658,010 |
| செயற்திட்டக் கடன் - எக்சிம் வங்கி (தாமரைக் கோபுரம்) | | 2,694,595,160 | 0 |
| நிறுத்தி வைத்தல் - தாமரைக் கோபுரம் | | 349,843,107 | 0 |
| மொத்த நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | | 4,427,607,084 | 4,094,658,010 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| செலுத்த வேண்டிய கணக்குகள் | 9 | 211,504,171 | 53,939,097 |
| தவறவிட்பட்ட வருமானம்(மானியம்) | | 55,541 | 111,083 |
| நானாவித கடன்கள் | | 0 | 172,750 |
| செலுத்த வேண்டிய செயற்திட்டங்கள் | | 51,390,725 | 59,061,792 |
| வருமான வரிக்கான ஏற்பாடு | | 427,429,305 | 228,253,039 |
| பொது நலவாய தொலைத்தொடர்பு நிறுவன தொலைத் தொடர்பு நிலையச் செயற்திட்டத்துக்குச் செலுத்த வேண்டியவை | | 924,492 | 924,492 |
| நிர்மாணக் கடன்காரர்கள் | | 751,650 | 751,650 |
| முற்பணமாகக் கிடைத்த வருமானம் | | 3,381,768,907 | 2,786,337,939 |
| கேள்விமனுக்களுக்கான மீளளிக்கப்படும் வைப்புத்தொகை | | 1,443,774 | 1,298,774 |
| மீளளிக்கப்பட வேண்டிய வைப்புக்கள் - ஊழியர்கள் | | 2,086,843 | 2,086,843 |
| 1800 MHz அலைவரிசைக்குக் கிடைத்த முற்பணங்கள் | | 57,500,000 | 57,500,000 |
| பணிக்கொடைகளுக்கான ஏற்பாடுகள் | | 21,832,077 | 11,632,109 |
| பயனுறுதி வாய்ந்த அனர்த்த முகாமை மாநாட்டுக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | | 34,210 | 34,210 |
| சேதமடைந்த அன்ரெனாக்களுக்காகக் கோரப்படும் காப்புறுதி | | 25 | 0 |
| திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய 50% | | 568,299,153 | 652,745,143 |

**இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு**
**2013 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமை**
(இலங்கை ரூபாக்களில்) (தொடர்ச்சி....)

| | | | |
|---|---|---|---|
| தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணம் | | 168,549,617 | 334,255,272 |
| திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய OLAC மீதான தீர்வை | | 1,721,032,594 | 1,536,326,947 |
| தொலைத்தொடர்பு திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய தீர்வை | | 1,000 | 0 |
| PSTN பணியறைகள் - கொக்காவில் | | 0 | 1,937,438 |
| உரிமைகோரப்படாத ஊழியர் பயன்கள் | | 0 | 8,567 |
| மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் | | 6,614,604,083 | 5,727,377,143 |
| மொத்தப் பொறுப்புக்கள் | | 11,042,211,167 | 9,822,035,153 |
| மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள் | | 32,678,075,155 | 19,036,952,191 |

**கணக்கீட்டுக் கொள்கைகளும் 07 முதல் 22 ஆம் பக்கம் வரையிலான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களும் இந்த நிதிக் கூற்றுக்களின் தவிர்க்க முடியாத ஒரு பகுதிகளாகும். ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்கள் 2013 டிசம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான உண்மையானதும் நியாயமானதுமான தன்மையைப் பிரதிபலிப்பவையாகவும் இக்காலப்பகுதிக்கான மிகைகளைக் காட்டக்கூடியவையாகவும் உள்ளன.**

**எம்.கே. ஜயந்த**
பணிப்பாளர் (நிதி))

இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்துச் சமர்ப்பிக்கும் பொறுப்பு ஆணைக்குழுவுக்குரியதாகும்.

ஆணைக்குழுவின் சார்பிலும் ஆணைக்குழுவுக்காகவும் அங்கீகரிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டது.

**லலித் வீரதுங்க**
தலைவர்

**அநுஷ பல்பிட்ட**
பணிப்பாளர் நாயகம்

**இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு**
**2013 டிசம்பர் 13 ஆந் திகதியில் முடிவடைநத வருடத்திற்கான இலாப அல்லது நட்டக் கணக்கு மற்றும் ஏனைய முழுமையான வருமானங்கள்**
(இலங்கை ரூபாக்களில்)

| | குறிப்புகள் | 31.12.2013 | 31.12.2012 |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| வருமானம் | 10 | 21,066,462,563 | 12,471,897,357 |
| தொலைத்தொடர்புத் தீர்வை | | 18,449,721,208 | 17,263,323,924 |
| தொலைத்தொடர்பு அபிவிருத்திக் கட்டணங்கள் | 10B | 7,239,709,188 | 6,613,130,847 |
| வெளிச்செல்லும் உள்நாட்டு அனுகல் கட்டணங்கள் மீதான தீர்வை | | 1,994,854,968 | 2,016,899,365 |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | | **48,750,747,927** | **38,365,251,493** |
| கழி : ஒழுங்குபடுத்தற் செலவுகள் | 11 | (870,579,295) | (272,988,566) |
| **தேறிய மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | | **47,880,168,632** | **38,092,262,927** |
| **கழி : ஏனைய செலவுகள்** | | | |
| | சஞ்சிகைகள் மற்றும் வெளியீடுகள் | 0.00 | 341,608.00 |

## இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு கணக்குகளுக்கான குறிப்புக்கள் - 31.12.2013

(இலங்கை ரூபாக்களில்) (தொடர்ச்சி....)

| | | 31.12.2013 | 31.12.2012 |
|---|---|---|---|
| | இணையப் பாதுகாப்பு அனுசரணை | 0.00 | 350,000.00 |
| | தாமரைக் கோபுரச் செயற்திட்டம் | 4,604,482.93 | 19,547,067.00 |
| | | **887,533,201.05** | **272,988,566.00** |
| | கழிக்க: கொக்காவில் கோபுரச் செயற்திட்டம் | (16,953,905.88) | 0.00 |
| | | **870,579,295.17** | **272,988,566.00** |
| **12** | **நிர்வாக மற்றும் தாபனச் செலவுகள்** | | |
| | சம்பளங்கள் | 91,732,074.53 | 68,322,937.00 |
| | ஊ.சே.நி (15% பங்களிப்பு) | 13,471,892.11 | 9,325,219.00 |
| | ஊ.ந.நி (3% பங்களிப்பு) | 2,681,009.55 | 1,865,044.00 |
| | வாழ்க்கைச் செலவுப் படி | 9,262,399.88 | 12,976,599.00 |
| | போக்குவரத்துக் கொடுப்பனவு | 16,845,116.04 | 15,966,751.00 |
| | வீட்டு வாடகைக் கொடுப்பனவு | 7,555,959.98 | 5,294,251.00 |
| | ஏனைய படிகள் | 2,030,751.05 | 1,085,486.00 |
| | செயலாற்றுகை ஊக்குவிப்புக் கொடுப்பனவு | 17,859,975.05 | 13,589,631.00 |
| | விசேட கொடுப்பனவுகள் | 5,190,047.00 | 6,902,750.00 |
| | மிகை ஊதியம் | 8,543,949.00 | 4,088,990.00 |
| | மேலதிக நேரம் | 6,573,392.33 | 7,223,995.00 |
| | தலைவரின் ஊதியம் | 450,000.00 | 450,000.00 |
| | பயன்படுத்தப்படாத லீவு விடுமுறை | 10,695,478.00 | 3,477,670.00 |
| | ஓய்வூதியத்திற்கான ஆணைக்குழுவின் பங்களிப்பு | 654,855.01 | 973,726.00 |
| | பிரயாணம் சலுகைக் கட்டணம் - புகையிரதம் | 5,000.00 | 0.00 |
| | சுற்றுலா விடுதித் தொலைபேசிகள் | 1,973,805.99 | 664,049.00 |
| | சீருடைகள் | 473,916.75 | 259,732.00 |
| | ஊழியர் நலனோம்பல் | 8,854,315.73 | 8,319,488.00 |
| | விளையாட்டுத்துறைச் செயற்பாடுகளின் அபிவிருத்தி | 1,469,983.75 | 1,430,480.00 |
| | ஊழியர் தொழில்சார் அங்கத்துவச் சந்தா | 319,236.09 | 281,156.00 |
| | உள்நாட்டுப் பயிற்சி | 1,289,840.00 | 1,165,950.00 |
| | ஆணைக்குழு அங்கத்தவர் கொடுப்பனவு | 60,000.00 | 91,264.00 |
| | கணக்காய்வுக் குழுக் கொடுப்பனவு | 37,500.00 | |
| | வீடமைப்புக்கடன் 2/3 வட்டி மீளளிப்பு | 3,486,312.66 | 3,812,284.00 |
| | பிரயாணம் மற்றும் சுயதேவை | 25,480.00 | 97,001.00 |
| | பணிக்கொடை | 1,711,791.24 | 918,592.00 |
| | மின்சாரம் | 42,150,759.25 | 47,433,944.00 |
| | நீர் | 1,128,512.06 | 1,213,845.00 |

**இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு**
**கணக்குகளுக்கான குறிப்புக்கள் - 31.12.2013**
(இலங்கை ரூபாக்களில்) (தொடர்ச்சி....)

| | | 31.12.2013 | 31.12.2012 |
|---|---|---|---|
| | துப்புரவுச் சேவைகள் | 2,883,284.82 | 3,124,272.00 |
| | பாதுகாப்பு | 5,411,527.00 | 5,807,661.00 |
| | வீதங்கள் மற்றும் வரிகள் | 37,500.00 | 78,893.00 |
| | பொருளாதார சேவைகள் கட்டணம் | 0.00 | 0.00 |
| | நூலகத்திற்கான நூல்கள் | 2,008,519.93 | 274,050.00 |
| | அச்சிடுதல் மற்றும் எழுது பொருட்கள் | 8,709,625.65 | 7,588,437.00 |
| | எரிபொருள் | 4,881,748.71 | 5,377,359.00 |
| | மின் உபகரணங்கள் | 296,160.00 | 161,112.00 |
| | தபாற் செலவு | 994,580.92 | 906,520.00 |
| | தொலைபேசி, தொலைநகல் PABX | 4,280,078.48 | 4,420,538.00 |
| | காப்புறுதி (சொத்து மற்றும் மருத்துவ) | 39,627,778.86 | 38,906,001.00 |
| | இணையக் கட்டணங்கள் | 668,845.15 | 887,883.00 |
| | வாகன வாடகைக் கட்டணங்கள் | 2,400.00 | |
| | செய்தித்தாள்கள் மற்றும் அறிவித்தல்கள் | 9,625,387.56 | 6,743,223.00 |
| | ஆலோசனைச் சேவைக் கட்டணங்கள் | 0.00 | 15,830.00 |
| | கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகள் | 735,340.30 | 0.00 |
| | கணக்காய்வுக் கட்டணங்கள் | 0.00 | 1,280,000.00 |
| | சட்டச் செலவுகள் | 263,908.80 | 33,394.00 |
| | வாடகைக்குப் பெறப்பட்ட வளவுகளுக்கான வாடகைகள் | 2,385,893.16 | 931,634.00 |
| | வாகன வாடகைக் கட்டணங்கள் | 0.00 | 0.00 |
| | இணைய குத்தகை இணைப்புக்கான வாடகைகள் | 3,082,665.30 | 3,579,149.00 |
| | பெறுமானத்தேய்வு | 80,667,821.99 | 67,981,271.00 |
| | நிர்வாகம் நானாவித | 915,297.45 | 1,484,085.00 |
| | நானாவித கொள்வனவுகள் மற்றும் வழங்கல்கள் | 742,321.23 | 1,439,210.00 |
| | நானாவித தொழிற்பாட்டுச் செலவுகள் | 31,438.00 | 222,412.00 |
| | | **424,785,476.36** | **368,473,770.00** |
| **13** | **திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்புச் செலவுகள்** | | |
| | அலுவலக உபகரணப் பராமரிப்பு | 3,552,070.75 | 1,653,444.00 |
| | மின்னுயர்த்திகளின் பராமரிப்பு | 0.00 | 744,520.00 |
| | மின் உற்பத்தி இயந்திரப் பராமரிப்பு | 0.00 | 15,861.00 |
| | வாகனப் பராமரிப்பு | 7,071,567.55 | 8,249,241.00 |
| | கட்டடப் பராமரிப்பு | 2,962,029.56 | 2,630,442.00 |
| | தொழில்நுட்ப உபகரணங்களின் பராமரிப்பு | 705,833.60 | 1,310,139.00 |
| | மென்பொருள் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி | 18,385,497.44 | 25,393,945.00 |
| | லோட்டஸ் டொமினியன் சேர்வர் மேம்பாடு | 0.00 | 0.00 |

## இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
## கணக்குகளுக்கான குறிப்புக்கள் - 31.12.2013
(இலங்கை ரூபாக்களில்) (தொடர்ச்சி....)

| | | 31.12.2013 | 31.12.2012 |
|---|---|---|---|
| | கண்காணிப்பு முறை மேம்பாடு | 780,300.00 | 0.00 |
| | கண்காணிப்பு முறை மேம்பாடு | 290,059.68 | 0.00 |
| | நானாவித திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு | 19,250.00 | 81,013.00 |
| | | **33,766,608.58** | **40,078,606.00** |
| **14** | **நிதி மற்றும் ஏனைய செலவுகள்** | | |
| | வங்கிக் கட்டணங்கள் | 249,544.16 | 207,325.00 |
| | வங்கிப் பற்று வரி | 0.00 | 0.00 |
| | முத்திரைத் தீர்வை | 34,825.00 | 1,545,687.00 |
| | பணிக்கொடை ஏற்பாட்டுக்கான வட்டி | 0.00 | 2,780,848.00 |
| | | 284,369.16 | 4,533,860.00 |
| **15** | **குறை / (மிகை) ஏற்பாடு** | | |
| | | (மிகை)/குறை ஏற்பாடு | (மிகை)/குறை ஏற்பாடு |
| | திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய சர்வதேச அழைப்புத் தீர்வை | 350,446.86 | 0.00 |
| | கிடைக்க வேண்டிய TDC | 1,498,312.99 | 0.00 |
| | திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய தொழில்நுட்பத் தீர்வை | (11,704,354.47) | 0.00 |
| | நீர் | (4,436.80) | 0.00 |
| | திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு | (1,788,601.56) | 0.00 |
| | துப்புரவுச் சேவைகளுக்குச் செலுத்த வேண்டியவை | (137,346.98) | 0.00 |
| | செலுத்த வேண்டிய மிகை ஊதியம் | (320.00) | 0.00 |
| | செலுத்த வேண்டிய விமானச் சீட்டுக் கட்டணம் | (915.83) | 0.00 |
| | மின்சாரம் | (255.00) | 0.00 |
| | பங்களா தொலைபேசி | 2.47 | 0.00 |
| | செலுத்த வேண்டிய செய்தித்தாள் மற்றும் அறிவித்தல்கள் கட்டணங்கள் | (1,000.00) | 0.00 |
| | செலுத்த வேண்டிய நானாவிதமானவை | (474,547.67) | 0.00 |
| | செலுத்த வேண்டிய ஊழியர் நலனோம்பல் | (45,599.14) | 0.00 |
| | செலுத்த வேண்டிய 2/3 வீடமைப்புக் கடன் வட்டி | 30.00 | 0.00 |
| | செலுத்த வேண்டிய பிரயாணம் மற்றும் தனிப்பட்ட செலவு | (46,200.00) | 0.00 |
| | SAFIR கிடைக்க வேண்டிய விமான டிக்கற்) | 1,930.28 | 0.00 |
| | கோரமுடியுமான பொருளாதார சேவைகள் கட்டணம் | (15,170,394.21) | 0.00 |
| | | **(27,523,249.06)** | **0.00** |

**இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு**
**கணக்குகளுக்கான குறிப்புக்கள் - 31.12.2013**
(இலங்கை ரூபாக்களில்) (தொடர்ச்சி....)

| | | 31.12.2013 | 31.12.2012 |
|---|---|---|---|
| **16** | **திரட்டு நிதியத்திற்கான பங்களிப்பு** | | |
| | தொலைத்தொடர்புச் சட்டத்தின் கீழான பங்களிப்பு | 10,100,000,000.00 | 10,200,000,000.00 |
| | நிதிச் சட்டத்தின் கீழான பங்களிப்பு | | |
| | செலுத்தப்பட்ட தொலைத்தொடர்புத் தீர்வை | 18,449,721,207.86 | 17,275,006,382.00 |
| | 50% தொ. அபிவிருத்திக் கட்டணங்கள் | 3,964,677,717.34 | 2,980,192,851.97 |
| | செலுத்தப்பட்ட OLAC மீதான தீர்வை | 1,994,854,967.50 | 2,016,548,919.00 |
| | | **34,509,253,892.70** | **32,471,748,152** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல. / My No. ரீஎம்(2)/எச்/ரீஆர்சீ/1/13/20 ඔබේ අංකය / உமது இல. / Your No.

දිනය / திகதி / Date 2014 யூலை 28

தலைவர்,

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1996 இன் 27 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 22(ஏ)(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை 2014 மே 02 ஆந் திகதி ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்டது.


No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட

கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியிராமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) நியம இல. 16 | (i) ஆதனம், பொறி உபகரணங்களுக்காக பெறுமானத்தேய்விடப்படுகையில் சொத்துக்கள் பயன்பாட்டிற்கு உகந்த நிலைக்குக் கொண்டுவரப்பட்ட நாள் முதல் பெறுமானத்தேய்விடப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவால் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்படுகையில் முழு ஆண்டிற்காகவும் அகற்றப்படும் ஆண்டின் போது பெறுமானத்தேய்விடப்படாது விடுவதற்குமான கணக்கீட்டுக் கொள்கை பின்பற்றப்பட்டிருந்தது. |
| | (ii) ஆணைக்குழுவிற்குச் சொந்தமாகக் காணப்பட்ட 112 ஏக்கர் 01 ரூட் 10.5 பேர்ச் அளவிலான காணியிலிருந்து ஏறத்தாழ 50 சதவீதமான அளவு கட்டான பிரதேச செயலகத்தால் கைப்பற்றப்பட்டிருந்ததுடன் அம் முழுக் காணியின் பெறுமதியும் ரூபா 45,000,000 ஆக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. சோத்துக்கள் மீள்பெறுமதியிடப்பட்டு நியாயப் பெறுமதியின் கீழ் கணக்கிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய போதிலும் கடந்த 11 ஆண்டுகளின் போது இது கணக்குக் குறிப்பின் மூலம் மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. |
| | (iii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 அளவில் முற்றாகப் பெறுமானத்தேய்விடப்பட்ட |

எனினும், செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த ரூபா 399,451,975 கிரயமான நிலையான சொத்துக்கள் மீள்பெறுமதியிடப்படாது பூச்சியப் பெறுமதியில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 130,544,231 பெறுமதியான விலைப் பட்டியல் முன்னைய ஆண்டிற்காக வழங்கப்பட்ட காரணத்தால் மீளாய்வாண்டில் அலை வரிசை அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 130,544,231 தொகை கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் நிலையான சொத்து விற்பனை இலாபம் ரூபா 2,367,160 தொகையாகவும் நீதிமன்ற வழக்குகளிலிருந்து மீள அறவிடப்பட்டவை ரூபா 630,000 தொகையாகவும் வேறு வருமானத்திற்கான குறிப்பில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இது வருமானக் கூற்றில் வருமானத்துடன் சேர்க்கப்படாது ஆண்டிற்கான விபரமான வருமானத்துடன் சேர்த்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவின் வியாபாரக் கடன்பட்டோராக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலவிய மீதியான ரூபா 365,254,867 தொகை 02 ஆண்டுகளுக்கு மேலான கடன் மீதியாக வகைப்படுத்தப்பட்டிருந்த போதிலும் 20 ஆண்டுகளுக்கு மேலான காலம் முதல் நிலவிவரும் கடன் மீதிகளும் இதில் அடங்கியிருந்தது.

(ஆ) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திடமிருந்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 105,727,789 தொகை அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டதுடன் வழங்கப்பட்ட சேவைக்காக 2012

ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் போது விலைப்பட்டியல் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் ரூபா 01 மில்லியனிற்குக் கூடுதலான 11 கடன்பட்டோரில் 2 முதல் 14 ஆண்டுகாலமாக ரூபா 224,805,159 தொகை அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டபோதிலும் அக் கடன்பட்டோருக்கு பல வருடகாலமாக விலைப்பட்டியல் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அலைவரிசைகளைப் பயன்படுத்தும் 34 நிறுவகங்களால் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திற்கு முன்னர் செலுத்தப்பட வேண்டிய பணத்திற்கு மேலாக ரூபா 1,640,929 தொகையான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அக் கொடுப்பனவுகளைத் தீர்ப்பதற்காக இது வரையிலும் ஆணைக்குழுவால் முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 01 வருடத்திற்கு மேலான காலமாக அறவிடப்படாதுள்ள ஊழியர் கடன் மீதி ரூபா 2,461,764 தொகையாகக் காணப்பட்டது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைகள் கணக்காய்வின் போது கண்டறியப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு, 2000 யூன் 27 ஆம் திகதிய பீஎப்/பீஈ/09 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2011 சனவரி 27 ஆம் திகதிய பீஈடீ | காசு முதலீடு மற்றும் காசை நிறுத்தி வைத்திருப்பது தொடர்பாகப் பெறவேண்டிய அங்கீகாரம் இன்றி ஆணைக்குழுவால் ரூபா 18,524,500,000 தொகை வங்கியில் நிலையான வைப்புகளிலும் திறைசேரி உண்டியல்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தன. |

56 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை

(i) XXIV ஆம் அத்தியாயத்தின் 7.9.2 ஆம் உப பிரிவு

உத்தியோகத்தர்களின் கொடுப்பனவுகளற்ற சம்பளத்தில் மொத்தக் கழிப்பனவுகளின் 40 சதவீத எல்லையில் கடன் தொகை பரிந்துரைக்கப்பட வேண்டிய போதிலும் பணிப்பாளரிற்கு (வலையமைப்பு) சம்பளத்தில் மொத்தக் கழிப்பனவுகளின் கூட்டுத்தொகை 40 சதவீத எல்லைக்கு மேலாக இருக்கையில் வாகனக் கடன் தொகை அங்கீகரிக்கப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) XXIV ஆம் அத்தியாயத்தின் 7.2.5 ஆம் உப பிரிவு

பணிப்பாளரால் (வலையமைப்பு) வாகனம் ஒன்று கொள்வனவு செய்யப்படுவதற்காக 2006 ஆம் ஆண்டின் போது ரூபா 1,500,000 இற்குக் கடன் தொகை பெறப்பட்டிருந்த போதிலும் அத் தொகையில் வாகனம் ஒன்று கொள்வனவு செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத் தொகை 2011 மார்ச் மாதம் வரை சொந்தமாகச் செலவிடப்பட்டு அது வரை செலுத்தப்பட இருந்த மொத்தக் கடன் தொகையும் வட்டியுமான ரூபா 865,358 தொகை ஆணைக்குழுவிற்குத் தீர்க்கப்பட்டு ரூபா 2,100,000 தொகையான வாகனக் கடன் தொகை மீளப் பெறப்பட்டிருந்தது.

வாகனக் கடன் 05 ஆண்டுகளுக்கு ஒரு முறையே பெற்றுக்கொள்ளக்கூடிய போதிலும் இவ் உத்தியோகத்தர் 2011 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொண்ட கடன் தொகை 2013 ஆம் ஆண்டின் போது தீர்க்கப்பட்டு 2013 யூலை மாதம் ரூபா 2,260,000 தொகையான கடன் தொகை மீளப் பெறப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்<br>நிதிப் பிரமாணம் 757(2) | ஆணைக்குழுவால் மீளாய்வாண்டின் இறுதியில் மெய்மையாய்வுச் சபை நியமிக்கப்பட்டு சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டு அந்த அறிக்கையின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1990 பெப்ரவரி 19 ஆம் திகதிய கொள்கைத் திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கைக் கடிதம் | அரச கூட்டுத்தாபனங்கள், அரச நிறுவனங்கள், வணிக வியாபார மற்றும் மக்கள் கம்பனிகளின் சகல சட்ட நடவடிக்கைகளும் தொடர்பான சேவைகளும் சட்டமா அதிபரால் மேற்கொள்ளப்பட வேண்டியதாக அமைச்சரவையால் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதிலும் ஒரு சந்தர்ப்பத்தின் போது ஆணைக்குழு அவ்வாறு செயற்படாது தனியார் நிறுவனமொன்றை சட்ட நிறுவனமாக தேர்ந்தெடுத்து இதற்காக 2013 செப்தெம்பர் 13 ஆம் திகதி வரை ரூபா 242,130 தொகை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (உ) | பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் 2007 யூன் 12 ஆம் திகதிய 15/2007 ஆம் இலக்க சுற்றறிக்கை | வாகனக் கடன் வழங்குவது வர்த்தக வங்கியினூடாக மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஆணைக்குழுவின் 2013 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய ரீஆர்சீ/04/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி ஆணைக்குழுவின் நிதியிலிருந்து வாகனக் கடன் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) | (i) 2007 யூன் 12 ஆம் திகதிய 15/2007 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 2.2 (ஆ) மற்றும் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 7.4.1 ஆம் உப பிரிவு | வாகனக் கடன் வழங்கப்படுகையில் அறவிடப்பட வேண்டிய வட்டி தொடர்பாக திறைசேரியிலிருந்து ஆராயாது 4.2 சதவீத வருடாந்த வட்டி மாத்திரம் ஆணைக்குழுவால் அறவிடப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ii) | 1998 மார்ச் 18 ஆம் திகதிய 130 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சந்தையில் நிலவும் வட்டி வீதத்தின் படி கடனுக்கான வட்டி அறவிடப்பட வேண்டியதுடன் குறைவாக அறவிடப்பட்ட வட்டித் தொகை கணிப்பிடப்பட்டு ஆணைக்குழு கணக்குகளுக்கு எடுக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்திருக்கவில்லை. |

(எ) 1999 சனவரி 06 ஆம் திகதிய 81 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை — மீளாய்வாண்டின் போது ஆணைக்குழுவால் ரூபா 39,800,000 தொகை செலவிட்டு 02 ஜீப் வண்டிகள் கொள்வனவு செய்யப்படுகையில் திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2006 தேசிய கொள்வனவு வழிகாட்டிக் கோவை

| | | |
|---|---|---|
| (i) | 4.1.1 ஆம் பிரிவு | கொள்வனவு மேற்கொள்ளப்படுவதற்காக போதிய பாதீட்டு ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 5 தரவுக் களஞ்சியப்படுத்தல் இயந்திரங்கள், பாதுகாப்பு மென்பொருள், தரவு களஞ்சியப்படுத்தல் இராக்கை மற்றும் 2 எல்சீடீ மொனிடர்கள் கொள்வனவு செய்யப்படுவதற்காக மீளாய்வாண்டிற்காக ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இக் கொடுக்கல்வாங்கலின் போது கொள்வனவு நடவடிக்கைகள் 2012 ஆம் ஆண்டின் போது பூர்த்திசெய்யப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ள முடியாமையால் 2013 ஆம் ஆண்டின் போது கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டு திருத்தவேலைகளும் பராமரிப்புச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) | 8.9.1 (அ) ஆம் பிரிவு | பொருட்கள் வழங்கப்படுகையில் ரூபா 500,000 இற்கு மேற்பட்ட கொள்வனவிற்காக உரிய வழங்கல் கம்பனியுடன் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட வேண்டிய போதிலும் 5 தரவுக் களஞ்சிய இயந்திரங்கள் ரூபா 3,478,013 இற்கும், பாதுகாப்பு மென்பொருள் ரூபா |

| | | |
|---|---|---|
| | | 841,574 இற்கும் கொள்வனவு செய்யப்படுகையில் அவ்வாறு உடன்படிக்கைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகையால் கால தாமதத்துடன் உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் வழங்கல் தாமதத்திற்கான தாமதக் கட்டணம் அறவிடப்படுவதற்கு முடியாதிருந்தது. |
| | (iii) 3.5 ஆம் பிரிவு | 02 ஜீப் வண்டிகள் கொள்வனவு செய்யப்படுகையில் விலை மனுக் கோரல்கள் மேற்கொள்ளப்படாது தனியார் நிறுவனம் ஒன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்படுவதற்கு கொள்வனவுக் குழு தீர்மானித்திருந்தது. |
| | (iv) 2.8 ஆம் 3.3 ஆம் பிரிவு | உடல் நல நிலையத்திற்காக ரூபா 5,115,465 இற்கு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்படுகையில் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டிராததுடன் கொள்வனவிற்காக தேசிய ரீதியாக போட்டி விலை மனுக்கள் கோரப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | நிதி, திட்டமிடல் அமைச்சுச் செயலாளரின் 2011 திசெம்பர் 30 ஆம் திகதிய பீடீ/சீபீபீ/1/1/2012 இன் 04 ஆம் பந்தி | ஊழியர் ஒருவருக்காகச் செலுத்தப்படக் கூடிய மொத்த இடர் கடன் தொகை ரூபா இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ஆகக் கூடிய எல்லைக்கு வரையறுக்க வேண்டிய போதிலும் 13 சந்தர்ப்பங்களின் போது அவ் எல்லை மீறப்பட்டு ரூபா 1,890,040 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

## 2..4 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிராத கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக் குழுவின் 2007 யூன் 13 ஆம் திகதிய என்எஸ்சீசீ/3/ஏபீசீ/24 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் உரிய நிறுவகத்தால் தமது ஊழியர்களின் சம்பளத்தில் 10 சதவீதம் வீட்டு வாடகையாக செலுத்துவதற்கான அனுமதி

வழங்கப்பட்டிராத போதிலும் அவ் ஏற்பாடுகளுக்கு முரணாக ஆணைக்குழுவால் அதன் ஊழியர்களுக்காக வீட்டு வாடகையாக ரூபா 7,555,959 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஆணைக்குழுவின் ஊழியர்கள் வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட வீட்டுக் கடனுக்கான வட்டியில் 2/3 பங்கான ரூபா 3,486,312 தொகை 2013 ஆம் ஆண்டின் போது திறைசேரி அங்கீகாரம் இன்றி ஆணைக்குழுவால் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை, 2009 மே 26 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 39, 2000 சனவரி 11 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இல. பீஎப்/பீஈ/05 மற்றும் 1994 யூன் 04 ஆம் திகதிய பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை இல. 95 இற்கு முரணாக திறைசேரி அங்கீகாரம் இன்றி ஆணைக்குழுவின் தீர்மானத்திலும் உள்ளகச் சுற்றறிக்கையின் படியும் பதவியணிக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

(i) 2012 ஆம் ஆண்டின் வருகைக் கொடுப்பனவாக ரூபா 3,341,995 தொகை

(ii) மீளாய்வாண்டின் போது தொலைபேசிக் கொடுப்பனவாக ரூபா 1,763,533 தொகை

(iii) ஜீஎஸ்ஆர் செயற்திட்டத்தின் கடமைகளை மேற்கொள்வதற்காக 32 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 547,500 தொகை

(iv) 2012 ஆம் ஆண்டில் ஊக்குவிப்புப் படிப்பணமாக ரூபா 4,103,890 தொகை

(ஈ) தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக் குழுவின் 2007 யூன் 01 ஆம் திகதிய என்எஸ்சீசீ/3/ஏபீசீ/24 ஆம் இலக்க கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

(i) மேற்குறித்த கடிதத்தில் பதவிநிலையற்ற உத்தியோகத்தர்களுக்காக ரூபா 2,000 தொகையான மாதாந்த போக்குவரத்துப் படிப்பணம் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் மாதாந்தம் ரூபா 6,000 படி போக்குவரத்துப் படிப்பணம் செலுத்தப்பட்டிருந்தது. இதன் படி, மீளாய்வாண்டிற்காக அங்கீகாரமின்றி ரூபா 5,328,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) மேலும் மேற்குறித்த கடிதத்தின் படி, ஆணைக்குழு உத்தியோகத்தர்களின் மாதாந்த எரிபொருள் செலவினப் படி பிரதிப் பணிப்பாளரிற்கு ரூபா 5,000 ஆகவும் உதவிப் பணிப்பாளரிற்கு ரூபா 3,500 ஆகவும் வரையறுக்கப்பட்டிருந்த போதிலும் அவ் எல்லை கருத்திற்கொள்ளப்படாது பிரதிப் பணிப்பாளர் மற்றும் உதவிப் பணிப்பாளர்களுக்கான மாதாந்த எரிபொருள் கொடுப்பனவாக முறையே ரூபா 17,000 தொகையும் ரூபா 15,500 தொகையுமாக எரிபொருட் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் படி, அங்கீகாரமின்றி மீளாய்வாண்டிற்காக ரூபா 2,268,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(உ) 2009 மே 26 ஆம் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு 2009 மார்ச் 18 ஆம் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு முரணாக 2013 ஆகஸ்ட் 15 ஆம் திகதி ஆணைக்குழுத் தீர்மானத்தின் படி ஊழியக் குழுக்களுக்கு உரித்தாக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட சம்பளத் திட்டங்கள் திருத்தம் செய்யப்பட்டு கூடிய சம்பள முறையொன்று தயாரிக்கப்பட்டு சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தேசிய சம்பளக் கொள்கைக்கு முரணானதுடன் சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவால் உரிய சம்பளத் தொகுதிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட சம்பள அளவுத் திட்டங்கள் மீறப்படலாகும். மீளாய்வாண்டின் போது மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த சம்பள அளவு ரூபா 18,284,450 ஆகக் காணப்பட்டது.

(ஊ) ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த 05 பதவிநிலை உத்தியோகத்தர்களின் சம்பளம் தீர்மானிக்கப்படுகையில் 2009 மே 26 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 39 இன் ஏற்பாடுகள் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டில் ஆணைக்குழுச் செயற்பாடுகளிலிருந்தான விளைவுகள் ரூபா 47,367,276,561 மிகையானதுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 37,684,009,841 ஆனமையால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 9,683,266,720 அதிகரிப்புக் காணப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

ஆணைக்குழுவின் வருமானங்களும் செலவினங்களும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க அளவு முரண்கள் பின்வருமாறு அவதானிக்கப்பட்டது.

| விபரங்கள் | 2013.12.31 | 2012.12.31 | முரண் | முரண் சதவீதமாக |
|---|---|---|---|---|
| **வருமானம்** | ரூபா | ரூபா | ரூபா | |
| செயற்பாட்டு செயலாற்றல் அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,060,743,487 | 1,418,317,869 | 642,425,618 | 45.3 |
| வானொலி அலைவரிசைக் கட்டணம் | 8,226,962,705 | 6,532,360,699 | 1,694,602,006 | 26 |
| அலைவரிசைக் கட்டண முற்கொடுப்பனவு | 5,661,038,940 | 367,346,939 | 5,293,692,001 | 1441.1 |
| அதிர்வலையற்ற தொலைபேசிக் கட்டணம் | 24,910,893 | 20,054,795 | 4,856,098 | 24.2 |
| நானாவித வருமானம் | 1,991,028,937 | 826,946,847 | 1,164,082,090 | 140.77 |
| மொத்த வருமானம் | 49,202,055,538 | 38,603,814,047 | 10,598,241,491 | 27.45 |
| **செலவினம்** | | | | |
| ஒழுங்கமைப்புச் செலவினம் | 870,579,295 | 272,988,566 | 597,590,729 | 219 |
| அறவிடமுடியாக் கடன் | 83,367,539 | 5,783,816 | 77,583,723 | 1341.4 |
| தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | 421,995,689 | 227,945,588 | 194,050,101 | 85.1 |
| மொத்தச் செலவினம் | 1,834,778,977 | 919,804,206 | 914,974,771 | 99.3 |
| ஆண்டின் போதான வரிக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம் | 47,367,276,561 | 37,684,009,841 | 9,683,266,720 | 25.7 |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவால் அலைவரிசைப் பயன்பாட்டை ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அலைவரிசைத் தவறுகள் தொடர்பாக 45 பொது மக்களின் முறைப்பாடுகள் பெறப்பட்டிந்தன.

(ஆ) அலைவரிசை நுகர்விற்காகப் பயன்படுத்தப்படும் உபகரணங்களை நெறிப்படுத்தப்படுவதற்கு ஓர் தனியார் நிறுவனத்திற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவால் வழங்கப்பட்டிருந்த சக்திக்கு மேலாக மிகவும் கூடுதலாகப் பயன்படுத்தப்படுவதற்கான இயலுமை ஏற்படுவது போன்று இடமளிக்கப்பட்ட சந்தர்ப்பங்களிற்கு மேலாக தமக்கு தேவையான வகையில் மேலதிகமான உபகரணத் தொகுதியை நெறிப்படுத்த முடியும் என்பது அவதானிக்கப்பட்டது. அக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்காக ஆணைக்குழு முற்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சில நிறுவனங்கள் தமது கணக்காய்வு செய்யப்பட்ட இறுதிக் கணக்குகளை வழங்குவதில் தாமதம் ஏற்படுத்தியதன் காரணமாக ஆணைக்குழுவிற்குப் பெறவேண்டிய மொத்தத் தொகை எவ்வளவு என்பது குறித்து குறிப்பாக உறுதிப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) 2010 திசெம்பர் 27 ஆம் திகதிய 1986/4 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், 2011 சனவரி 01 ஆம் திகதி முதல் தொலைத்தொடர்பு செயற்பாட்டாளர்களால் செஸ் வரி செலுத்தப்பட வேண்டிய போதிலும் 05 நிறுவனங்களால் 2014 ஏப்ரல் 25 ஆம் திகதி

வரையிலும் நிலுவையாகக் காணப்பட்ட மொத்த செஸ் வரித் தொகை ரூபா 50,876,397 ஆகக் காணப்பட்டது. செஸ் வரி செலுத்தப்படாமை அல்லது தாமதமாகிச் செலுத்தும் செயற்பாட்டாளர்களுக்காக தண்டப்பணம் அறவிடப்படுவதற்கான சட்ட அதிகாரம் பெறும் முறை ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்டிராத காரணத்தால் தொலைத்தொடர்புகள் செயற்பாட்டாளர்களால் அறவிடப்பட்ட செஸ் வரித்தொகை ஆணைக்குழுவிற்கு செலுத்தப்படுவது தவறவிடப்பட்டிருந்தது. அனுமதிப்பத்திரம் பெற்ற ஒவ்வொருவரும் ஏற்ற வகையில் சட்ட அதிகாரத்தைப் பெறும் முறையை தொலைத்தொடர்புகள் அதிகாரச்சட்டத்திற்கு உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக 2011 யூன் 28 ஆம் திகதியும் 2012 யூன் 16 ஆந் திகதியும் எனக்கு அறிவித்திருந்த போதிலும் இது வரை அத்தகைய நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) அலைவரிசை வருமானம் அறவிட்டுக்கொள்வதற்காக முறையான நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டிராத காரணத்தால் அலைவரிசைக் கட்டணக் கொடுப்பனவு செலுத்தத் தவறியிருந்த சந்தர்ப்பங்களின் போது தண்டப்பணம் அறவிடப்படுவதற்கோ அல்லது சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கோ முறையான வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டின் போது விநியோகிக்கப்பட்ட விலைப்பட்டியலில் ரூபா 4,133,666 பெறுமதியான விலைப்பட்டியலிற்காக 2014 ஆம் ஆண்டின் ஏப்ரல் 29 ஆந் திகதி வரையிலும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் உரிய நிறுவனத்திற்கு விலைப்பட்டியல் வழங்குவதில் ஏற்பட்ட காலதாமதத்தின் விளைவாக கடந்த ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 130,544,231 தொகையான வருமானத்திற்காக மீளாய்வாண்டின் போது விலைப்பட்டியல் வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) வானொலி அலைவரிசைக் கட்டணத்தைச் செலுத்தத் தவறியமை தொடர்பாக மேலதிகத் தண்டப்பணம் அறவிடப்படுவதற்கு தொலைத்தொடர்புகள் அதிகாரச்சட்டத்தின் மூலம் ஆணைக்குழுவிற்கு அதிகாரமளிக்கப்பட்டிராத காரணத்தால் இது தொடர்பான சட்ட ரீதியான அதிகாரத்தைப் பெறுவதற்காக தொலைத்தொடர்புகள் அதிகாரச்சட்டத்தைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 1991 இன் 25 ஆம் இலக்க மற்றும் 1996 இன் 27 ஆம் இலக்க திருத்தப்பட்ட இலங்கை தொலைத்தொடர்புகள் அதிகாரச்சட்டத்தின் 22(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரத்தின் கீழ் அல்லாது வேறு எவரேனும் நபரால் இலங்கையில் ஏதேனும் வானொலி அலைவரிசை பயன்படுத்தப்படலாகாது. எவ்வாறெனினும், கம்பனி ஒன்று அனுமதிப்பத்திரமின்றி அலைவரிசையைப் பயன்படுத்தியிருந்த போதிலும் அதற்கு எதிராக ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) 2011 இன் 21 ஆம் இலக்க தொலைத்தொடர்புகள் வரி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், தொலைத்தொடர்பு செயற்பாட்டாளர்களால் 20 சதவீதமான தொலைத்தொடர்பு வரி சேகரிக்கப்பட்டு அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஆணைக்குழுவிற்குச் செலுத்தப்பட வேண்டிய போதிலும் 02 நிறுவனங்களால் அவ்வாறு கொடுப்பனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2012 ஆம் ஆண்டிற்காக தொலைத்தொடர்பு வரி செலுத்தும் ஓர் நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கு அறிக்கை கணக்காய்வாளர்களால் சான்றுறுதிப்படுத்தப்பட்டிராததுடன் 02 நிறுவனங்களால் 2012 ஆம் ஆண்டிற்காக இறுதிக் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆணைக்குழுவால் அவ் இறுதிக் கணக்குகள் பெறப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிராததன் காரணமாக அவ் ஆண்டிற்கு உரித்தான வரித் தொகையில் சரியான தன்மை தொடர்பாக திருப்திகொள்ள முடியாதிருந்தது.

(ஏ) அமுலாக்கச் செயற்பாட்டாளர் அனுமதிப்பத்திரத்தை மீட்கும் திகதி தாமதமடைந்து ஒரு வருடத்திற்கு அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் இரு தொடர்பாடல் செயற்பாட்டாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 101 மில்லியன் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்கு இணங்க உழைக்கும் போதே செலுத்தும் வரி உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட

வேண்டிய போதிலும் உத்தியோகத்தர்களிடமிருந்து கழிக்கப்படாது ரூபா 3,512,759 கூட்டுத்தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி ஆணைக்குழுவால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது

4.3 **சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

மீளாய்வாண்டின் பதவியணி உத்தியோகத்தர்களின் குடும்பங்களின் ஒன்று கூடல் மற்றும் சுற்றுலாவிற்காக தங்குமிட மற்றும் உணவிற்காக ரூபா 5,091,903 தொகையான செலவினம் ஆணைக்குழுவால் ஏற்கப்பட்டிருந்தது.

4.4 **நிதியின் குறைப் பயன்பாடு**

தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவால் 2003 ஆம் ஆண்டின் போது சேமிப்பு வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்த 420,000 அமெரிக்க டொலர்கள் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 532,111.45 அமெரிக்க டொலர்கள் அதாவது ரூபா 69,605,498.77 வரை அதிகரித்திருந்த போதிலும் மொத்தப் பணமும் கடந்த 10 ½ ஆண்டுகளில் எவ்வித பயன்பாடுமின்றி பேணப்பட்டிருந்தது.

4.5 **இனங்காணப்பட்ட நட்டம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க நிறுவக தற்காலிக மிகைப் பொறுப்பு நிதியத்தில் வைப்புச் செய்யப்பட்ட தொகையில் ரூபா 8,000,000,000 தொகை முதிர்வடைய முன்னர் திறைசேரியால் கழிவாக்கப்பட்டமையால் எஞ்சிய முதலீட்டுத் தொகையான ரூபா 285,642,376 தொகையும் ரூபா 325,812,879 தொகையுமான பெறவேண்டிய பங்கிலாப வருமானம் கிடைக்கப்பெறாது போயிற்று.

(ஆ) 2012 பெப்ரவரி 29 ஆம் திகதி வரை ஆணைக்குழுவிற்குரிய வாகனமொன்று அமைச்சரால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அக் காலப்பகுதியின் போது ஏற்பட்ட வாகன விபத்தினால் நட்டம் ஏற்பட்டிருந்தது. வாகனப் பழுதுபார்ப்பிற்காக ரூபா 625,409 தொகை ஆணைக்குழுவால் ஏற்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 452,377 தொகை மாத்திரம் காப்புறுதிக் கம்பனியால் மீளளிக்கப்பட்ட காரணத்தால் ஆணைக்குழுவிற்கு ரூபா 173,031 தொகையான நட்டம்

ஏற்பட்டிருந்தது. இந் நட்டத்திற்குப் பொறுப்பானவர்களிடமிருந்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.6 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

---

தாமரை கோபுரம் - பன்முறை ஒலிபரப்பு தொலைக்காட்சி மற்றும் தொலைத் தொடர்பு கோபுர நிர்மாணிப்பு

---

(அ) இந் நிர்மாணிப்புகள் அமைச்சரவை அங்கீகாரத்தில் சீனக் கம்பனி ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அக் கம்பனியின் வியாபார அனுமதிப்பத்திரத்தின் படி கம்பனியின் வியாபார நோக்கெல்லை பன்முறை ஒலிபரப்புக் கோபுர நிர்மாணிப்பு அல்லது பாரியளவு ஒப்பந்த நிர்மாணிப்பு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிர்மாணிப்புகள் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதி மற்றும் இதற்கு உரித்தான பூர்த்திசெய்யப்பட வேண்டிய வேலைப் பகுதியைக் காண்பிக்கும் சிக்கலான வழி சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் கடந்திருந்த 17 மாதங்களுக்கு உரித்தான நிர்மாணிப்பு முன்னேற்றம் பௌதீக மற்றும் நிதி ரீதியாக சமர்ப்பிக்கப்படுவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது. உடன்படிக்கையின் படி, ஒப்பந்தம் 912 நாட்களில் பூர்த்திசெய்யப்பட வேண்டியமையால் எதிர்பார்க்கப்பட்டவாறு பூர்த்திசெய்யப்பட வேண்டிய நாளிற்கு பணியை நிறைவேற்றுவதற்கான இயலுமையை பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது.

(இ) வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய காலம் 55 சதவீதத்திற்கும் மேல் கடந்திருந்த போதிலும் இக் காலப்பகுதியின் போது ஒப்பந்தக் கிரயத்திற்கான வேறுபாடு தொடர்பான அறிக்கை ஆலோசனைக் கம்பனி தயாரித்திருக்கவில்லை.

(ஈ) உடன்படிக்கையின் பிரகாரம், குறிப்பு "சீ" இல் குறிப்பிடப்பட்டவாறு உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு 05 மாதங்களுக்குள் விபரமான அளவைப் பத்திரம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 17 மாதங்கள் கடந்திருந்த போதிலும் அத்தகைய விபரமான அளவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.7 முறையான வகையில் கையேற்கப்படாத காணிகள்/ ஆதனங்களின் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படல்**

தாமரை கோபுரச் செயற்திட்டம் தேசிய முக்கியத்துவமுள்ள செயற்திட்டமாகக் கருதி நகர அபிவிருத்தி அதிகாரசபையால் உரிய காணிக்காக இது வரையில் செலவிடப்பட்ட கிரயம் மாத்திரம் அறவிடப்படும் அடிப்படையில் அக் காணி அவ் அதிகாரசபையால் இலங்கை தொலைத்தொடர்பாடல் ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்க வேண்டுமென 2011 திசெம்பர் 14 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானித்திருந்தது. இதற்கு முரணாக நகர அபிவிருத்தி அதிகாரசபையால் காணிக்குச் செலவிடப்பட்டிருந்த கிரயம் கணிப்பிடப்படாது மீளாய்வாண்டின் இறுதியில் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 1,800 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் மேலும் ரூபா 9,900 மில்லியன் தொகை செலுத்தப்பட உடன்பட்டிருந்தது.

**4.8 மனித வள முகாமைத்துவம்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவின் அங்கீகரித்த பதவியணியினர் 290 ஆக காணப்பட்ட போதிலும் உள்ளபடியான பதவியணியினர் 207 ஆகக் காணப்பட்டது. ஒப்பந்த அடிப்படையிலும் இரண்டாம் நிலை அடிப்படையிலும் 29 ஊழியர்கள் பதவியணிக்காக சேர்க்கப்பட்டிருந்த போதிலும் இதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஊழியர் வகை | 2013.12.31 இல் உள்ளவாறான பதவியணியினர் | | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான பதவிகள் |
|---|---|---|---|---|
| | அங்கீகரித்த | உள்ளபடியான | | |
| நிறைவேற்று/ பதவிநிலைத் தரம் | 62 | 28 | 34 | - |
| உதவிப் பதவியினர் | 182 | 109 | 73 | - |
| சிற்றூழியர் | 46 | 41 | 05 | - |
| இரண்டாம் நிலை அடிப்படையில் | - | 02 | - | 02 |
| ஒப்பந்த அடிப்படையில் | - | 27 | - | 27 |
| | 290 | 207 | 112 | 29 |

**4.9 வாகனப் பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தாமரை கோபுரச் செயற்திட்டத்தின் நிர்மாண மேற்பார்வை உத்தியோகத்தருக்காக ஒரு மாதத்திற்கு ரூபா 80,000 தொகைக்கு வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த வாகனத்திற்காக 2004 ஆகஸ்ட் 31 ஆம் திகதிய 353/(5) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நாளாந்த ஓட்ட அட்டவணை எழுதப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராத காரணத்தால் உரிய வாகனம் சேவையில் ஈடுபடுத்தப்படுவது தொடர்பாகவும் ஓடப்பட்ட கி.மீ. அளவு, ஓடிய நாட்கள் போன்றவற்றை உறுதிப்படுத்துவதற்கு முடியாமையால் இவ் வாகனம் வாடகைக்கு எடுக்கப்படும் நிலையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை**

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 – 2013 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டம் திருத்தப்பட்டிராததுடன் தற்போதுள்ள கூட்டிணைந்த திட்டத்தில் மனித வள நிர்வாகம், நிதி மற்றும் வழங்கல் போன்ற பிரிவுகளின் கொள்கை நடைமுறைகள் என்ன என்பது குறித்தும் ஆணைக்குழுவின் செயற்பாட்டு நடவடிக்கைகள் என்ன, அச் செயற்பாடுகள் யாருக்காக எக்காலப்பகுதியில் எவ்வாறு நிகழ்ந்ததென என்பனவும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. கடந்த 03 ஆண்டுகளின் செயற்பாட்டு நடவடிக்கைகள் மீளாய்வு செய்யப்பட்டு அதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. செயற்பாட்டுத் திட்டத்திற்கும் பாதீட்டிற்கும் இடையே தொடர்புகளை உருவாக்கும் வகையிலும் ஆணைக்குழுவின் தூரநோக்கையும் செயற்பணியையும் எய்துவதற்கு இயலுமானவகையிலும் மேற்படி கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2000 – 2001 ஆம் ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டத்தைத் தயாரிப்பதற்காக தனியார் நிறுவகமொன்றிற்கு ரூபா 22,231,205

தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் கூட்டிணைந்த திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை மேற்கொள்வதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதில் முன்னேற்றம் இருக்கவில்லை.

**5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

வருட ஆரம்பத்திற்கு முன்னர் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு எதிர்பார்த்த இலக்குகளை எய்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் குறித்த காலப்பகுதியில் எந்த அளவிற்கு திட்டமிடப்பட்ட இலக்குகள் எய்தப்பட்டன என்பது குறித்து கருத்திற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டமொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 கொள்வனவுகள் திட்டம்**

ஆணைக்குழுவால் மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் கொள்வனவுகள் திட்டமிடப்பட்டவகையில் மேற்கொள்ளப்பட்டிராத காரணத்தால் இது கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு**

ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்ட பாதீட்டு எதிர்வுகூறல்கள் உள்ளபடியான பெறுமதியுடன் ஒப்பிடப்படுகையில் பாரிய வேறுபாடுகளைக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அம் முரண் 4 சதவீதத்திலிருந்து 124 சதவீதம் வரையான வீச்சில் பரந்திருந்தது. இதன் படி மீளாய்வாண்டின் சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினம் சரியான முறையில் எதிர்வு கூறப்பட்டிராமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுச் சாதனமாக ஈடுபடுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

**5.5 ஆண்டறிக்கை சபையில் முன்வைத்தல்**

2012 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் இதுவரை முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான அவதானிப்புகள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் எனது விரிவான அறிக்கையின் மூலம் ஆணைக்குழுவின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட அவதானம் கோரப்படுகிறது.

(அ) பாதீடு
(ஆ) கூட்டிணைந்த திட்டம்
(இ) கடன்பட்டோர்
(ஈ) முதலீடு
(உ) கொள்வனவு
(ஊ) படிகளைச் செலுத்துதல்
(எ) ஒப்பந்த நிர்வாகம்

ஒப்பம் எச். ஏ. எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*Ms/v*

**www.trc.gov.lk** | dgtsl@trc.gov.lk

**இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு**

276 எல்விட்டிகல மாவத்தை கொழும்பு 8 இலங்கை
**தொ:** +9411 2689345/ 2689351/ 2689352 **பெக்ஸ்:** +9411 2689341